# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 30 திங்கட்கிழமை (13.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 199




09 போர்க்குற்ற நெருக்கடி ஆதரவுக்கு கையேந்தும் ஜனாதிபதி



18 ஈழத் தமிழருக்கு விடிவைத் தருவாரா ஜெயலலிதா...?



22 சர்வதேசத்தின் அனுமதியுடன் இலங்கை யுத்தம்



29 கிடைத்தது தொடர் வெற்றி

### இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்து

# தடுத்து வைக்கப்பட்டோர் விவரம் வவுனியா, கொழும்பு, பூஸாவில்

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கடிதத்துடன் செல்லுங்கள்

கொழும்பு,ஜூன்13

இறுதிக் கட்டப் போரின்போது படையினரிடம் சரண் அடைந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள், கைதாகி விடுவிக்கப்பட்டோர் குறித்த தகவல்களை அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

கொழும்பு, வவுனியா, பூஸா ஆகிய இடங்களில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தொடர்பு கொண்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விவரங்களை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பணிப்பாளர் இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மனைவி, கணவர், பிள்ளைகள், பெற்றோர் அல்லது சகோதர, சகோதரிகள் தாம் வசிக்கும் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது கிராம சேவகரின் கடிதத்துடன் மேற்கண்ட இடங்களிலுள்ள (31ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் மும்முரம்

## அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

அடுத்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படும். இவ்வாறு யாழ். தேர்தல்கள் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 19 உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். தேர்தல்கள் திணைக்களத்தால் உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், புதிய வாக்காளர் (31ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் 300 பேரின் நாடுகடத்தலை நிறுத்துக! பிரிட்டனிடம் ஐரோப்பிய தமிழர் பேரவை கோரிக்கை

### இல்லையேல் பாராதூரமான விளைவு ஏற்படும் என எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 13

பிரிட்டிஷ் அரசு உத்தேசித்திருக்கும் ஈழத்தமிழ் அகதிகளின் நாடுகடத்தலை நிறுத்துமாறு ஐரோப்பிய தமிழர் பேரவை அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

300 ஈழத்தமிழர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி ஒரே விமானத்தில் ஏற்றி நாடு கடத்தவிருக்கும் பிரிட்டன் அரசின் மனிதாபிமானமற்ற நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் -

இந்த எண்ணிக்கையில் எந்தவொரு நாடும் இந்த நூற்றாண்டில் நாடுகடத்தப்படவில்லை என்பதைக் சுட்டிக் காட்டுகிறோம் என்றும் பேரவை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக (31ஆம் பக்கம் பார்க்க)

## கட்டம் கட்டமாகத் தேர்தல்; கண்டிக்கிறது ஐ.தே.க

கொழும்பு, ஜூன் 13

அரசு கட்டம் கட்டமாக தேர்தல்களை நடத்துவதன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு பட்ட அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என ஐக்கிய தேசிய கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மெனிக்கின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு(32ஆம் பக்கம் பார்க்க)

## போரின் பின்னரான பிடியிலிருந்து இலங்கை இன்னமும் மீளவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 13

இலங்கை தொடர்ந்தும் யுத்தத்தின் பின்னரான பிடியில் இருந்து மீளவில்லை. நீண்ட காலம் குறித்து சிந்திக்காத அரசு ஒன்றே தற்போது ஆட்சியில் இருக்கிறது.

- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

யுத்தக்குற்றச்சாட்டுகள், தருஷ்மன் அறிக்கை, வெளிநாட்டு அழுத்தங்கள், தொழிற்சங்கப்(31ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் கொலை வழக்குகள் இழுத்தடிப்பில் இலங்கைக்கு 4ஆம் இடம்

ஜெனீவா, ஜூன் 13

ஊடகவியலாளர் கொலை தொடர்பாக இழுபறி நிலையிலுள்ள வழக்குகள் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தை தக்க வைத்துள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் கண்காணிப்புக் குழு, ஊடகவியலாளர்களுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் மற்றும் அது தொடர்பான விசாரணைகள், கொலை தொடர்பான விசாரணைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கையைத் தயாரித்து வெளியிடுகின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர் கொலை தொடர்பான 9 வழக்குகள் முடிவுறாமல் இழுபறி நிலையில் இருக்கின்றன. இதேவேளை, 13 நாடுகளில் இந்தத் தொகை 5இற்கு உட்பட்டுள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ஈராக் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## நிபுணர் குழு அறிக்கை குறித்தோ, தமிழக சட்ட சபை தீர்மானம் குறித்தோ இலங்கையில் பேசவில்லை

### இந்திய உயர்மட்டக்குழு தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 13

இலங்கையில் அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா தலையிடாது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாகவும் தமிழக சட்டசபையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரும் தீர்மானம் குறித்தும் எமது இலங்கை விஜயத்தின்போது இலங்கை அரசுடன் பேசவில்லை.

- இவ்வாறு இலங்கை சென்று திரும்பிய இந்திய உயர்மட்டக் குழு இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன், பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் ஆகியோர் அடங்கிய இந்திய உயர்மட்டக் குழு இலங்கைக்கு இரண்டு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டுவிட்டு இந்தியா திரும்பியபோது ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுகளின்போது வடக்கு இராணுவ மயப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது காணாமல் போனோர் தகவல்களை வழங்குவதும், வடக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதுமே உடனடித் தேவையாகும் என சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார்.

(ஐ-சி)

### ஊர்காவற்றுறையில் நேற்றிரவு

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் குமரனின் வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் குமரன் என்பவரின் வீட்டிலிருந்து ஆயுதங்கள் நேற்றிரவு 8.30 மணியளவில் மீட்கப்பட்டன என்று பலாலி ஊடகப் பிரிவு தெரிவித்தது.


பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் படையினர் பிரஸ்தாப நபரின் வீட்டில் நேற்றிரவு 8.30 மணியளவில் தேடுதல் நடத்தினர் என்றும் -

அந்தத் தேடுதலின் போது ரி 56 (32ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

# வீதியில் காயங்களுடன் கான்ஸ்டபிளின் சடலம்; கிளி.,உமையாள்புரத்தில் நேற்றுப் பரபரப்பு!





கிளிநொச்சி,ஜூன்13

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் ஒருவரின் சடலம் காயங்களுடன் உமையாள் புரம் வீதியோரத்தில் மீட்கப்பட்டுள்ளது.

பல்லேகல என்ற இடத்தைச் சேர்ந்த ஆனந்தசமரக்கோன் (வயது 41) என்ற கான்டபிளே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் ஏ9 வீதியில் உரசல் காயங்களுடன் சடலம் ஒன்று இருப்பதைக் கண்ட பொதுமக்கள் அது குறித்து தகவல் தெரிவித்ததை அடுத்து பிரதேச கிராம அலுவலரும், கிளிநொச்சிப் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அங்கு நடைபெற்ற விசாரணைகளின் போது கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தசேர்ந்த குறித்தபொலிஸாரின் சடலமே அதுவென அடையாளம் காணப்பட்டது. எனினும், இவரின் மரணத்துக்கான காரணம் விசாரணையின் போது தெரியவரவில்லை. பின்னர் மேலதிக விசாரணைகளுக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் பொலிஸாரின் சடலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ந-6)

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம்,ஜூன்13

ஈரத்துவாயைக் கட்டியபடி தொலைக்காட்சி வயரைக் கழற்ற முயன்ற போது மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் முற்பகல் நடைபெற்றது.

இதில் கொக்குவில் மஞ்சவனப்பதியைச் சேர்ந்தவரும், உதயனின் வவுனியா, பண்டாரிக்குளம் பிராந்தியச் செய்தியாளருமான வைரமுத்து தயாமோகன்(வயது 38) என்பவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

வவுனியா வைத்தியசாலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றும் தயாமோகன் வார இறுதி ஆகையால் வீடு வந்திருந்தார். இதன்போது நேற்று முற்பகல் அவர் குளித்துவிட்டு ஈரத்துவாயுடன் வீட்டின் முன்பக்கம் வந்தார். அப்போது அவரது பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தனர். இதனால் அவர்களின் கற்றலுக்குத் தொலைக்காட்சி இடையூறாக இருக்கும் என்று எண்ணி அதன் வயரைக் கழற்ற முயன்றுள்ளார். இதன்போது திடீரென மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மரண விசாரணை அதிகாரி மு.திருநாவுக்கரசு விசாரணை களை மேற்கொண்டார். பின்னர் இவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இவர் வவுனியா பண்டாரிக் குளம் பகுதியில் உதயனின் பிராந்தியச் செய்தியாளராகச் சிறப்பாகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்தவர்.(ந-15-78)

# பாப்பாமோட்டையில் வாகனம் கவிழ்ந்தது உடல் நசுங்கி சாரதி அந்த இடத்தில் பலி

மன்னார்,ஜூன்13

மன்னார் பாப்பாமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் மரணமானதுடன் மேலும் இருவர் படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்றது.



மன்னாரில் இருந்து பரப்புக்கடந்தான் நோக்கி வந்து கொண்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பிக்அப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தலைகீழாகக் கவிழ்ந்தது. இதன்போது வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியான ரம்புக்கமவைச் சேர்ந்த மொஹான் சமிந்த(வயது 28) சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கிப் பலியானார்.

வாகனத்தில் பயணித்த காமினி (வயது 30), மலிங்க அசங்க வயது(26) ஆகிய இருவரும் தலை, தோள்மூட்டு ஆகியவற்றில் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர். (த-10)

# நகரில் மீட்கப்பட்ட இரு சைக்கிள்கள் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்ஜூன்13

யாழ். நகரப் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்ட இரு சைக்கிள்கள் யாழ்.நீதிமன்றத்தில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

5706166 இலக்க லுமாலா சைக்கிளும் 55253633 இலக்க லுமாலா சைக்கிளும் யாழ். நீதிமன்றத்தில் உள்ளன என்றும் -

சைக்கிள் உரிமையாளர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் சமுகமளித்து சைக்கிளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ஐ)

# கிளிநொச்சியில் செலான் வங்கிக் கிளை இன்று திறப்பு

கிளிநொச்சி,ஜூன்13

செலான் வங்கிக் கிளிநொச்சிக் கிளை இன்று காலை 8.30 மணிக்கு ஏ-9 வீதியில் புதிய இடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

செலான் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் கலாநிதி பத்மநாதன் நிரஞ்சன், பிராந்திய முகாமையாளர் விஜயநாதன் சிவகரன் ஆகியோர் கிளையைத் திறந்துவைப்பர்.

கிளிநொச்சி மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதுடன் அவர்களின் வாழ்வை அபிவிருத்தி செய்யவும் செலான் வங்கிக் கிளை பாடுபடும் என வங்கி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# உடுவில் மகளிர் கல்லூரியில் சுழலும் சொல்லாடும் களம் புதனன்று!

மருதனார்மடம்,ஜூன்13

உடுவில் மகளிர் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்தும் கம்பராமாயணம் வாலிவதம் தொடர்பான சுழலும் சொல்லாடும் களம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

கம்பராமாயணத்தில் வாலி வதத்துக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் வாலி அல்ல சுக்கிரீவனே எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும், சுக்கிரீவன் அல்ல அனுமனே என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் அனுமன் அல்ல இராமனே எனக் கிளிநொச்சி மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் கு.றஜீபனும் வாதிடவுள்ளனர்.

தொடர்ந்து இராமன் அல்ல தாரையே என சரவணை நாகேஸ்வரி ம.வி ஆசிரியர் கு.பால சண்முகனும் தாரை அல்ல வாலியே என்னும் தலைப்பில் சுன்னாகம் ஸ்கந்தவரோதையக் கல்லூரி ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவமும் வாதிடவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு நடுவராக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் நோக்குநர்களாக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் நா.குழந்தைவேலு ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-55)

# நிகழ்வுகள்

## போஷாக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 'எல்லோருக்கும் போஷாக்கு உங்கள் செயற்பாட்டுடன்' என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ற-7)

## ஞானவிலாசம் நிகழ்வு

சுன்னாகம், ஜூன் 13

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள ஞானவிலாசம் தொடர் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி சு.முருகேநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முது [illegible] கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் பொது நூலகத்தால் வெளியிடப்படும் வெள்ளிமலை சஞ்சிகையின் 10 ஆவது இதழ் வெளியீடும், 'கடவுளுக்கு ஒரு கடிதம்' என்ற சிறப்புக் கவியரங்கமும் இடம் பெறும். (ற-38)

## மாதகலில் கருத்தமர்வு

வண்ணை, ஜூன் 13

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். சமாதான மற்றும் நல்லிணக்க நிலையத்தின் ஏற்பாட்டில் மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயத்தின் தரம் 11 மாணவர்களுக்கு 'வன்முறையற்ற தொடர்பாடல்' என்னும் பயிற்சிக் கருத்தமர்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலி விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பினார் கோத்தபாய; கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது இயந்திரக் கோளாறு!

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்குப் பயணம் செய்யவிருந்த ஹெலியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருந்தமை கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் பெரும் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது என்று இலங்கை விமானப் படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் கிளிநொச்சி சென்றிருந்தார்.

கொக்காவில் தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்றிருந்தனர்.

தெற்காசியாவில் மிக உயரமான இந்தத் தொலைத்தொடர்புக் கோபுரம் அடிப்படையில் இராணுவத் தேவைகளுக்கே பயன்படுத்தப்படவுள்ளது.

இலங்கை அரச தொலைக்காட்சி, வானொலிச் சேவைகளைத் தரமுயர்த்தவும் இது பயன்படுத்தப்படவுள்ளது. அதே வேளை எதிர்காலத்தில் இதனை வர்த்தகப் பயன்பாட்டுக்கு வழங்கும் திட்டமும் உள்ளது.

இந்தக் கோபுரத் திறப்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதியும் கோத்தபாய ராஜபக்ஷவும் புறப்பட முன்னரே ரணில் விக்கிரமசிங்கவின் தாயார் நாளினி விக்கிரமசிங்கவின் மரணச் செய்தி அவர்களுக்குக் கிடைத்தது.

மாலையில் இறுதிநிகழ்வுகள் நடைபெறவிருந்தமையால் ஜனாதிபதியு கோத்தபாய ராஜபக்ஷவும் அவசரமாகக் கொழும்பு திரும்ப முயன்றனர்.

அவர்களை ஏற்றிச் செல்வதற்காக முக்கிய பிரமுகர்களுக்கான இரண்டு ஹெலிகள் கிளிநொச்சியில் காத்திருந்தன.

அவற்றில் ஒன்றில் மஹிந்த ராஜபக்ஷ கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார்.

அவர் மாலை 5 மணியளவில் கொழும்பு திரும்பி நாளினி விக்கிரமசிங்கவின் உடலுக்கு இறுதிவணக்கம் செலுத்தினார். ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ வரவில்லை.

அவரும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்கவும் பயணம் செய்வதற்காக ஹெலியில் ஏறி அமர்ந்திருந்த நிலையில்- அதில் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கடைசி நேரத்தில் கண்டுபிடித்தார்.

இதனால் அதில் பயணம் மேற்கொள்வது ஆபத்தானது என்று விமானி கூறியதால், வேறொரு நிரந்தர இறக்கை விமானம் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு வரநேரிட்டது.

ஹெலியில் ஏற்பட்ட கோளாறு கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்படாது போயிருந்தால், நடுவானில் பாரிய விபத்து ஒன்றைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கும் என்று இலங்கை விமானப் படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



## நம்பிக்கையுடன் கரம்கொடுத்தல்...



கொழும்பு - மாத்தறை அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.

# கட்டுநாயக்க ஆர்ப்பாட்டத்தில் அசம்பாவிதம்; ஜே.வி.பி. தலையில் பழியைப்போட முயற்சி

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஆர்ப்பாட்டங்களின் போது இளைஞரொருவர் கொல்லப்பட்டமை உள்ளிட்ட அசம்பாவிதங்களை ஜே.வி.பி. கட்சியின் தலையில் போட அரசு முயற்சிக்கின்றது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாகக் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மற்றும் அதனையடுத்து நிகழ்ந்த இளைஞரொருவரின் கொலை என்பன குறித்து விசாரிப்பதற்கு ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்கள் சிலரைக் கைதுசெய்ய அரசு தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பியின் தூண்டுதல் காரணமாகவே பிரஸ்தாப ஆர்ப்பாட்டம் மற்றும் அசம்பாவிதம் என்பன நடைபெற்றுள்ளன எனவும் அரசு ஊடகங்கள் மற்றும் தனக்குச் சாதகமான தனியார் ஊடகங்கள் வாயிலாக பலமான பிரசாரமொன்றையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

மேலும் தற்போதைய நிலையில் கட்டுநாயக்க அசம்பாவிதங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் ஜே.வி.பி மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளைச் சேர்ந்த பதினைந்து பேர் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

இணையச் செய்திகள்

# துமிந்த ஒரு காட்டுப்பன்றி; சீறுகின்றார் பொன்சேகா

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு மிகவும் நெருக்கமான ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைக் காட்டுப்பன்றி என்று சரத் பொன்சேகா விமர்சித்துள்ளார். அண்மையில் சரத் பொன்சேகா ஊடகவியலாளர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொண்ட போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுடன் காமுகன் ஒருவர் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளார் என்று பெயரைக் குறிப்பிடாது துமிந்த சில்வாவை விமர்சித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது துமிந்த சில்வா கடுமையாக வார்த்தைகளால் சரத் பொன்சேகாவை அர்ச்சித்திருந்தார். தான் எவருக்கும் அஞ்சாதவன் என்றும் முடியுமாயின் சரத் பொன்சேகாவை தன்னுடன் மோதிப் பார்க்க வருமாறும் சவால் விடுத்திருந்தார். இதற்குப் பதிலளித்த பொன்சேகா, காட்டுப் பன்றிகளுடன் தனக்கு எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களும் இல்லை. நான் வீரர்களுடன் மட்டுமே மோதவிரும்புகிறேன் - என்றார்.

# சுகாதார அதிகாரிகளுக்கு இடையூறு செய்பவர்களை உடன் கைது செய்க!

## அமைச்சர் மைத்திரிபால பணிப்பு

சுகாதார அதிகாரிகளின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தும் நபர்களைத் தராதரம் பார்க்காது கைது செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பொலிஸாருக்கு அறிவுறுத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் பதில் பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்கக்கோனிடம் எழுத்து மூலம் தெளிவுபடுத்தவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வந்த சுகாதார அதிகாரிகளுக்கு சிலர் இடையூகளை ஏற்படுத்தியுள்ளனர்.

இதுதவிர, நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செல்லும் அதிகாரிகளைத் தூற்றுதல், அச்சுறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வகையிலான இடையூறுகள் ஏற்படுத்தப்படுவது தொடர்பாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கவுள்ளார் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் புலம்பெயர் செயற்பாடுகளுக்கு கே.பியை அரசு சாட்சியாகப் பயன்படுத்தும்

விடுதலைப்புலிகளின் முன்னாள் பிரமுகரும், ஆயுதக் கடத்தல்களுக்குப் பொறுப்பாக இருந்தவருமான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை தேவைப்படின் தாங்கள் அரச சாட்சியாகப் பயன்படுத்தப் போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரின் கீழ் சட்டரீதியாக ஓர் அமைப்பை பதிவு செய்து அதற்கு காணிகள் மற்றும் அன்பு இல்லம் போன்ற கட்டடங்களை இந்த அமைப்புக்குக் கொடுத்துள்ள இலங்கை அரசு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் தாய், தந்தை, சகோதரர் களற்ற போராளிகளை கே.பி. யிடம் கையளித்துள்ளது.

இவ்வாறு ஓர் அமைப்பாகச் செயற்பட்டு வரும் கே.பி. குறித்து நேற்றைய சண்டே லீடர் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெகலிய ரம்புக்வெல்ல தேவையேற்படின் கே.பி. அரச தரப்புச் சாட்சியாக மாற்றப்பெற்று விடுதலைப்புலிகளின் புலம்பெயர்ந்த நாடுகளிலான செயற்பாடுகள் குறித்த சாட்சியாக அவரை மாற்றும் எனத் தெரிவித்துள்ளார்.

மேற்குலகின் பரிந்துரையால், குறிப்பாக நோர்வே மற்றும் அமெரிக்கா, கே.பி. இலங்கை யில் சுயாதீனமான நடமாட விடப்பட்டுள்ளார் என்ற போதும் அவரால் நடத்தப்படும் நேட்டோ என்ற பொது அமைப்பு எந்த அளவில் சுயாதீனத்தைக் கொண்டுள்ளது என்பது இன்னமும் புலப்படாத ஓர் உண்மையாக இருந்து வருகிறது.

பல பெரிய உண்மைகளைக் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாகவே இது அமையும் எனவும் கருணா மற்றும் பிள்ளையான் கூட இதுவரை இன்னமும் நீதிமன்றில் நிறுத்தப்படவில்லை என்பதையும் சண்டே லீடர் பத்திரிகையும் அதன் நிருபரான ஈஸ்வரன் ரட்ணமும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைத்தாள் திருத்தும் பணியில் இருந்து விலகினர் பல்கலைக்கழக ஆசிரியர்கள்

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத் தாள்களை திருத்தும் பணியிலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் விலகிக் கொள்வர் என்பதை பரீட்சைகள் ஆணையாளருக்கு இவ்வாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதிலிருந்து விலகிக்கொள்ளும் உறுதியான தீர்மானத்தை சங்கத்தின் நிறைவேற்றுக்குழு, கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டதாக அச்சங்கத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

''அரசாங்க அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், போதுமான சம்பள உயர்வு கோரிக்கை தொடர்பாக திருப்திகரமான எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அதனால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதிலிருந்து விலகுவதன் மூலம் எமது தொழிற்சங்க நடவடிக்கையை வலிமையாக்கத் தீர்மானித்தோம்'' என அவர் கூறினார்.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்கவிடம் கேட்டபோது, பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்படி தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வர் என நம்புவதைத் தவிர எதுவும் கூறுவதற்கில்லை என பதிலளித்தார்.

''செப்டெம்பர் மாதம் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கும் எனவும் அதனால் பல்கலைக்கழக ஆசிரியர் தமது தீர்மானத்தை மாற்றிக்கொண்டு விடைத்தாள்கள் திருத்தும் பணியில் பங்குபற்றுவர்'' என நம்புகிறோம்' என அவர் கூறினார்.




கெருடாவில், ஜூன் 13
கெருடாவில் கோட்டைச் சீமாமுத்து மாரி அம்பாள் ஆலயத்தின் குளிர்த்திப் பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து குளிர்த்திப் பொங்கலும் இடம் பெறும். (ற-256)

* **

கிளிநொச்சி, ஜூன் 13
கிளிநொச்சி மாவட்டம், பூநகரி செல்லையாதீவு முத்து வைரவர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ற-406)

***

யாழ்ப்பாணம், ஜூன் 13
அராலி வடக்குமயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம் - உபவிடுதிக் காப்பாளர் - பெண்

தகைமைகள்:

- க.பொ.த சாதாரண தரத்துக்குக் குறையாத கல்வித் தகைமை
- வயதெல்லை 30-60
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழி காட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.

ஊதியம் திட்டம்: 7700 - 6×225+10×255-11,600/=

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 22.06.2011

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/816)

கே.வி.குணசேகரம்,
செயலாளர்.


# பளை, மாசார் பிரதேசத்தில் ஓகஸ்ட் முதல் பாடசாலைகள் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பளை மற்றும் மாசார் பிரதேசத்தில் உள்ள இரு பாடசாலைகளையும் ஓகஸ்ட் முதல் வாரத்தில் மீள இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் பளை மத்திய கல்லூரி, மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பவற்றின் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்றதும் மாணவர்கள் கற்கக் கூடிய சூழலில் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஜ-313)

# 'கொங்கிறீட்' வீதியாகும் நாகவிகாரை வீதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

நயினாதீவு இறங்குதுறையில் இருந்து நாகவிகாரைக்கு செல்லும் வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் இந்த வீதி புனர் நிர்மாணம் செய்யப்படுகின்றது.

இந்த வீதி புனரமைப்புக்கென தென் பகுதியில் இருந்து கொங்கிறீற் கற்கள் பெருமளவில் எடுத்து வரப்பட்டுள்ளன.

# மாடு முட்டியதில் வயோதிபர் மரணம்

தென்மராட்சி, ஜூன் 13

மாடு முட்டியதில் காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

கடந்த திங்கட்கிழமை மேய்ச்சலுக்கு கொண்டு செல்வதற்காக அவிழ்த்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென மாடு நெஞ்சிலும் கழுத்திலும் தாக்கியது.

உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி கடந்த புதன் கிழமை மரணமானார்.

மீசாலை வாகையடியைச் சேர்ந்த மூத்ததம்பி சண்முகம் (வயது 70) என்பவரே மரணமானவராவார். (த-207)


சிவமயம்

## பிறந்தநாள் வாழ்த்து 13.06.2011 திங்கள்
## ஏழாலை வடக்கு அருளம்பலம் அன்னலட்சுமி அகவை 75 நிறைவு விழா



அன்னலட்சுமி அவர்கள் எங்கள் அன்பு அக்கா
அன்புக்குப் பொருள் சொன்ன அருமை அம்மா
அருள் வழி பேணிடும் ஆசைப் பேர்த்தி ஆனவர்
ஆதரவான பண்புயர் உறவுப் பாலம் இவர்
ஆலங்காடன் அருளும் அருள் ஞானவைரவர் அருளும்
அகவை எழுபத்தைந்து வரைபெற்றது போலவே என்றும்
ஆயுட்பலம், அருட்பலம் அனைத்தும் பெற்று
ஆயிரம் பிறைக்கு மேலாய் அழகான அன்னமாய் வாழ்க.

என்றே அகமகிழ்வாய் வாழ்த்துபவர்கள்

சகோதரர்கள்: பரந்தாமன் - சந்திரிக்கா
ஜானகி - ஸ்ரீரங்கன் (கனடா)

பிள்ளைகள்: செல்வேன் - றெஜினா - சுவிஸ்
சோபிதா - பாஸ்கரன் - வவுனியா

பேரப்பிள்ளைகள்: கஜன் - பிரணவி, பிரணவன், உமா, பார்த்தீபன், சுஜானி, ஹரிஸ், அனுஷன், கலாதீபன், கார்த்திகாயினி.

பெறாமக்கள், ஏனைய உறவுகள்.




# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன்.13

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2404 ஆம் இலக்க கடந்த வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பில் "Λ" என்ற ஆங்கில எழுத்தும் 5/4/3/5/8/2 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

5/4/3/5/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/3/5/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/5/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 132 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,320 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,271 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது. 2 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,32,335 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 5/4/3/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/4/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 130 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

5/4/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,300 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,213 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"Λ" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,741 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

## உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 616
திகதி 2011/06/11

சுப்பர் இலக்கம்: 06
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 18 43 52 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 16,366,801.60 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 05 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 243 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 481 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 12,310 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 7,059 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 177,095 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 28,370 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.7,839,660.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிகட்டளைகளுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ. 16,743,153.60

தேசிய லொத்தர் சபை
இணையதளம்: www.nlb.lk

## ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் - 130
திகதி - 11.06.2011

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: D
அதிர்ஷ்ட இலக்கம்: 06
வெற்றி இலக்கம்: 8 7 5 8 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D 06 8 7 5 8 8 | ரூ. 19,351,595.00 | - |
| 1 பரிசு | 06 8 7 5 8 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 8 7 5 8 8 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 7 5 8 8 | ரூ. 10,000.00 | 32 |
| 4 பரிசு | 5 8 8 | ரூ. 1,000.00 | 318 |
| 5 பரிசு | 8 8 | ரூ. 50.00 | 3093 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 29833 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 8 7 5 8 | ரூ. 1,000.00 | 31 |
| 8 பரிசு | 8 7 5 | ரூ. 100.00 | 311 |
| 9 பரிசு | 8 7 | ரூ. 50.00 | 3116 |
| 10 பரிசு | D | ரூ. 20.00 | 12244 |
| 11 பரிசு | D 06 | ரூ. 100.00 | 1361 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,388,190.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.19,794,604.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பட்டதாரிகளின் வேலையில்லா பிரச்சினை தீர வழிபிறக்குமா?

வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை நாட்டில் வருடாந்தம் கிடுகிடுவென அதிகரித்து வருகிறது. 2007 ஆம் ஆண்டில் 11,930 ஆக இருந்த வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 28,720 ஆக உயர்ந்தது. வருடாந்தம் சராசரி ஆறாயிரத்தால் அந்த எண்ணிக்கை உயர்கிறது என்பதனை வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சர் லஷ்மன் செனிவிரத்னவால் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இவர்களில் முதல் கட்டமாக 15,000 பேருக்கு அரச துறையில் வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக, அமைச்சர் செனிவிரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாச கேட்ட வினா ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட புள்ளி விவரங்களும் அமைச்சரின் பதிலும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு, அவர்கள் பல்கலைக் கழகங்களில் பயின்று வெளியேறிய பின்னர் பல வருடங்கள் வேலைவாய்ப்பின்றிக் காத்திருக்க வேண்டியதைப் புலப்படுத்து கின்றன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற பின்னர் மூன்று அல்லது நான்கு வருடங்கள் பெரும் பணச் செலவில் பல்கலைக்கழகங்களில் பயின்று வெளியேறிய அவர்கள் நான்கு, ஐந்து வருடங்கள் கழிந்த பின்னரும் உரிய தொழில் வாய்ப்புகள் கிடைக்காமல் அல்லாடுகிறார்கள்.

ஒப்பீட்டளவில், இவர்களுடன் சக மாணவர்களாகப் பயின்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கணிசமான எண்ணிக்கையிலேனும் தனியார்துறைப் பணி மற்றும் சுயதொழில்களில் ஈடுபட்டு தமது பெற்றோர்களுக்குப் பாரமாக இல்லாமல் நாட்டுக்கும் தத்தமது குடும்பங்களுக்கும் வருமானம் தேடும் நிலையில் உள்ளார்கள். (எனினும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து வேலையற்று இருப் போரின் எண்ணிக்கை குறைவு என்று கூறுவதற்கில்லை.)

பல்கலைக்கழகங்களில் பயின்று பட்டதாரிகளாக வெளி யேறும் எல்லோருக்கும் உடனுக்குடன் அரச துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் எல்லா நாடுகளிலும் இல்லை. ஆனால், அவர்கள் பெற்ற கல்வி நெறிகளுக்கு ஏற்ற தொழில் துறைகளுக்கு நெறிப்படுத்தும் திட்டங்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளில் என்று மட்டுமன்றி முன்னேறி வரும் நாடுகள் பலவற்றிலும் உண்டு.

மேலைத் தேசங்கள் பலவற்றிலும் சிறுவயதிலிருந்தே மாணவர்களின் நுண்ணறிவு மற்றும் தொழில்திறன் பெறு மானம் என்பனவற்றுக்கு ஏற்ப பாடசாலைக் காலத்தில் நெறிப் படுத்தப்பட்டு, அதன் பிரகாரம் அவர்களுக்குத் துறைசார் கல்வி போதிக்கப்படுகிறது.

அதனால் அந்த நாடுகளின் மாணவர்கள் கல்லூரிகளை விட்டு விலகிய பின்னரோ, பல்கலைக்கழகங்கள் கற்றுச் சித்தி யடைந்த பின்னரோ குறிகிய காலத்தில் தொழில் வாய்ப்பைப் பெறும் வசதிகள் நிறையவே உண்டு.

எங்கள் நாட்டில் அந்தக் கல்வி முறை குறித்துச் சிந்திக்கப் படுவதாகத் தெரியவில்லை.

15,000 பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டாலும் கூட இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது. அரசாங்கம் கூறும் வேலைவாய்ப்புத் திட்டங் கள் சீராகச் செயற்படுத்தப்படுவதில்லை. அரசியல் கட்சிகள் மிகக் குறிப்பாக ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சியினர் தத்தமது ஆதரவாளர்களை வெகு சுலபமாக உத்தேச பதவி களில் அமர்த்திவிடுவார்கள்.

பல சந்தர்ப்பங்களில் புதிய பதவிகள் உருவாக்கப்பட்டுத் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என்று வாக்குறுதிகள் அள்ளி வீசப்பட்டாலும், அவை வெறும் புஷ்வானங்கள் ஆக மாற்றப் படுவதுண்டு.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், 2009 ஆம் ஆண்டில், கிராமங்களின் அபிவிருத்திக்கு வழிகோலுவதற்கு ''மக்கள் சபைச் செயலாளர்'' பதவிகள் உருவாக்கப்பட உள்ள தாகவும், வேலையற்ற பட்டதாரிகள் அவற்றுக்கு நியமிக்கப் படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்கள் கோரப்பட்டன; விண்ணப்பங்களுடன் 'கருத்திட்ட முன்மொழிவு'களை இணைத்து அனுப்புமாறு கேட்கப்பட்டது. ஆனால் மின்னாமல் முழங்காமல் அந்தத் திட் டம் கைவிடப்பட்டதாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது!

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உரிய திட்டங்களை வகுத்து இறுதிப் பரீட்சை முடிந்ததும் தொழில் சார் உள்ளகப் பயிற்சி (Internship) வழங்கும் திட்டம் ஒன்றை உயர் கல்வி அமைச்சு வகுத்துச் செயற்பட்டால், பல்கலைக் கழகக் கல்வியை முடித்த பின்னர் அவர்கள் வேலையின்றித் தவிக்கும் நிலையை நீக்க இயலும்.

அதன் பொருட்டு நாட்டின் அபிவிருத்துக்கு உரிய துறை களை இனங்கண்டு, பட்டதாரிகள் மற்றும் இளைஞர்களின் திறன் ஆற்றல்களை நெறிப்படுத்தி வளம் காண்பதற்கு மாகாண, மாவட்ட மட்டங்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் குறித்தொதுக்கப்பட வேண்டும். அக்கறை காட்டுமா அரசு!

# மனித உரிமை குழுவின் செப்ரெம்பர் மாநாட்டில் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை எடுக்கப்படும்

நேற்று 11-06-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதி யிருந்த அரசியல் விமர்சனக் கட்டு ரையிலிருந்து சில பகுதிகள்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த் தக வலயத்தில் பணிபுரிந்த ஊழியர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப் பட்டதையடுத்து உருவாக விருந்த கொந்தளிப்பான சூழ் நிலையை அரசு விரைந்து செயல்பட்டுத் தணித்துவிட்டது அதனால் நிலைமை மேலும் மோசமாகாமல் போனமை ஆறு தல் அளிப்பதாகும்.

நிலைமையை சமாளிக்க அங்கு இராணுவம் அனுப்பப் பட்டது. தனியார்துறை ஓய் வூதியச் சட்டம் தொடர்பாக எழுந்த பிரச்சினைகளின்போது பொலிஸார் நடந்து கொண்ட முறை பொதுவாகக் கண்டிக்கப் பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்கள் என்ற ஜனாதி பதியின் அறிவிப்பு அவர்களுக்கு முறையாக அறிவித்திருக்கப் படவில்லை.

பொலிஸார் அடாவடித்தனத் தில் இறங்கி, ஊழியர்களை வேலைத்தளத்தில் மட்டுமன்றி தெருவீதிகளிலும் வைத்துக் தாக்கியதுடன் இறுதியில் துப் பாக்கிப் பிரயோகம் செய்து ஓர் ஊழியரின் உயிருக்கும் உலை வைத்துவிட்டார்கள். இந்தச் செயல் களின் விளைவாக பொலிஸ்மா அதிபர் தம் பதவியையும் இழந் தார்.

சுதந்திர வர்த்தக வலயத் தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்த அரச தரப்பு அரசியல்வாதிகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத் தைக் குறைத்து தொழிலாளர் மத்தியில் அமைதியைக்காப் பதில் பொலிஸ்மா அதிபர் அதிக அக்கறை செலுத்தியிருந் திருப்பா ரேயானால் நெருக்கடி களை வெகுவாகக் குறைத் திருக்க முடியும். ஆனால் அரசி யல்வாதிகள் விடயத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளா விட்டால் தனக்கு ஆபத்து ஏற் பட்டுவிடலாம் என்று அவர் எண்ணியிருந்தார் போலும், என் றாலும் அதற்காக அவர் அதிக விலை கொடுக்க நேர்ந்து விட்டது.

கொலையுண்ட இளைஞ னின் மரணச்சடங்கின்போது நடக்கலாம் என்று எதிர்பார்க் கப்பட்ட எதிர்விளைவுகள் அதிக அளவில் இராணுவத்தினர் பிர சன்னமாய் இருந்தமையால் நடைபெறவில்லை. அவரின் சொந்த ஊரான மினுவாங் கொடையில் மரணச்சடங்கு கள் இடம்பெற்றன. கிராமத்த வர்கள் சடலம் வைக்கப்பட்டி ருந்த தேவாலயத்துக்கும் பின் னர் அடக்கம் நடைபெற்ற இடத்துக்கும் நடந்தே சென்றார் கள்.

மரணச்சடங்கின்போது எது வித கொந்தளிப்பும் ஏற்படா மல் பார்த்துக் கொண்டது மட்டுமன்றி கடந்த வார சம்ப வங்களுக்குக் காரணமாய் இருந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும் அரசு அங்கிருந்து வேறு இடங் களுக்கு இடமாற்றம் செய்தி ருந்தது. சுதந்திர வர்த்தக வல யத்தில் [illegible] நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமை மருதா னைச் சந்தியில் பிரதான எதிர் கட்சியான ஐ.தே.கவினர் ஆர்ப் பாட்டம் ஒன்றை நடத்தினார் கள்.

**முதலில் இராணுவத்துக்கே கோபுரம் பயன்படும்**

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வும் அவரது சகோதரர் கோத்த பாய ராஜபக்ஷாவும் கிளிநொச் சியில் ஒரு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றி ருந்தார்கள். தென்னாஸியா விலேயே மிக உயர்ந்த கோபுரம் என்று பெருமையடித்துக் கொள் ளப்படும் தொலைத் தொடர்பு கோபுரத்தின் திறப்பு விழா அங்கு நடைபெற்றது.

ஆரம்பத்தில் இந்தத் தொலை தொடர்புக்கோபுரம் இராணுவத் தேவைகளுக்கே பயன்படுத்தப் படவிருக்கின்றது. அரச தொலைக் காட்சிகள் வானொலி ஒலிபரப் புகளுக்கு பயன்படுத் தப்படும். பின்னர் காலப்போக்கில் வர்த் தகப் பணிகளுக்கும் கட்டணத் துக்கு வழங்கும் திட்டம் இருப் பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதனன்று ஐ.தே.க. தொழிற் சங்கமான ஜாதிக்க சேவக்க சங்கமயவின் மாநா டொன்றில் பேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அந்தக்கட்சியின் புதிய தொழிற்சங்கத்தலைவர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனாவை வரவேற்பதற்காக இந்தக் கூட் டம் நடைபெற்றது.

விக்கிரமசிங்க ஊழியர் சேம லாபநிதி மற்றும் ஊழியர் நம்

போது காயமடைந்த நூற்றுக் கணக் கானவர்களுக்கு இழப்பீடு வழங் கப்படவில்லை என்று மேலும் கூறினார். அடுத்த நாள் மருதானை ரயில் நிலையத் தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத் தின் போது பேசிய ரணில் விக் கிரமசிங்க இரத்தம் தோய்ந்த கை குட்டையொன்றைக் காட்டி இதுதான் இரத்தம் தோய்ந்த கைக்குட்டை - அடக்குமுறை யின் அடையாளம் என்று கூறி னார். முதல்நாள் கூறிய அதே குற்றச்சாட்டைச் குறிப்பிட்டுப் பேசிய அவர் இந்தப் பணத் தைக்காப்பாற்றிக்கொள்ள முயன்று தான் 22 வயதான றொஷான் சானக்க மரணமாகியுள்ளார் என்றார்.

போர் முடிந்து விட்டது ஆனால் நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்த மக்களின் எதிபார்ப்பு இந்தத் திட்டத்தின் மூலம் நொறுக்கப் பட்டுவிட்டது. பணக்காரர் களுத்து உயர்தர மாடிவீடுகளைக் கட்டு வதற்காக ஏழைகளின் வீடுகள் அழிக்கப்படுகின்றன. முன்னர் எல்லாம் முதலாளிகள்தான் ஏழைகளிடம் கொள்ளையடிக் கிறார்கள். என்று மார்க்ஸிய வாதிகள் கூறுவார்கள் இப் பொழுது ஏழைகளிடம் அரசு கொள்ளையடிக்கின்து என் பது தத்துவமாகும் என்று ரணில் கூறினர்.

அரசு ஐ.தே.க.வின் செயற் பாடுகளைவிட ஜே.வி.பியின் நடவடிக்கைகளையே மிக உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது. தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்தை அரசு இன்னமும் முற்றாகக் கை

## பிரிட்டனின் நிலைப்பாடு 14 ஆம் திகதி வெளியாகும்

பிக்கை நிதியம் ஆகியவை பற்றிப்பேசினர். தங்கள் கட்சி பதவியிலிருந்த பொழுது இந்த இரட்டை நிதித்தொகையானது நாட்டின் மிகப்பெரிய ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் அயிற்கென் ஸ்பென்ஸ் நிறு வனங்களின் திரட்டு நிதியை விட 15 மடங்கு பெறுமதி அதி கரித்திருந்ததாகவும், அந்தக் கட்சி தொடர்ந்து பதவியிலி ருந்திருக்கு மானால் அது 100 மடங்காக அதிகரித்திருக்கும் என்றும் குறிப்பிட்டார். இந்த நிதிகளை இப்போதைய அரசு ஸ்டொக் மார்க்கட்டுநில முத லீடு செய்கின்றது இந்தப்பணம் மீளப்பெறப்பட்டால் ஸ்ரொக் மார்க்கட் சீரழிந்து போகும் என்றார் ரணில். அரசு ஹொங் கொங் மற்றும் ஷாங்காய் வங்கி கூட்டுத்தாபனங்களில் இருந்து பெற்றுக்கொண்ட வர்த்தகக் கடன்களை திருப்பிச் செலுத்து வதற்காகவும் எரிபொருள் கொள் வனவு நட்டங்களை சரிசெய் வதற்கும் சர்ச்சைக்குரிய ஓய்வூ தியத் திட்டத்தை நிறைவேற் றிக்கொள்ள அரசு அவசரப்படு கிறது என்றார்.

அரசு தொழிலாளர்களின் பணத் தைத் திருடுகிறது. இந்தத் திருட் டைச் சட்டப்படியாக்குவதற்கு ஓய்வூதியத் திட்டம் அந்தப் பெயரில் கொண்டுவரப்படு கிறது என்று ரணில் குற்றஞ் சாட்டினார் 2,500 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று கூறப்பட்டமை அரச ஊழயர் கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக போராடிய

விட்டு விடவில்லை. அதனால் ஜே.வி.பியினர் தமது உறுப்பி னர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களை வைத்து என்ன செய்யத் திட்டமிடுகி றார்கள் என்பதை அரசு அவதா னித்து வருகிறது.

**ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டம்**

தற்பொழுது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாடு முடிவடைய இன்னும் சில நாள் களே இருக்கும் நிலையில்

**தொகுப்பு: கோகுலன்**

இலங்கை அரசுக்கு தற்காலிக ஆறுதல் வெற்றி ஒன்று கிடைத் திருப்பது தெளிவாகியுள்ளது. முன்பு எதிர்பார்க்கப்பட்டது போல் ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை இந்த மாநாட்டுத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக்கொள் ளப்படப் போவதில்லையென்று தெரிகிறது. அது அங்கீகரிக் கரிக்கப்பட்டிருக்குமானால் சர்வதேச மட்டத்தில் ஆழமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தி யிருக்கும். அதனால் தனிப் பட்ட நாடுகள் தடைகள் விதிக்க முயன்றிருக்கும் மற்றும் வேறு சர்வதேச சபைகளிலும் விட யம் விவாதத்துக்கு எடுக்கப் படக்கூடிய நிலைமை ஏற்பட்டி ருக்கும்.

இலங்கை தரப்பில் வெளி நாட்டு ராஜதந்திரிகளுக்கு நிபு ணர் குழுவின் அறிக்கை தொடர் பாக விளக்கமளிக்கப்பட்டுள் ளது. (30ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்வு பகுதிகளுக்கு மின்சாரம்; இணைப்புப் பணிகளில் தாமத நிலைமை

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இலவச மின்சார இணைப்புப் பணிகள் நிர்வாகச் சீரின்மையால் தாமதம் அடைந்து வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாணத்தில் குறிப்பாக மீள்குடியமர்வு செய்யப்பட்ட பகுதிகளில் இலவச மின்சார இணைப்புகளை வழங்க மின்சார சபை முன்வந்துள்ளது.

இந்த இலவச மின்சார இணைப்பை நடைமுறைப்படுத்தும் தலைமைக் காரியாலயம் அநுராதபுரத்தில் உள்ளதாலும், நிர்வாகத்தின் சீரற்ற செயற்பாடுகளாலும் இலவச மின்சார இணைப்பைத் துரித கதியில் நிறைவேற்றமுடியாத நிலையில் தாமதமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வடமாகாணத்துக்குரிய தலைமைக்காரியாலயத்தை யாழ்.மாவட்டத்தில் இயக்குவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பைப் பெற்றுத்தருமாறும் மின்சார சபை வட்டாரங்கள் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் தான் வடக்கின் வசந்தம் மூலம் இலவசமாக வழங்கப்படும் மின்சார இணைப்புகளை துரிதகதியில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கின்றனர். (எ-313)

# பாடசாலைகளுக்கு வாத்தியக் கருவிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கணினித்தொகுதிகள், இசைக் கருவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்திலுள்ள 100 பாடசாலைகளுக்குக் கொடுப்பதற்கென ஆயிரம் கணினித் தொகுதிகள், ஆயிரம் இசைக் கருவிகள் என்பன வந்து சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் இவற்றில் கணினிகள், பிறின்ரர்கள் மற்றும் பியானோ என்பன உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இவை வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இந்த வாரத்தில் இவை வழங்கப்படவுள்ளதாகவும் இவற்றின் மூலம் மாணவர்களின் கல்வியை மேலும் விருத்தி செய்யக்கூடிய அளவில் வேலைகளை இலகுபடுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# இரு தடவைகள் விபத்துக்குள்ளான கார்

தென்மராட்சி, ஜூன் 13

ஒரு கார் இருதடவைகள் விபத்துக்குள்ளாகிய சம்பவம் ஒன்று கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவற்குழியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் நாவற்குழி அரச களஞ்சியத்துக்கு முன்பாக எதிரே வந்த பேருந்து மோதியதில் காரின் முன்பகுதி பலத்த சேதங்களுக்கு உள்ளாகியது. அங்கு வந்த பொலிஸாரின் விசாரணை முடிவுற்றதும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸார் பணித்தனர். இதன் பிரகாரம் காரைச் சாவகச்சேரி நோக்கி செலுத்தி வந்தபோது அடுத்த விபத்து நடந்துள்ளது. அதாவது யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மினிபஸ் நாவற்குழி பனை அபிவிருத்திச் சபைக் கட்டடத்துக்கு முன்பாக அதே காரின் பின்பகுதியில் மோதி சேதப்படுத்தியது.

இருபக்கமும் சேதமடைந்த கார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் விடப்பட்டுள்ளது. (எ-207)

ஓய்வுநிலை...



சேவைக்குநன்றி: யாழ். வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்றுள்ள திருமதி அ.வேதநாயகத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வாழ்த்துப்பா வழங்குகிறார், 'விற்பன்ன வித்தகி' என்ற பட்டமும் இதில் வழங்கப்பட்டது.

# 'கூட்ட மண்டபம்' உரு மாறி கள்ளுத் தவறணையானது!

## வீதியால் செல்லும் மக்கள் அவலம்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

சுன்னாகம் கதிரமலை வீதிப் பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையால் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காங்கேசன்துறை வீதியிலிருந்து 30 மீற்றர் தூரத்துக்குள் வங்கிகள், பாடசாலைகளுக்கு அருகில் மக்கள் குடியிருப்புக்கள் செறிந்த பகுதியில் இந்தத் தவறணை அமைக்கப்பட்டுள்ளது.

'கூட்ட மண்டபம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தவறணையாலேயே இந்தப் பிரதேச மக்கள் பெருந் துன்பங்களை அனுபவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தவறணையில் மது அருந்துபவர்கள் வீதியை மறித்து நிற்பதாகவும் வீதியால் பயணிப்போரின் பயணத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவும் வீதியில் நின்று தினசரி சண்டை பிடிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தவறணையை அண்டிய பகுதியில் மூன்று வழிப்பறிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அத்துடன்-

இந்தப் பகுதி வழியாகச் செல்லும் பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் தவறணையை அண்டியுள்ள தனியார் காணிகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் கூட்டத்தினர் மதுவருந்திக் கும்மாளமடிப்பதாகவும் தட்டிக் கேட்பவர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் தொடர் ரோந்து நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு இத்தகைய சட்டவிரோத செயல்களைத் தடுக்க ஆவன செய்யும்படி அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-38)

# யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான தொலைத்தொடர்பு சேவை விஸ்தரிப்பு பணி

சாவகச்சேரி, ஜூன் 13

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான தொலைத்தொடர்பு சேவையை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நாவற்குழிச் சந்தியிலிருந்து கேரதீவு- சங்குப்பிட்டி வீதி வழியான ஏ-32 பாதையூடாக தொலைத் தொடர்புக்கான தூண்கள் நாட்டப்பட்டு வருகின்றன.

தற்பொழுது நாட்டப்படும் தூண்கள் கோயிலாக்கண்டியில் இருந்து கிழக்குப் புறமாகக் கேரதீவு கடற்பகுதிவரை நாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரெலிக்கொம் நிறுவன உத்தியோகத்தர் ஒருவரிடம் கேட்டபோது-

தொலைத்தொடர்பு சேவை கொழும்புக்கானது தற்பொழுது ஏ-9 கண்டி வீதி வழியாகத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல மற்றுமொரு கொழும்புக்கான இணைப்பை ஏ-32 இற்கு ஊடாக மன்னார் வரை ஏற்படுத்தி அங்கிருந்து கொழும்புக்குத் தொடர்பை ஏற்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலமாகத் தொலைத்தொடர்புத் தடங்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஏதோ ஒரு வழியாகத் தொடர்பை ஏற்படுத்த வாய்ப்பை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் எனத் தொரிவித்தார்.

அத்துடன் பூநகரி உட்பட அதனை அண்டிய பகுதிகளுக்கும் இந்தச் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இந்த தொலைத் தொடர்பு சேவையானது புதிய தொழில்நுட்பத்தில் ஒலியானது கதிர் வீச்சு அடிப்படையில் பைபர் முறையில் செயற்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-131)

# புனர்வாழ்வு நிலையங்களில் மருத்துவ வசதி பெறுவதில் சிரமம்

## முன்னாள் போராளிகளின் பெற்றோர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன்னாள் போராளிகள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பல இன்னல்களைச் சந்தித்து வருவதாக முன்னாள் போராளிகளின் பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ள செட்டிகுளம் மற்றும் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகள் நோய்களால் பாதிக்கப்படும் போது வைத்தியசாலைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை எனவும் இதனால் நோய்த் தொற்றுக்களால் முடங்கிக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

புனர்வாழ்வு நிலையங்களில் நோய்களின் தாக்கத்துக்கு ஆளாவோர் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பேருந்துகளில் வவுனியா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்படுவது வழமை.

ஆனால் தற்போது குறித்த பேருந்துக்குரிய சாரதி இல்லாத காரணத்தால் பேருந்தை இயக்கமுடியாத நிலையில் நோயாளர்கள் அண்மைக் காலமாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இதனால் புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகள் உடலாலும் மனதாலும் வேதனைப்படுவதாக மேலும் தெரிவிக்கின்றனர். (எ-313)

# மர விற்பனை நிலையங்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.மாவட்டத்திலுள்ள மரக்காலைகள், மரவிற்பனை நிலையங்கள் அனைத்தும் உடனடியாகப் பதிவு செய்யப் பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட வட்டவன அதிகாரி ஆர்.ரவிராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மரக்காலைகள், மரவிற்பனை நிலையங்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட வேண்டும் எனவும் பதிவுசெய்யப்படாது இயங்கும் நிலையங்களுக்கு எதிராக வட்ட வன திணைக்கள சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் தாம் விரும்பியபடி மரக்காலைகள், மரவிற்பனை நிலையங்களை ஆரம்பித்தனர். அவை பதிய வேண்டும் என்ற நடைமுறை பலருக்குத் தெரியாமல் இருக்கிறது. தற்போது யாழ்.மாவட்டத்தில் சுமுக நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இனியும் பதிவினை மேற்கொள்ளாது நிலையங்கள் இயங்குவதை அனுமதிக்க முடியாது

வட்டவன திணைக்கள சட்ட திட்டங்களுக்கு அமைவாகப் பதிவு செய்யாது இயங்கும் நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்- என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளப்பாவனை தொடர்பில் 'நெற்கபே' களில் கவனிப்பு அவசியம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

'நெற்கபே' களில் 18 வயக்குக் குறைந்தவர்கள் இணையத்தளம் பயன்படுத்துவது தொடர்பில் அதன் உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்கள் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அவர்களே பொறுப்பானவர்களாவர் என்று நல்லூர் பிரதேச சபையும் பிர தேச செயலகமும் தெரிவித்துள் ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விடுதிகள் மற்றும் 'நெற்கபே' களுக்கு நேரடியாகச் சென்றுபார்வையிட்ட பின்னர் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சிறுவர்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்ட இணையத்தளப் பகுதியில் இயங்கும் கணினி வெளிப்புறம் நோக்கியதாக வைக்கப்பட வேண்டும்.

கணினியைச் சுற்றிய அடைப்புகள் 4 அடி உயரத்துக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

அதற்கு மேற்பட்ட பகுதியாயின் தெளிவான கண்ணாடியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

விடுதி மற்றும் 'நெற்கபே குறித்த பரிசோதனைக் குழுவில் நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் கே.கமலேஸ்வரசர்மா நல்லூர் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.ஈ.எம். பிறிட்ஜத், கோண்டாவில் பொது சுகாதார பரிசோதகர் என். பிறேம்குமார், நல்லூர் பிரதேசசபை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி த. ஆனந்தறூபி, நல்லூர் பிரதேசசபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி க.ரம்மியா, நல்லூர் பிரதேச சபை வருமான பரிசோதகர் எஸ். பிறேம்குமார், நல்லூர் சுகாதார பணிமனை சிரேஷ்ட பொதுசுகாதார பரிசோதகர் எல். செபராசா, கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் கே.அனுசன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

நல்லூர் பிரதேச எல்லைக்கு உட்பட்ட 22 நெற்கபேகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் இப்பகுதிகளில் இயங்கும் விடுதிகளின் சமையலறை சுத்தமாக இருப்பது குறித்தும் மலசல கூடத்துக்கு தெளிகரு விகள் பாவிப்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

18 வயதுக்கு குறைந்தவர்களை தனியாக விடுதியில் தங்க அனுமதிக்காது பெற்றோருடன் உறுதிப்படுத்தி அனுமதிக்க வேண்டும் எனவும் தம்பதிகளாக விடுதியில் தங்க வருபவர்களை உறுதிப்படுத் தியபின் அனுமதிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

(எ-7)

## வலி.வடக்கில் 23 பயனாளிகளுக்கு சுயதொழில் கடனுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 13

வலி.வடக்குப் பிரதேசத்தில் 23 பயனாளிகளுக்கு சிறு கைத்தொழில் முயற்சிக்கடன் உதவி 'கெயார்' நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மாவைகலட்டி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 23 பயனாளிகளுக்கு 77 ஆயிரத்து 500 ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவைகலட்டி பகுதியில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்திருந்த மக்கள் அண்மையிலேயே மீள்குடியேற்றப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

(ம-313)

## பச்சிலைப்பள்ளியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 13

பச்சிலைப்பள்ளியில் மீள் குடியமர்ந்துள்ள மக்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை ஆயிரத்து 549 குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேச செயலரினால் தெரிவு செய்யப்படும் 200 குடும்பங்களுக்கு முன்னு ரிமை அடிப் படையில் மலசலகூட வசதி களை ஏற்படுத்த ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ள தாகவும் கூறப்பட்டது.

இதுதொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா பிரதிநிதி தெரிவிக்கையில்-

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் வாழும் 1549 குடும்பங்களுக்கே இதுவரை 20 ஆயிரம் ரூபா நிதி வீதம் வழங்கப்பட்டது.

விரைவில் மீளக்குடியமர்ந்த மிகுதிக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்றார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

(ம-302)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மணியந்தோட்டம் மற்றும் அரியாலை கிழக்கு நாவலடி, பூம்புகார் பகுதி மக்களுக்கு மே மாதத்துக்குரிய இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தை நடமாடும் சேவைமூலம் வழங்கினர். நிவாரணத்தை பயனாளிகள் பெற்றுக் கொள்கின்றனர்.

(ம-26)

## மண்டடைதீவில் வாரந்தோறும் ஆயுர்வேத மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் மண்டைதீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வேலணைப் பிரதேசசபைச் செயலாளர் கே. தவராசா தெரிவித்தார்.

தற்போது மண்டைதீவுப் பிரதேசம் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் பிரதேசம் ஆகும்.

இப்பிரதேச மக்களின் நன்மை கருதி ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் இடம்பெறுகிறது. பொது மக்கள் மேற்படி சேவையை முழுமையாகப் பயன்படுத்துமாறு வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை, மண்டை தீவு பிரதேச மக்களின் நன்மை கருதி பௌஸர் மூலம் தேவையான குடிதண்ணீர் வழங்கி வருவதாகவும் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

(ம-302)

## பச்சிலைப்பள்ளியில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதகதியில் இடம்பெறவுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி இருந்தது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வேம்படுகேணி, இத்தாவில், முகமாலை ஆகிய பிரதேசங்களில் முதற்கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் நடைபெறவுள்ளன.இந்தக் கண்ணி வெடி அகற்றும் பணிகளை 'ஹலோ றஸ்ட்' நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

(ம-313)

## அங்கீகரிக்கப்படாத மொழிபெயர்ப்பாளர்மூலம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள்

### வழக்குத் தாக்கல் செய்ய உதவத் தயார் என்கிறார் உதுல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அங்கீகரிக்கப்படாத மொழிப் பெயர்ப்பாளர்கள் மூலம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் தொடர்பில் உயர்நீதி மன்றத்தில் வழங்குத் தாக்கல்செய்வதற்கு கைதிகளுக்கு உதவத் தயார் என்று தெரிவித்துள்ளார் நாம் இலங்கையர் அமைப்புத் தலைவர் உதுல் பிரேமரட்ண.

தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு உதுல் பிரேமரட்ண அண்மையில் விஜயம் மேற்கொண்டார். அங்குள்ள கைதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். அந்தக் கலந்துரையாடலில் தமிழ் அரசியல் கைதிகளினால் மூன்று விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

தமிழ் அரசியல் கைதிகளிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெறும் பொழுது அரசினால் அங்கீகரிக்கப்படாத தமிழில் தேர்ச்சி பெறாத மொழிபெயர்ப்பாளர் களே பயன்படுத்தப்படுகின் றனர். இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென்று தெரிவித்த உதுல் பிரேமரட்ண அதற்குத் தமது அமைப்பு மூலம் முடியுமான உதவிகளைச் செய்வதாகத் தெரிவித்தார்.

மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கண்டி போகம்பரை சிறைச்சாலை வெலிக்கடைச் சிறைச்சாலை என்பவற்றில் சட்டத் தரணிகள் பற்றாக்குறை நிலவுவதாக கைதிகளினால் எடுத்துக் கூறப்பட்டது. இதற்கு தமது அமைப்பினால் சட்டத் தரணிகளின் உதவிக்கு ஏற்பாடு செய்து தருவதாக உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

மேலும் அரசியல் கைதிகளுக்கு சிறைச்சாலையில் நெருக்கடி நிலை நிலவுவதாகவும் மற்றும் சிங்கள கைதிகளுடன் கலந்து தம்மை விடுவதாகவும் கைதிகள் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாக அவர இதன் போது தெரிவித்தார்.

(ஒ-15)

## தாய், சிசு மரண வீதங்களில் முன்னிலையில் யாழ்.மாவட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மாவட்டம் தாய்,சிசு மரண வீதங்களில் உயர்ந்த நிலையில் உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கொழும்பு மாவட்ட குடும்ப நலச் சுகாதார உதவிப் பணிப்பாளர் சித்திரமாலினி டி.சில்வா.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற குடும்ப நல தாதியர்களின் நியமனம் தொடர்பான கலந்துரையாடலில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் தாய், சேய்நல சேவையை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இதற்கு குடும்ப நல உத்தியோகத்தர்கள் சேவைகளை வழங்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி சுகாதார சேவைகள் பணிமனையில் 12 குடும்பநல உத்தியோகத்தர்களுக்குத் தேவையுள்ள போதும் 3 உத்தியோகத்தர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர்.

இதனைப்போல் பல இடங்களில் உத்தியோகத் தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. குடும்பநல உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்ளும் வரை ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க சேவைகளை வழங்க வேண்டும்- எனவும் தெரிவித்தார்.

(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நெஞ்சை விட்டகலா ஐந்தாம் ஆண்டு நினைவுகள்

## சிவபாதம் சோதிலிங்கம்

திதி: பூர்வபக்க திரயோதசி

குவலயத்தில்
1943.04.06

சிவமயத்தில்
2006.06.09



அன்புற்றமைந்த அருமை மிகு குடும்பத்தில்
இன்புற்றிருந்த எங்கள் ஏற்ற மிகு தெய்வமே!
என்னுற்ற தென்று அறிந்து நலம் பேணமுன்பு
எமைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தீரே!
ஆண்டுகள் பல கோடி அவனிமிசை நீண்டாலும்
ஈண்டு உங்கள் நினைவுகள்
எமைவிட்டு நீங்காவே

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விதானை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[1908](41,27,25)

மனைவி,
பிள்ளைகள்

## பத்தாண்டு நிறைவு விழா

நாவற்குழி,ஜூன்13

அரசசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 10 ஆவது நிறைவு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு மகரகமவிலுள்ள இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் ஆர். எம்.விஜேரணதுங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினசராக நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் ரத்ன சிறி விக்கிரமநாயக்கவும், யாழ். மாவட்டப் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைமைப் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ந-121)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் நிர்வாகசபை உறுப்பினரும் திருப்பணிச்சபை உப செயலாளருமான மா. சுதர்சன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
மார்க்கண்டு கமலாதேவி

அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

யாழ். அத்தியடி
பிள்ளையார் கோயில். (சி/839)

நிர்வாக சபை,
திருப்பணிச் சபை

# மரண அறிவித்தல்

## திருமதி மார்க்கண்டு கமலாதேவி



யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு கமலாதேவி நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி மீனாட்சியம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், சுதர்சனின்(இயக்குநர், கலாலயா பயிற்சியகம்) அருமைத் தாயும், R.ரகுபதி (ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர், விவசாயத் திணைக்களம்), காலஞ்சென்ற திருமதி சாரதாதேவி நாகராஜாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரி ரகுபதியின் மைத்துனியும், அசோகன்(கனடா), காலஞ்சென்ற ஜனகன் மற்றும் ஜீவகனின்(கனடா) மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இன்று (13.06.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.108, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212227252, 0777110383

தகவல்:
மா.சுதர்சன்(சுதன்-மகன்)
(இயக்குநர், கலாலயா பயிற்சியகம், யாழ்ப்பாணம்)

(சி/840)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா தங்கம்



கோப்பாய் தெற்கு, ஆதித்தன் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கம் 10.06.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சிவபாக்கியம் (பிரான்ஸ்), குணசேகரம்(ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகம் (பிரான்ஸ்), புவனேஸ்வரி(ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியும், வீனஸ் சுகந்தினி(கனடா), சிவபாதம் சுதர்சினி (பிரான்ஸ்), சுதர்சன் நிருபா(பிரான்ஸ்), வாகீசன் சுபாஜினி(கனடா), றெஜிந்திரன் சுகிர்தினி(கனடா), கிருசாந், கிருசானி(ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வின், செல்வின்(கனடா), சௌமியா, இலக்கியா, ஐஸ்வரியா(பிரான்ஸ்), சுகானி, டிலான் (பிரான்ஸ்), ராகுல், ராகவி(கனடா), ஐஸ்வின், அஜேஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரையின் மைத்துனியும், சந்திரராசாவின்(பிரான்ஸ்) பெரியம்மாவும், திருஞானத்தின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணிக்கு கோப்பாய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆதித்தன் வளவு,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
ச.திருஞானம்
குடும்பத்தினர்.

# துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவன இயக்குநர் மார்க்கண்டு சுதர்சன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி மார்க்கண்டு கமலாதேவி

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாலயா.

ஆசிரியர்கள், மாணவர்கள்.

# தேவை

திருகோணமலையில் அமைந்துள்ள பிரபல பதிப்பகத்துக்கு அனுபவம் உள்ள ஓப்செட் மெசின் மைன்ரர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு-0773573072

# காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை கலட்டி வீதியில் (சங்கரத்தைச் சந்திக்கு அருகில்) 4 பரப்பு வீட்டுக்காணி, கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0773795291

# வாடகைக்கு உண்டு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 2 கடைகள் (Net Cafe வெற்றுக்கடை) வாடகைக்குண்டு

அதன் தளபாடப் பொருள்களும் விற்கப்படும். பேசித்தீர்க்கலாம்.

தொடர்புக்கு-
0212220212,
0776284313, 0779124047

# CORRECTION

This is regarding the advertisement published on 07.06.2011 in page 04 of the "Uthayan" for the Vacancy Announcement- **Camp Administrator Jeyapuram**. Please send your application to the following address-

**DANISH DEMINING GROUP,**
456, Main Street, Chundukuli, Jaffna.
e-mail: jafofficemgr@ddg.lk

(சி/837)

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் கதீற்றல் வீதி, 10A யில் அமைந்துள்ள (10) அறை மேலும் கீழுமாகக் கொண்ட, நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு- [illegible]

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2230 திகதி 11-06-2011

ஆங்கில எழுத்திற்கும் N

வெற்றி எண்கள் 35 46 67 70

போனஸ் இல: 18

ஜக்பொட் பரிசு ரூ. 15,388,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 201953 | 20/- | 4,039,060/- |
| 2 இல | 14445 | 100/- | 1,444,500/- |
| 3 இல | 302 | 1,000/- | 302,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7786 | 40/- | 311,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 576 | 1,000/- | 576,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 15,388,650/- | 15,388,650/- |
| 1 இல + போனஸ் இல | 9614 | 100/- | 961,400/- |
| 2 இல + போனஸ் இல | 453 | 500/- | 226,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 350 | 200/- | 70,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 235512 | | 25,067,550/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 316 | | 257,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 235828 | | 25,325,050/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

ரத்தரங் வரம

வெற்றி எண்கள் 02 21 24 25

ஆங்கில எழுத்திற்கும் M

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 315 | 500/- | 157,500/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுண் தங்கக்காசு 09 | - |

இந்த புதன்கிழமை தங்கக் காசுப் பொதி 11 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே: 2333546/7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியல்வாதிகளில் அநேகர் நாட்டை நாசம் செய்யவே பிறந்தவர்கள்

## பிரபல சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர



கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் இருக்கும் அரசியல்வாதிகள் நாட்டை நாசம் செய்யவே பிறந்தவர்கள். நாட்டுக்கு என்னதான் கெடுதி நடந்தாலும் பரவாயில்லை. தாம் மட்டும் நன்றாக இருந்தால் போதுமென்று நினைக்கும் பண்பைக் கொண்டவர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் பிரபல சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய அசம்பாவிதங்கள் மற்றும் ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையின் தாக்கம் என்பன குறித்து நேற்றைய சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள விசேட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையின் மூலம் தமக்குச் சாதகமான சூழ்நிலையொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா என்று கூட சில அரசியல்வாதிகளின் சிந்தனைகள் செயற்பட்டிருந்தன. அதில் ஆளும்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு என்ற பேதம் இருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்கள் மேற்கொண்டிருப்பதும் அப்படியான ஒரு சம்பவமாக நோக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# போர்க் குற்றம் தொடர்பான நெருக்கடி; ஆதரவைப் பெற ஜனாதிபதி ரஷ்யா பயணம்



கொழும்பு, ஜூன் 13

சர்வதேச ரீதியாக போர்க் குற்றம் தொடர்பான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கெதிரான செயற்பாடுகளுக்காக ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நாளை செவ்வாய்க்கிழமை ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார்.

சர்வதேச நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதும், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ரஷ்யத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதும்தான் அவரது இந்தப் பயணத்தின் பிரதான நோக்கமாக இருக்கும் என கொழும்பில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வீட்டுடன் தனியாகப் பேச்சுக்களை நடத்தவிருக்கும் மகிந்த ராஜபக்ஷ அதன்போது ஐ.நா.நிபுணர்குழு வெளியிட்ட போர்க்குற்ற அறிக்கை விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளித்தமைக்காக நன்றிகளையும் தெரிவிக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சென். பீற்றர்ஸ்போர்கில் நடைபெறவிருக்கும் சர்வதேச பொருளாதார மாநாட்டிலும் பங்குகொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உலகத் தலைவர்கள் பலருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பான அறிக்கையை ஐ.நா.நிபுணர் குழு வெளியிட்ட பின்னர் உருவாக்கியிருக்கும் நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது ரஷ்யத் தலைவருக்கும் ஏனைய நாடுகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி விளக்குவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தனியார் பஸ் கட்டணம் உயர்வு: பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை


கொழும்பு, ஜூன் 13

தனியார் பஸ் கட்டண உயர்வு சம்பந்தமாக தனியார் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளுக்கும், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்துக்குமிடையில் நடைபெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இது சம்பந்தமான இறுதிமுடிவை எடுக்க நாளை செவ்வாய்க்கிழமை இறுதிக்கட்டப் பேச்சுகள் நடைபெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தனியார் அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்ததாவது,

திருப்திகரமான பஸ்சேவையை நடத்துவதற்கு தற்போதுள்ள இடர்பாடுகள் பற்றி தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெளிவாக எடுத்துக் கூறியது. அதற்கமைய கட்டண உயர்வு பற்றிய இறுதித் தீர்மானம் நாளை எடுக்கப்படும் - என்றார். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், கட்டண உயர்வு ஏற்பட்டே தீருமென சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். (ச)

## பயிற்சி முடிந்து 'விடுதலை'.....



பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் படைமுகாம்களிலிருந்து வெளியேறும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பல முகாம்களில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை, சேருவிலவிலுள்ள படை முகாமொன்றில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களில் ஒரு பகுதியினர் அணிவகுப்பில் ஈடுபடுகின்றனர். (ச)

# ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் இனி வீடியோ மூலம் ஒளிப்பதிவு

இனிவரும் காலங்களில் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோரை வீடியோ ஒளிப்பதிவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

அதன் அடிப்படையில் நாடு முழுவதும் நடைபெறும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அதில் பங்குபற்றுவோர் இனிவரும் காலங்களில் பொலிஸ் திணைக்கள உதவியுடன் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்படவுள்ளனர்.

அதற்கென பொலிஸ் திணைக்களத்தில் விசேட வீடியோ ஒளிப்பதிவாளர்கள் அணியொன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களின் எதிரொலியாகவே அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. கட்டுநாயக்கவில் பொஸார் மீது தாக்குதலை மேற்கொண்டவர்கள் சிலர் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்களைக் கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பொலிஸ் நிலையங்களின் துப்பாக்கிகள் மீளப்பெறப்படும்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையின் சகல பொலிஸ் நிலையங்களினதும் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கிகளை மீளப்பெற பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் நிலவிய அச்சுறுத்தலான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டே பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து பொலிஸாருக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்தன. தற்போதைய நிலையில் அவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லையென்பதால் அவற்றை மீளப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் பொதுமக்களுடன் மிக நெருக்கமான உறவைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே பொலிஸார் வசமுள்ள துப்பாக்கிகளை மீளப்பெற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து ஓரிரண்டு துப்பாக்கிகள் மாத்திரம் சகல பொலிஸ் நிலையங்களிலும் வைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்படும். ஏனையவற்றை பொலிஸ் தலைமையகத்துக்கு ஒப்படைக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பொதுமக்கள் தொடர்புபடும் கடமைகளுக்குச் செல்லும் பொலிஸாருக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்லவும் அனுமதியில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தீவிரமாகப் பரவுகிறது டெங்கு நோய்; காய்ச்சல்பீடித்தால்வைத்தியரை நாடவும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு , ஜூன் 13

நாடுமுழுவதும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிவருவதால் காய்ச்சல் குணங்குறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை சந்தித்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த சில மாதங்களில் டெங்கு நோயினால் சுமார் 60 பேர்வரை உயிரிழந்துள்ளனர். அவர்களில் 20 சதவீதம் சிறார்களும், 40 சதவீதம் முதியவர்களும் அடங்குகின்றனர் என சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டெங்கு நோயினால் சுமார் 6,999 பேர் வரை பீடிக்கப்பட்டிருந்தனர். எனவே இந்த வருடம் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுக்கின்றது. (ச)

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு சமிக்ஞை மணி பொருத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 13

நாடளாவிய ரீதியிலுள்ள பாதுகாப்பற்ற சுமார் இருநூறு ரயில் கடவைகளில் அபாய அறிவிப்பு சமிக்ஞை மணிகளைப் பொருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் இது தொடர்பில் முன்வைத்த பிரேரணையையடுத்து அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என அரச ஊடகத்துறைப் பேச்சாளரான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். இதற்கென நூறு கோடி ரூபா செலவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

# அவசரகாலச் சட்டம்; ஏமாற்றுகிறது அரசு

## விஜிதஹேரத் எம்.பி.



கொழும்பு, ஜூன் 13

அவசர காலச்சட்டத்தைத் தளர்த்தப் போவதாகக் கூறி அரசு பொதுமக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் பெரும்பாலான ஊடகங்கள் வாயிலாக அவசரகாலச் சட்டத்தை தளர்த்தப் போவதாக அரசு மேற்கொள்ளும் பிரசாரங்களில் உண்மையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்தப் போவதாக ஊடகங்கள் வாயிலாக அரசு பிரசாரங்களை மேற்கொண்டிருந்தது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடொன்றின் போதும் அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல்ல இதுபற்றித் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அரசு அவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஒருபுறத்தில் பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டு மறுபுறத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக அவசரகாலச் சட்டத்தை நீடித்துக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் அவசரகாலச் சட்டத்தை நீக்கும் நோக்கம் அரசிடம் அடியோடு இல்லை என்பதையே அது புலப்படுத்துகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மூர் வீதிப் பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

## பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார் ஜூன் 13

மன்னார் மூர் வீதி காட்டுப் பள்ளிவாசல் பகுதியில் தொடர்ந்து குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் உள்ள தனியார் காணிகள் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இவற்றினுள்ளேயே குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகத் தெரிய வருகிறது. இந்தக் காட்டுப் பகுதிக்குள் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதோடு, பாலியல் நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

சில சமூகவிரோதிகள் முச்சக்கர வண்டிகளில் பெண்களை அழைத்து வந்து பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர். தாம் இது தொடர்பாக உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் இவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க வேறு இடங்களிலிருந்து மன்னாருக்கு வரும் இளம் பெண்கள் ஒருசில முச்சக்கரவண்டிச் சாரதிகளால் ஏமாற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இவற்றை உடனடியாக ஒழிக்க வேண்டுமெனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (க-601)

# 'முதல் கனவு' கவிதை நூல் வெளியீட்டு விழா

வவுனியா, ஜூன் 13

வவுனியாவைச் சேர்ந்த மனோகரன் பகீரதனின் 'முதல் கனவு' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

வவுனியா பழைய நகரசபை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமைதாங்கினார்.

வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். வரவேற்புரையை இரா. ஜெயமோகன் ஆற்ற ஆசியுரையை பிரம்ம ஸ்ரீ க.கந்தசாமிக் குருக்கள் வழங்கினார். நூலை வெளியிட்டு வைத்ததன் பின்னர் நூல் நயப்புரையை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வி.எஸ். சிவகரன் நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர் பகீரதன் நிகழ்த்தினார். (க-421)

# பயனாளிகள் தெரிவு

வவுனியா, ஜூன் 13

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் வன்னிப் பெருநிலப் பரப்பில் மேற்கொள்ளும் திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுடன் இணைந்து நடைபெறுகிறது.

மாற்றுவலுவுடையோர், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் பாடசாலை செல்லும் வயதில் பிள்ளைகள் இருந்தால் அத்தகைய வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சுயதொழில் உதவி மானியம் வழங்கல், மருத்துவச் செலவுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு, முச்சக்கரவண்டிகள், சக்கரநாற்காலிகளில் வீடுகளுக்குள் உட்பிரவேசிப்பதற்கு வசதி செய்வதற்கான கொடுப்பனவு போன்ற திட்டங்களுக்கே பயனாளிகள் தெரிவு நடைபெறுகின்றது.

பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக சேவை அதிகாரி, சிறுவர் நன்னடத்தை அதிகாரி, தலைமைப்பீட கிராம அதிகாரி ஆகியோர் இணைந்த குழு பயனாளிகள் தெரிவை மேற்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்ட பயனாளிகளின் நிலை குறித்து யுனிசெவ் அமைப்பின் வெளிக்கள அதிகாரிகள் நேரடியாகச் சென்றும் மதிப்பிட்டு வருகின்றனர்.

இதன் மூலம் புதிய பயனாளிகளை உள்வாங்கும் போது போதுமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடிவதாகவும் கூறப்படுகின்றது. (க-121)

## சிறந்த வெற்றி...



உழைப்புக்குப் பரிசு: கிளிநொச்சி மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரியின் சமூக நாடகக் குழுவினர் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-405)

# கிளி. இராணுவத்தினரின் தடையால் காணிகளுக்குள் செல்ல முடியாத நிலை

கிளிநொச்சி ஜூன் 13

கிளிநொச்சியில் உள்ள சில காணிகளுக்குள் காணிச் சொந்தக்காரர்கள் செல்ல முடியாத நிலை இன்னமும் தொடர்கின்றது.

முன்பு இராணுவத்தினரால் முகாம் அமைத்துத் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட காணிகளில் இருந்து தற்போது இராணுவத்தினர் வெளியேறியுள்ள போதிலும் அக்காணிகளுக்குள் உத்தரவின்றி உட்பிரவேசிக்க வேண்டாம் என்ற புதிய அறிவித்தல் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

மேலும் முன்பு இராணுவ முகாமாக இல்லாத சில வெறுங்காணிகளுக்குள்ளும் பிரவேசிக்கக் கூடாது என்ற அறிவித்தல் பலகைகள் நாட்டப்பட்டுள்ளதுடன் சில படையினரும் அக்காணிகளுக்குள் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதனால் காணிச் சொந்தக்காரர்கள் யுத்தம் முடிவுற்று மீள்குடியமர்வு இடம்பெற்று வருகின்ற இந்த வேளையிலும் கூடத் தமது காணிகளுக்குச் செல்ல முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் காணப்படுகின்றார்கள். (க-426)

# ஆனித் திங்கள் முழு நிலாக் கலைவிழா

கிளிநொச்சி, ஜூன் 13

வடமாகாணக்கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஆனித் திங்கள் முழு நிலாக் கலைவிழா நாளை மறுதினம் 15 ஆம் திகதி பி.ப.2 மணிக்குக் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலை விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளான கிளி நொச்சி மத்திய கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கண்டாவளை ம.வி, நாச்சிக் குடா அ.மி.க. பாடசாலை, தரும்புரம் இல. 1 அ.த.க.பா, கிளிநொச்சி இந்துக்கல்லூரி, அக் கராயன் ம.வி, கிளிநொச்சி ம.வி, பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-405)

# பொருளாதாரத் தடைத் தீர்மானம் இயற்றிய ஜெயலலிதாவை நாடாளுமன்றத்தில் பாராட்டினார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

இலங்கை அரசின் மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் ஒரு மனதாகத் தீர்மானம் இயற்றப்பட்டதற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நாடாளுமன்றத்தில் வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு அதற்கு எதிராக உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறுகின்ற பேச்சு தமிழ் மக்கள் மத்தியில் ஆரம்பத்தில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், இன்று கேலிக்குள்ளாகியுள்ளது. மக்கள் இதில் நம்பிக்கை இழந்துள்ளனர். ஆறு சுற்றுப் பேச்சுகள் முடிந்த நிலையிலும் தடுப்பிலுள்ளவர்கள் மற்றும் காணாமற் போனோர்களின் பெயர் விவரத்தைக்கூட அறிய முடியாமல் உள்ளதே இதற்குக் காரணமாகும்.

தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துவந்த பிரதேசங்க்ள் இன்று பறிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன

புத்த மதத்துடன் தொடர்பே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகள் பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டு புத்த விகாரைகள் கட்டப்படுகின்றன.

மக்கள் மீள்குடியமர்ந்த வடமாகாணத்தின் பெரும்பாலான காணிகளின் சொந்தக்காரர்களான தமிழ் மக்களில் பலருக்கு இன்னமும் தற்காலிக காணி அனுமதிப்பத்திரமோ அல்லது அவரவர் சொந்தக் காணிகளில் குடியேறவோ அரசால் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இதனைவிடப் பாரம்பரிய பூர்வீகத் தமிழர்வாழ் நிலப்பரப்புக்கள் பல ஆயிரம் ஏக்கர்வரை செட்டிகுளம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு, அம்பலவன் பொக்கணை, கேப்பாபுலவு, திருமுறிகண்டி, மன்னாரில் முள்ளிக்குளம், மடு போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினரால் அத்துமீறிக் கையகப்படுத்தப்பட்டு இராணுவ கேந்திர தளங்கள் அமைப்பதற்கும் இராணுவத்தினரின் குடும்பங்களை நிரந்தரமாகத் தங்கவைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. செட்டிகுளம் நலன்புரி நிலையத்தின் நான்கு வலயங்களை உள்ளடக்கிய சுமார் 1500 ஏக்கர் காணியை வழங்குமாறு இராணுவம் அதிகாரிகளைக் கட்டாயப்படுத்துகின்றது.

இதன் ஒரு வடிவமாக நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்கச்சாண் குளம் என்னும் தமிழ்க் கிராமம் 'கலாபோவசேவ' என்ற பெயரில் சிங்களக் கிராமமாக மாறியுள்ளது

மேற்கண்ட செயல்கள் அனைத்தும் சில உதாரணங்கள் மட்டுமே. யுத்தத்துக்குப் பின்னரே முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. இவையெல்லாம் களைந்தெறியப்படாதுவிடின் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி நாணயத்தாள் அச்சிட்ட இருவர் பொலிஸாரிடம் சிக்கினர்

கிளிநொச்சி, ஜூன் 13

போலி நாணயத்தாள்களை அச்சிடும் இயந்திரம், அதற்கான உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் என்பவற்றுடன் இரண்டு பேரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப் படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் இடம்பெற்றது. சி.பத்மநாதன் மற்றும் க.ஜெயவன் ஆகிய இருவருமே நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டவர்களாவர்.

வேறு இடத்தைச் சேர்ந்த குறித்த இருவரும் பரந்தன் பகுதியில் பால் கொள்வனவில் ஈடுபட்டு வருவதாகவும், இவர்களே போலி நாணயத்தாள்களை அச்சிட்டதோடு, அங்குள்ள வர்த்தக நிலையங்களில் அவற்றைக் கொடுத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிளிநொச்சி, புளியம் பொக்கணைச் சந்தியில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களில் போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களைக் கொடுத்து பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு போலி நாணயத்தாள்களைக் கொடுத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாகவும் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இருவருக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. பொலிஸார் இதுபற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-4-6)

# வவுனியா கிராமங்களில் இருள் சூழ்ந்த வீதிகள்

வவுனியா, ஜூன் 13

வவுனியாவிலுள்ள பல கிரா மங்களில் இன்னமும் வீதிவிளக்கு பொருத்தப்படாததால் இருள் சூழ்ந்து இரவு வேளை களில் பயணிப்போர் சிரமங் களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சிதம்பரபுரத்துக்குச் செல்லும் பாதை, கல்லாண்டகுளம், வேப்பங்குளம், உமா மகேஸ்வரன் வீதி ஆகிய பகுதிகளின் ஊடாக இரவு வேளைகளில் பயணம் செய்வது மிகவும் சிரமமாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் வாகனங்களில் செல்லுவோர் இரவு வேளைகளில் பெரிதும் சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது. சிலர் குழிகளில் விழுந்து எழும்பிச் செல்வதையும் காணமுடிகின்றது.

இதேவேளை வீதி விளக்கின்மையால் இருள் சூழ்ந்து காணப்படுவதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ள திருடர்கள் தமது கைவரிசையைக் காண்பித்து வருகின்றனர். இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் பயணம் மேற்கொள்ள வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

ஆகவே உரிய அதிகாரிகள் பொதுமக்களின் நன்மைகருதி உடனடியாக வீதி விளக்குகளை அமைத்துத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-421)

# முன்பள்ளிக்கு தளபாடங்கள்

அக்கராயன், ஜூன் 13

துணுக்காய், ஆலங்குளம் முன்பள் ளிக்குத் தளபாடங்கள் வழங்கப்பட் டுள்ளன.

இந்த நிகழ்வில் துணுக்காய் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது முன்பள்ளிக்குரிய தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் முன்பள்ளியின் நிர்வாக சபையும் அன்று தெரிவு செய்யப்பட்டது. இ.செல்வமனோகரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ச.அஞ்சுதா செயலாளராகவும், செ.கமலேஸ்வரி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். (க-410)

## உறவுகளின் பிணைப்பு...



மன நெகிழ்வு: திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் முத்துத்தம்பி வித்தியாலயத்தின் சார்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. (410)

# துணுக்காய வலயத்தில் இரு கட்டுமானப் பணிகள்

கிளிநொச்சி, ஜூன் 13

வடமாகாண விசேட அபிவிருத்தி நிதித் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் கல்வி வலயம் கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதன் பிரகாரம் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அத்துடன் பாலிநகர் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடத்தின் கீழ்த் தளத்தின் தொடர் வேலைகள் நடைபெறவுள்ளன.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் இதற்கான கேள்வி கோரலைத் தற்போது மேற்கொண்டுள்ளார். (க-121)

# சமூக சேவைகள் அதிகாரி மாவட்டச் செயலகத்தில் கடமை

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி கே.குணசிங்கம் வாரத்தில் இரண்டு நாள்கள் மாவட்டச் செயலகத்தில் கடமைபுரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் வாரத்தின் ஏனைய நாள்களில் மாவட்டத்தில் சமூக சேவை தொடர்பான வெளிக்கள வேலைகளையும், மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைக் கடமைகளையும் ஆற்றுகின்றார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருங்கிணைக்கும் பணிகளையும் இவர் மேற்கொண்டு வருகின்றார்.

இந்த மாவட்டத்தில் 20 வருடங்களாகக் கடமை புரியும் மூத்த அதிகாரியான இவர் சமூக சேவை தொடர்பாகப் பலவித பயிற்சிகளையும் நிறைவு செய்த ஒருவராவார். (க-121)

## அபிஷேகத் திருவிழா

வவுனியா, ஜூன் 13

வவுனியா ஆசிக்குளம் சக்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அபிஷேகத் திருவிழா கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

பழைமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான இந்த ஆலயத்தின் திருவிழாவானது பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இரவு நிகழ்வுகளாக முல்லைத்தீவு வட்டுவாகல் காத்தவராயன் குழுவினரின் நிகழ்வும் தினமும்காவடி, பாற்செம்பு போன்ற அடியவர்களின் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. (க-421)

# கணித ஆசிரியரின்றி இயங்கிவரும் கோட்டைகட்டியகுளம் பாடசாலை

அக்கராயன், ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டம் கோட்டை கட்டிய குளம் அ.த.க.பாடசாலையில் கணித பாடத்தைப் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லாததால் பெரும் நெருக்கடிக்குள் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்குச் சுமார் எட்டுக் கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள இரு கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் வருகை தருகின்றனர்.

இந்தப் பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் இயங்காததால் பாடசாலைக் கல்வியை நம்பியே மாணவர்கள் உள்ளனர். இவர்கள் வறிய நிலையில் இருந்தாலும் திறமை மிக்கவர்கள். கடந்த இரு வருடங்களில் இங்கே கற்ற ஐந்து மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். இந்த மாணவர்கள் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட யுத்த பின்னணியைக் கொண்டிருப்பதோடு இவர்களின் பெற்றோர் கல்வியறிவின்றியும் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் கணிதபாட ஆசிரியர் இல்லாததால் 40 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தூர இடப் பாடசாலைகளுக்கு மாறிச் சென்றுவிட்டனர். குடும்பத்தின் வறுமை காரணமாக இங்கேயே தொடர்ந்து கல்வி கற்றுவரும் மாணவர்கள் கணித ஆசிரியரின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.

இந்த நிலை தொடருமானால் பாடசாலை மூடு விழாக்காணும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

எனவே இந்தப் பாடசாலைக்குக் கணிதபாட ஆசிரிய[illegible] வேண்டுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-410)

# பொங்கும் எம் துயர் தீர்த்திடம்மா...!

வற்றாப்பளையில் வந்துதித்த
வற்றாத அருள் ஊற்றே
எங்கள் கண்ணகித் தாயே
பொங்கல் மடை பரப்பி
கண்ணகி வழக்குரை பாடி
கடல் நீரில் விளக்கெரித்து
பாக்குத் தெண்டி
காட்டா விநாயகரில்
தீர்த்தம் எரித்து
கோவலன் கூத்தாடி
வழுந்திட்டு வழி வழியாய்
வழிபடும் அடியவரின்
துயர் துடைத்து காப்பவளே
எத்தனை யுத்தமெனினும்
நிமிர்ந்து நின்றெமைக்
காத்தவளே - இன்று
கோபுரத்துடன்
எழுந்து நிற்பவளே
யுத்தம் முடிந்த பூமிதனில்
மீண்டும் உன் வாசலுக்கு
பொங்கி மடை பரப்ப
வந்துள்ளோம் - தாயே
பொங்கும் எம் துயர் தீர்த்திடம்மா
எங்கும் மங்கலம் நாட்டிடம்மா

வேல்நந்தன்.

(இன்று நடைபெறும் வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் மனித உரிமைக் கவுன்சிலின் அமர்வை இலக்கு வைத்து அரசின் செயற்பாடு

கொழும்பு,ஜூன்13

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலின் செப்ரெம்பர் மாத அமர்வை இலக்கு வைத்த செயற்பாடு களை முன்னெடுக்க அரசு தீர்மானித் துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் மனித உரிமைக் கவுன்சில் அமர்வின்போது பெரும்பாலும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை எடுப்பதற்கான வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றது. ஆயினும் செப்ரெம்பர் அமர்வில் இலங்கை சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை அமர்வின்போது மேற்கொள்ளப்பட்ட இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான பரப்புரைகள், சனல் 4 தொலைக் காட்சிச் சேவையின் விவரணத் திரைப்படம், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை என்பன தொடர்பில் மனித உரிமைக் கவுன்சில் உறுப்பு நாடுகள் இடையே இலங்கை தொடர்பில் ஓரளவு அதிருப்தியான போக்குத் தலைதூக்கியுள்ளது.

அதனைப் படித்துப் பார்த்துள்ள அரசு எதிர்வரும் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் அடுத்த அமர்வின்போது சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம் என்று எதிர்பார்க்கின்றது.

அதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தற்போது பிரச்சார செயற்திட்டமொன்றை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது.

அதற்கென இலங்கையின் நிலைமைகள் மற்றும் கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பான அறிக்கையொன்றை இரு அமைச்சுகளும் இணைந்து தயாரித்து வருகின்றன.

அந்த அறிக்கை பூரணப்படுத்தப் பட்ட பின்னர் ஐ.நா.மனித உரிமைக்கவுன்சிலில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளுக்கும் அமைச்சர்களைக் கொண்ட குழுக்களை அனுப்பி இலங்கைக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

# தீர்வு காணப்படாத வழக்குகள்: இலங்கைக்கு நான்காம் இடம்

கொழும்பு,ஜூன்13

ஊடகவியலாளர்கள் கொலை தொடர்பில் தீர்வு காணப்படாத வழக்குகள் பட்டியலில் இலங்கைக்கு 4ஆம் இடம் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகவியலாளர் கண்காணிப்புகுழு ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் மற்றும் அது தொடர்பான விசாரணைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

13 நாடுகளில் 5 வழக்குகளுக்கு உட்பட்டு காணப்படுவதாகவும் இலங்கையில் 9 வழக்குகள் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# வாக்குகளை எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடு

கொழும்பு,ஜூன் 13

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படுவதை கண்காணிப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகளுக்கு அதிக வாய்ப்பை வழங்கும் நோக்கில் வாக்குகளை எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

அதற்கமைய,வாக்குகள் எண்ணப்படும் நிலையமொன்றில் 6 ஆயிரத்து 500 வாக்காளர்களின் வாக்குகள் என்றவாறு வரையறுக்கப்படும் விதமாக வாக்குகளை எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் திருகோணமலை உதவித் தேர்தல் ஆணையாளர் நாலக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையைப் பின்பற்றுவதால் வாக்குகள் எண்ணும் நடவடிக்கைகளை விரைவில் முடித்துக் கொள்ள முடியும் என ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ச-22)

# வங்கியிடம் கடன்பெற கூட்டுத்தாபனம் தீர்மானம்

கொழும்பு,ஜூன் 13

பெற்றோலிய இறக்குமதிக்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் வங்கியொன்றில் இருந்து ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெறத் தீர்மானித்துள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து இந்தக் கடனைப் பெற்றுக்கொள் வதற்காக திறைசேரியின் உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள அங் கீகாரம் வழங்குமாறு பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சரவைக்கு பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

கூட்டுத்தாபனம் நிதி நெருக்கடியில் உள்ளதால் 180 நாள்களுள் திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் கீழ் இந்தக் கடன் கோரப்பட்டுள்ளது.

(ச-5)

# வாகனம் கொள்ளை; போலிப் பொலிஸார் கைது

கொழும்பு,ஜூன்13

பொலிஸ் அதிகாரிகள் வேடமிட்டு வாகனங்களை பரிசோதிக்கும் சாட்டில் பல வாகனங்களை கொள்ளையடித்த ஏழு சந்தேக நபர்களை குருணாகலை, நாரம்மல பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். கண்டி, தன்ஓவிட்ட, கனேமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்தச் சந்தேக நபர் கள் நாரம்மல, அவிச்சா வெல்ல ஆகிய பிரதேசங்களில் வாகனங்களை கொள்ளையடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தேக நபர்கள் கொள்ளையடித்த சில வாகனங்களையும் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.





கொறணா
சுடு நீர் சவர்
ஒரு வருட உத்தரவாதம்
ரூ- 5450/-
டயிட்டஸ் ஸ்டோர்ஸ்
கோட்டை 2439422 லிபர்ட்டி பிளாஸா


# சுகாதார அமைச்சர் கிழக்கு விஜயம்

மட்டக்களப்பு,ஜூன்13

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அம் பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளார்.

கல்முனையில் அன்றையதினம் நடைபெறவுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைத் திறப்பு விழா, அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கான விடுதிக் கட்டடத் தொகுதி திறப்பு விழா, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை அதி தீவிர கண் காணிப்புப் பிரிவு கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா ஆகிய இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தநிகழ்வில் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ். சுபையிர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

(ச)


ஈர விழிகளுடன் ஓராண்டு

திருமதி
சிவயோகம்
மயில்வாகனம்

மண்ணுலகம்
10.04.1946
விண்ணுலகம்
26.05.2010



திதி:பூர்வபக்க திரயோதசி

ஓடிப்போனதம்மா ஒருவருடம்
உங்களை மறந்ததேயில்லை ஒருநிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமானது எங்கள் இல்லம்
அன்பு தவழும் உங்கள் முகம் அதை
நினைக்கையில் துடிக்குது எங்கள் மனம்
எங்கெங்கோ இருந்தாலும் தினம் தினம்
விழிகள் நீர் சொரியுது குளம் குளம்
உங்கள் நினைவை சுமையாக்கிவிட்டு- நீங்கள்
பறந்து தங்கி விட்டீர்கள் விண்ணகம்
வந்தகடன் முடித்து வானுறையச் சென்ற
உங்களை என்றென்றும் நினைத்திருக்கும்

51, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல்
வளர்ச்சியடையக்கூடிய
NO.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள்
15.06.2011 விநியோகிக்கப்படும்.

* றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* துர்க்கா பாம், சுன்னாகம். (0779346599)
* ஜென்ஸி பாம், பருத்தித்துறை. (0773541771)
* P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* கோல்டன் பாம், கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 0776090926.



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.06.10

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2404

வெற்றி எழுத்து: A
வெற்றி எண்கள்: 5 4 3 5 8 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 5 | 4 | 3 | 5 | 8 | 2 | ரூபா. 17,235,096/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 4 | 3 | 5 | 8 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 3 | 5 | 8 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 3 | 5 | 8 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 132 |
| 4 பரிசுகள் | | | | | 5 | 8 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1320 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13271 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 132335 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 5 | 4 | 3 | 5 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | | 5 | 4 | 3 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 130 |
| 9 பரிசுகள் | | 5 | 4 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1300 |
| 10 பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13213 |
| 11 பரிசுகள் | A | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52741 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,989,270.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 இணையதளம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் என்ற எண்ணம் தொழிலாளர்களுக்கு இருக்கும்வரை கூட்டு ஒப்பந்தங்கள் நியாயமான சம்பளத்தைப் பெற்றுத்தராது

நுவரெலியா, ஜூன் 13

கிடைத்தது போதும் என்ற மனநிலையில் மக்கள் இருக்கும் வரை கூட்டு ஒப்பந்த தொழிற்சங்கங்கள் ஒருபோதுமே நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க மாட்டாது - என்று மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'யானைப் பசிக்கு சோளப் பொரி'யான கதையாகத் தான் சம்பளப் பேச்சு முடிவடைந் துள்ளது. ஏனைய தொழிற்சங்கங்கள் முடிந்தால் இதனைவிடவும் கூடுதலாக வாங்கிக் கொடுக்கட்டும் என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களினால் சம்பள உயர்வுப் பேச்சில் கலந்துகொள்ள முடியாது என்ற உண்மையை மக்கள் இப்போது புரிந்துகொண்டுள்ளனர்.

ஆனால், இந்த சம்பள உயர்வுக்கான போராட்டத்திலோ அல்லது இதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதிலோ தொழிலாளர்கள் ஆர்வமில்லாமல் இருந்ததை கூட்டு ஒப்பந்தக் கட்சிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டன.

தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தைப் பொறுத்தே அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி கழிக்கப்படும் நிலையில் இதனை 400 ரூபாவாக அதிகரிக்கலாம்.

ஆனால், தொழிலாளர்களின் அப்பாவித்தனத்தையும், வறுமையையும் தமக்கு சாதகமாக்கிக் கொண்ட கூட்டுக்கமிட்டிகள் சட்டியிலிருந்த தொழிலாளர்களை எரியும் நெருப்பில் தள்ளி விட்டதுபோல நடந்து கொண்டு விட்டனர்.

எனவே, எதிர்வரும் காலங்களிலாவது தோட்டத் தொழிலாளர்கள் தமக்கான உரிமைப் பிரச்சினைக்கு தாங்களும் அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும். அல்லது நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை யாராலுமே தடுக்கவே முடியது - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பாடசாலைக்கு வழங்கப்படும் வளங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்

## உதவித் தூதுவர் மிஸ்ரா கூறுகிறார்

நுவரெலியா, ஜூன் 13

கண்டி உதவி இந்தியத் தூதரகம் மலையகத் தமிழ் பாடசாலைகளுக்கு வழங்குகின்ற வளங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கண்டி உதவி இந்தியத் தூதர் ஆர்.கே.மிஸ்ரா தெரிவித்தார்.

கண்டி உதவி இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் நாவலப்பிட்டி பிரதேசத்திலுள்ள 18 தமிழ் பாடசாலைகளுக்கு நூல்கள் மற்றும் உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

மலையகத்தில் வாழுகின்ற இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் கல்வியில் பின் தங்கிய நிலைமையில் வாழுகின்றமைக்கு பொருளாதாரக் காரணிகளும் வாழ்வியல் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன.

இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய சமூகங்கள் மத்தியில் தயக்கத்துடன் வாழக்கூடிய நிலையிலுள்ளனர். இதனை நான் மலையகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றதன் மூலம் அறிந்து கொண் டுள்ளேன்.

எனவே மலையகத்தில் வாழுகின்ற மாணவர்கள் கல்வியிலும், தொழில் நுட்பத்துறையிலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் - என்றார். (ச)

# அதிபரின் மாற்றம் இடை நிறுத்தம்: போராட்டத்துக்குப் பலன்

இரத்தினபுரி, ஜூன் 13

இரத்தினபுரி அலோசியஸ் தேசியக் கல்லூரி அதிபர் உபாலி மீகஹாபொல திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து பழைய மாணவர்களும், பெற்றோரும் கல்லூரியின் முன் திரண்டு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். அதனையடுத்து அதிபரின் இடமாற்றத்தை கல்வியமைச்சின் செயலாளர் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்துள்ளார்.

இந்தப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அந்த இடத்துக்கு வருகை தந்த இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புற போராட்டகாரர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்பின் சம்பந்தப்பட்ட அமைச்சருடனும் செயலாளருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து அதிபரின் இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

மாணவர் ஒருவருக்கு இவர் அனுமதி வழங்க மறுத்தார் என்ற முறைப்பாட்டின் பேரில் அவருக்கு திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நோய் நொடியின்றி வாழ...



டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின்கீழ், கிழக்குப் பலகலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக வளாகத்தில் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (21)

# வலைகள் திருட்டு: மீனவர்கள் விசனம்

அம்பாறை, ஜூன் 13

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர்களின் இயந்திரப் படகுகளிலுள்ள மீன்பிடி வலைகள் திருடப்படுவது தொடர்பாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இந்த நிகழ்வுகள் அதிகரித்து வருவதனால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் தமது உடைமைகளுடன் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அச்சம் அடைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கூறுகின்றார்.

கடந்த வியாழக்கிழமை இரவும் இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு படகுகளிலிருந்தும் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு படகிலிருந்தும் சுமார் ரூபா ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான மீன்பிடி வலைகள் திருடப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கிறார்கள்.

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இந்த விடயம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறையீடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.(ச)

# வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜூன்13

வடமத்திய மாகாணத்தில் அதிகரித்துக் காணப்படும் வைத்தியர்கள் பற்றாக்குறைக்குத் தீர்வுகாணுமுகமாக ரஜரட்ட பல்கலைக்கழக வைத்திய பீடத்திலிருந்து வெளியேறும் இளம் வைத்தியர்களை இங்கு சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வட மத்திய மாகாண சுகாதார அமைச்சர் பேஷல ஜயரத்ன தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் மாகாணத்திலுள்ள கிராமிய வைத்தியசாலைகளில் 150 வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. வைத்தியர்கள் பற்றாக்குறையினால் 6 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

எனவே, வடமத்திய மாகாணத்தினுள் நிலவும் சகல குறைபாடுகளையும் எதிர்வரும் மாதங்களுக்குள் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

# அனைத்து விவசாயிகளுக்கும் இலவச விதைநெல் வழங்குக

## கிழக்குஅமைச்சரவை கோரிக்கை

மூதூர், ஜூன் 13

இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான விதைநெல்லை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண அமைச்சரவை விவசாய அமைச்சைக் கோரியுள்ளது.

இது தொடர்பான தீர்மானமொன்று கிழக்கு மாகாண அமைச்சரவைக் கட்டடத்தில் நிறைவேற்றப்பட்டது. முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தன் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நெற்செய்கை அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நூறு சதவீதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்கனவே விதைநெல் இலவசமாக வாங்கப்பட்டுள்ளது. தற்போது 80 சதவீதம், 75 சதவீதம், 50 சதவீதம் நெற்செய்கை பாதிக்கப்பட்டவர்களுக்கும் இலவசமாக விதை நெல் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைகாக வழங்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்து இதில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.(ச)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றோர் கைது

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற 24 பேரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை திருக்கோவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட வயர்களும் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தோட்டத் தொழிலாளரின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியிருக்கும் கூட்டு ஒப்பந்தம்

## மேல் மாகாண சபை உறுப்பினர் ராம் விசனம்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு மிகப்பெரும் பங்காற்றிவரும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் அவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது - என்று மேல்மாகாண சபை உறுப்பினர் சி.வை.பி.ராம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் அனைத்துத் துறைகளிலும் பணியாற்றும் அரச மற்றும் தனியார் துறையின்ருக்கு வரவு-செலவுத் திட்டத்திலும் மற்றும் ஏனைய நிலைமைகளிலும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இதனை நாம் ஒரு போதும் தவறாகக் கருதவில்லை.

இவ்வாறான திட்டங்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும். ஆனால், மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மட்டும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஒரு சில தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்துக்கு மிடையே இரகசியமான முறையில் தீர்மானிக்கப்படுவது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

வறிய நிலையிலுள்ள மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேலும் இரு வருடகாலத்திற்கு கஷ்டமான நிலைக்குக் கொண்டு செல்வதற்கே இந்தச் சம்பளவுயர்வுத் திட்டம் வழிவகுத்துள்ளது.

எனவே, இது தொடர்பில் நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு, சமூக நல்லிணக்கம், அபிவிருத்தி என்பவற்றை பிரதான இலக்காகக் கொண்ட அனைவரும் ஒன்றிணைந்து மலையக பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்வில் சுபிட்சமான எதிர்காலத்தை உருவாக்க செயற்பட வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாஷையூர் ஆலயப் பெரு



## அருளாசி பெருக ஆசிக்கின்றோம்



ஆனி மாதம் பிறந்துவிட்டால் மகிழ்ச்சி தான். அருள் வள்ளல் கோடி அற்புதர் தூய அற்புதரின் விழா வந்து விட்டது என்பது தான் அத்ற்குக்காரணம்.

நாடி வந்தோரின் துயர் துடைக்கும் கோடி அற்புதர் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலங்கள் அனைத்தும் விழாக்கோலம் பூண்டுவிடும். நாம் தேடி வந்த போதிலெல்லாம் இறை வரங்களை வாரிப் பெற்றுத் தந்த தூய அந்தோனியரின் திருவிழாவை எப்படிச் சிறப்பாக்கலாம் என்பதுதான் பக்தர்கள் மனதிலெழும் கேள்வி.

அலங்காரங்கள், ஆடம்பரக் கொண்டாட்டங்களுக்கும் அப்பால் ஏழை, எளியோரின் துயர் துடைப்பு இது தான் எமது தூயவரின் கனவு; இறையரசின் மலர்வு. இறைவனிடம் எமக்காகப் பரிந்து பேசி எமது வேண்டுதல்களைப் பெற்றுத்தரும் புனிதர் இறைவனுக்காக எம்மிடம் இரந்து கேட்பதும், பரிந்து பேசுவதும் இதற்காகத்தான். நிறைவாகப் 'பெற்றுக்கொண்டீர்கள் நிறைவாகக் கொடுங்கள்' இதுவே அவரது அழைப்பு.

பாஷையூர்ப் பதி வழமைபோல விழாக்கோலம் பூண்டுள்ளது. இன மத வேறுபாடின்றி பக்தர் வெள்ளம் கூடி வருகிறது. எல்லோருடைய வேண்டுதல்களும் தூயவரின் பரிந்துரையால் இறை சந்நிதியில் கேட்கப்படவேண்டும் என்று ஆசிக்கின்றோம். அதேவேளை புனிதர் எம்மிடம் கேட்பதையும் நிறைவேற்றி எமது நன்றிக்கடனையும் நிறைவேற்றி நிற்போம்.

தூய அந்தோனியாரின் பரிந்துரையும் இறைவனின் நல்லாசியும் என்றும் அனைவரோடும் இருப்பதாக.

பங்குத் தந்தை அருட்திரு. செ. றோய் பேடினன்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் பாஷையூர் பகுதியில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆவணச்சான்றுகள் உண்டு. பாஷையூரில் அமைந்திருந்த ஒரு சிறு ஆலயம் பற்றிய குறிப்புக்கள் யாழ் ஆயர் இல்லத்தில் உள்ள 1775 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதாக அருட்திரு பௌவுடல் கூறியுள்ளார் எனவும், 1825 ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கையில் அமைந்திருந்த எல்லாக் கத்தோ லிக்க ஆலயங்களின் பெயரும், அவற்றின் அமைவிடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாஷையூர் புனித அந்தோனியர் ஆலயத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அருட்திரு ஞா. பிலேந்திரன் அடிகளார் கூறுகிறார்.

கத்தோலிக்க மதத்தை தழுவி இருந்த போர்த்துக்கேயர், செபவழிபாடுகளை நடத்த ஒரு சிறு குடிலை பாஷையூரில் அமைத்தனர். அப்போதே அங்கு அந்தோனியார் சுருபம் எழுந்தருளியது. போர்த்துக்கேயர் அந்தோனியார் மேல் மட்டற்ற நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தார். கடற்றொழில் செய்யும் பாஷையூர் மக்களும் போர்த்துக்கேயர் போலவே அந்தோனியார் மேல் அளவில்லாத பக்தி கொண்டார்கள்.


சங்கிலியன் ஆட்சிக்காலத்தில் போத்துக்கேயரின் வழிபாட்டிற்கு பல இடையூறுகள் விளைந்தன. அவன் சிறு குடிலாக அமைந்திருந்த செப வழிபாட்டுக் கூடத்தை இடித் துத் தரைமட்டமாக்கினான். அங்கிருந்த அந்தோனியார் சுருபத்தையும் அங்கிருந்து எடுத்து எறிந்தான். எனவே அவனது இக்கொடிய செயலின் காரணமாக அங்கிருந்த மக்கள் அச்சத்தினால் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றனர்.

1844- 1845 களில் கோவா ஒற்ரோரியன் சபையைச் சேர்ந்த அருட்திரு. யோக்கிம் கபிரியேல் எனும் குருவின் முயற்சியாலும் கிராம மக்களின் ஆதரவினாலும் முருகக்கல்லினால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. 1850 இல் அருட் திரு. கசினிலி அடிகள் இந்த ஆலயத்தைப் பெரிதாகவும் அழகுறவும் அமைத்திருந்தார் என பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் 151 ஆவது ஆண்டு விழா சிறப்பிதழில் அருட்திரு ஞா. பிலேந்திரன் குறிப்பிடுகிறார்.

இந்த ஆலயத்தின் அமைப்பாக ஆரம்பத்தில் இரு மருங்கிலும் பாலை மரங்களிலான தூண்கள் அமைக்கப்பட்டு அவற்றின் முகட்டுப்பாரம் தாங்குவதற்கு அமைப்பு செய்யப்பட வேண்டும் என இக்கிராம மக்கள் வற்புறுத்தினர். இதற்காக அவர்கள் கடல் கடந்து சென்று 30 இற்கும் மேற்பட்ட பாரிய பாலை மரத்தூண்களை வத்தகைகள் மூலம் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் தமது கிராமத்திற்கு கொண்டுவந்து சேர்த்தனர். ஆனால் விக்டர் டெலாண்டெஸ் அடிகளார் தூண்கள் அற்ற நவீன முறையிலான ஆலயத்தை அமைக்கும் முயற்சியில் வெற்றி கண்டார். மக்களுடன் மிகவும் ஐக்கியமாகிய பாசமும் நேசமும் மிக்க அருட்திரு விக்டர் டெலான்டெஸ் அடிகளாருக்கு நன்றி கூறும் வகையில் இக்கிரமாத்தவர் அவனை பக்கமாக உள்ள கோயில் பகுதியில் அடக்கம் செய்து அவரது பெயரைப் பொறித்துள்ளனர். இன்றும் இதைக் காணக்கூடியதாக உள்ளது.

1935 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த வண.து. எமில்யானுஸ்பிள்ளை அடிகளாரின் முயற்சியினால் ஆலயத்தின் முகப்பில் வானுயர இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. இதற்காக கொழும்பிலிருந்து வோக்க கெம்பனியினர் அழைக்கப்பட்டு அவர்களே இக்கட்டட வேலையைப் பூர்த்தி செய்தனர். ஆலயத்தின் பீடத்தின் பிற்பகுதியில் காணப்படும் சிங்காசமானது வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்து எனும் சிற்பக்கலை வல்லுநரால் 40 நாள்களில் வடிவமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் இவராலேயே 1950 ஆம் ஆண்டு இன்று காணப்படும் சிங்காரத்தேரும் வடிவமைக்கப்பட்டது. அத்துடன் ஆசந்தி சுற்றும் கூடு, அந்தோனியார் கூடு என்பனவும் வடிவமைக்கப்பட்டது. சிங்காசனத்தின் நடுவே வீற்றிருக்கும் பிரமாண்டமான அந்தோனியர் சுருபம் உரோமில் இருந்து கொண்டுவரப்பட்டது ஆகும்.

கலையுருவாய்க் கவியுற விளங்கும் பலிபீடமும், கண்களையும் கருத்தையும் கவரும்



வேலைப்பாடு அமைந்த சிங்க
அடிகளார்களின் கலை ஆர்வ
வானூறு முகப்பும் இவர்களது
மின்சார விளக்கு ஏற்றிய பெ
1945-1947 ...ப்பகுதியி
பலகை மரத்தினாலான மெழு
காரணமாக 1970 ஆம் ஆண்
அமைக்கப்பட்டது. ஆரம்பகா
தேக்கு மரத்திலான வண்டில்
பின்புறமாக ஓர்அறை நிர்மான
அடிகளாரின் முயற்சியினால் பு
நிலையம், மெழுகுதிரிக் கடை
இரு பக்கங்களிலும்-கோபுர

## பாஷையூர் புனித அந்தோனியார் பெருவிழாச் சிறப்பு மலர் விளம்ப




TASTE OF JAFFNA
RESTAURANT
authentic Jaffna Food
Western, Indian,
Chiness Food
Tel: 0094 21 222 1322,
0094210 3207190
Fax: 0094 21 222 1323
101, main Street, Jaffna.



குமார் பேக் ஹவுஸ்
பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்த நாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகை கள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்.
சென். செபஸ்தியான் வீதி, பாஷையூர்.



SONIYA JEWELLERY
சோனியா ஜூவெல்லறி
360/5, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
360/5, Main Street, Jaffna.

Peninsula Super Mall



No. 127, Kandy Roda, Kachchri, Jaffna.
super maket services
DSM
0773552231
penijaffna@gmail.com

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்), குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ், வடை, கட்லட், சமோஷா) போன்றவற்றுக்கு நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
ஹொட்டல் றொலெக்ஸ்
ஓடர்கள் குறித்த நேரத்தில் கவனிக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2808
360, Galle Road, Colombo - 6, 2360462

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் புனித அந்தோனியார்

# நவிழா - 13.06.2011



அழகான வழிபாட்டுப் பகுதி, ஆரோமைய கட்டட அமைப்பைக் கொண்டு பூரண நிர்மாணம் பெற்ற இந்த ஆலயம், 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் போது இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கையினால் வார்த்தையால் விவரிக்க முடியாத அளவிற்கு பெரும் சேதத்திற்கும் அழிப்புக்கும் உட்பட்டது. ஆலயத்தின் கூரை முற்றாக சேதம் அடைந்தது. ஆலயத்துக்கு ஏற்பட்ட முழுச்சேதமும் ரூபா 75 இலட்சம் என மதிப்பிடப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களின் ஒரு தொகுதியினர் 1996 ஆம் ஆண்டு தம் இல்லங்களுக்குத் திரும்பினர். சேதத்திற்கு உட்பட்ட ஆலயத்தின் நிலைகண்டு மனம் குமுறிய மக்கள் அவற்றை துப்புரவு செய்து அக்கோயிலுக்குள் வழிபாடுகளை நடத்தினர். பின்னர் ஆலயப் புனரமைப்பு வேலைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. குறைந்த அளவிலான குடும்பங்களே இக்காலப்பகுதியில் இங்கே வாழ்ந்தாலும் மக்கள் வாரத்தில் ஒரு நாள் தம் கடல்வள உழைப்பை முழுமையாக ஆலயத்தின் புனரமைப்பு செலவிற்காக மனம் உவந்து வழங்கினர். ஏனைய நிறுவனங்களில் பணியாற்றும் இப்பங்கு மக்களும் உதவி செய்த போதிலும் இவர்களது பங்களிப்பு குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவு இல்லை. மிகவும் சொற்பமே.

எனினும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இக்கிராம மக்கள் தம் ஆலய புனரமைப்பிற்குத் தாராள மனப்போக்குடன் தங்கள் பங்களிப்பைச் செய்தனர்.

இவ்வாறாக புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் பீடப்பகுதியில் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுப் பார்ப்பதற்கு மிக அழகைக் கொடுத்து நிற்பதுடன் இந்தக் கிராம மக்களை இயற்கை அனர்த்தமாகிய இடியிலிருந்து காக்கும் முகமாக ஆலய முகப்பில் இடிதாங்கியும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உதவியுடன் அலங்கார மின் விளக்குகள், மின் விசிறிகள் பொருத் தப்பட்டதுடன் ஆலய மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பாரிய ஜெனரேற்றர் ஒன்றும் பயன் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு காலங்களில் பல்வேறு அமைப்பு முறைகளை கொண்ட தாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் ஆலய வெளிப்புறத்துக்கு வர்ணம்பூசப்பட்டு அழகுபடுத்தப் படுகின்றது. இவ்வாறாக இந்தக் கிராம மக்களின் முக்கிய ஆன்மீகத் தளமாக இந்த ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை இருந்து வருகிறமை சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

இந்த வருட ஆலயப் பெருவிழா 1.6.2011 ஆரம்பமாகியது. இறுதிநாள் இன்று 13.6.2011 புனித அந்தோனியாரின் திருச்சுருபப் பவனியை மக்கள் அனைவரும் கண்டுகளித்து இறை ஆசீர் பெற்றுக்கொள் ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மைந்த சிங்காசனமும், வண. து. எமிலியானுஸ்பிள்ளை, அருட்திரு.பி.பஸ் ரியாம்பிள்ளை கலை ஆர்வத்தால் உருவாகிப் பிறந்த இரட்டைப் படைப்புக்கள் ஆகும். இன்று காணும் இவர்களது முயற்சியின் பலனே. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்களே இந்த ஆலயத்திற்கு ஏற்றிய பெருமையைக் கொண்டவர்களாவர்.

லப்பகுதியி ி.பொன்னையா அடிகளாரின் காலத்தில் ஆலயத்தின் கிழக் குப் பக்கத்தில் லான மெழுகுதிரி விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. காலப் போக்கில் பழுதடைந்ததன் ஆம் ஆண்டு கே.பி. சந்தியாப்பிள்ளை அடிகளாரினால், தற்போதுள்ள மெழுகுதிரிக்கடை . ஆரம்பகாலங்களில் இக்கிராம மக்களின் மரண ஊர்வலத்திற்கு பயன்படுத்துவதற்காக ன வண்டில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதைப் பாதுகாப்பாக பராமரிப்பதற்கு இக்கடைக்கு றை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பின்னர் 1989 ஆம் ஆண்டளவில் அருட் திரு. பிரான்சிஸ் சியினால் புனித வின்சன் டிபோல் சபையினரின் விற்பனைக்காக ஒரு செபமாலை விற்பனை ததிரிக் கடையின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டது.

லும்-கோபுரங்களைக் கொண்ட கம்பீரமான முகப்புத் தோற்றம், அமைப்பான போட்டிக்கோ,

மலரமைப்பு- நந்தன், கதிர்

## இத்திருநாளில்

அற்புதரே புனித அந்தோனியாரே
உம்மை வேண்டித் தொழுகிறோம்
ஆற்றுப்படுத்தி அனைவர் அகங்களை
யும், அமைதி சமாதானத்தை உலகில்
ஏற்படுத்தி, போட்டி பொறாமை
இல்லாது ஒருவர் உரிமையை மற்றவர்
ஏற்று வாழும் நிலை புனித ஆவியின்
கருணையால் இங்கு நிலை நாட்ட
போற்றுகின்றோம் உம்மை இத்திரு
நாளில் பரிந்துரைப்பீர் எமக்காய்.

கொக்குவில், இராம ஜெயபாலன்.

## ளம்பர அனுசரணையாளர்கள்

SHANTHAN TRAVELS



T.P. 021 4920506
0771983080, 0770489380
173, Colombuthurai Road,
Pandiyanthalvu, Jaffna.

சாந்தன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார்
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான வலைகள், பொலித்தீன் நூல், கயிறு வகைகள் இயந்திரங்களுக்கான ஒயில் வகைகள் விநியோகம் செய்வதுடன் பிறிண்டிங் வெமனேற்றிங் போன்றவை யாவும் குறைந்த கட்டணத்துடன் செய்து தரப்படும்
புனித அந்தோனியார் கோயிலடி, பாஷையூர், யாழ்ப்பாணம். T.P. 021 300 6982



V.Piratheepan
Devin pharmacy
360/4, Main Street,
Jaffna.

வெள்ளைப்பிள்ளையார்
பல்பொருள் வாணிபம்
ஈச்சமோட்டைச் சந்தி,
யாழ்ப்பாணம்.



நெல்சன் வீடியோ டிஜிற்றல் அன் போட்டோ
அல்பங்கள் வடிவமைப்பாளர், அரங்கேற்றம், மேடை
நேரடித் தொகுப்பு அஞ்சல் அனைத்து வேலைகளுக்கும்
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776788207



அனைவரது அபிமானத்தைப் பெற்ற
OMEX HOTEL
சுத்தம், சுவை, தரம், நியாய விலை
OMEX HOTEL
இல. 372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9926

ஐஸ்கட்டி உற்பத்தித் தொழிற்சாலை
இல.34 (18), ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6496
கிளை 143, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777726874

நாகபூஷணி ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்
சகல விதமான பொருள்களையும் மொத்தமாகவும் சில் லறையாகவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

செல்வம் நகைத்தொழிலகம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்குக் குறித்த காலத்துக்குச் செய்து தரப்படும்.
12, சென். அன்ரனிஸ், பஷையூர் வீதி.

ஜீவா பேக்கரி
பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள் பிஸ்கற் வகைகள் ஓடருக்குக் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
173, 189, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.
0777110531

ஆகாஸ் பான்சி குட்ஸ் தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான ஆடைகள் குறித்த நேர காலத்தில் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

லிங்கம் கூல்பார்
சுவையான ஐஸ்கிறீம், ஐஸ்பழ வகைகள், பழரசங்கள் சுவையான உணவு வகைகள் ஓடருக்குக் குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
[illegible], கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் இருந்து
ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ள..
Luxon Communication
WESTERN UNION
I.D.D, Local, E.mail, Fax, Liminating, Scanning, CD Writing, Printing, Browsing.
60, Eachchamoddai Road, Jaffna.
T.P. 021 222 6897
Fax: 021 222 6169
E.mail: luxoncom@yahoo.com

ASP ENTERPRISES
Dealers in Electric Bicycles, Induction Cookers & Spares
Catholic Press Complex,
360/9, Main Street, Jaffna.
(Near the Bastian Junction)
Telephone: 021 3001585
mobile: 0776079352
E.mail: aspjaffna@gmail.com

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
லிங்கேஸ் கிறீம் ஹவுஸ்
மயிலணை முருகமூர்த்தி கோயிலடி, சுன்னாகம்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

பிருந்தா ஜூவெல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் ஓடருக்குச் செய்து தரப்படும்.
301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Brilliant Photo Studio & Video
பிறில்லியன்ற் போட்டோ ஸ்ருடியோ அன்ட் வீடியோ
Album Makers, Excellence Professional, Photography, Video Movi Making, Digital Imaging, Reproduction of Old Photos and B/W to Colour.
360/7, Main Street, Jaffna. T.P.: 0776161058

தேவி ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

சரவணபவன் அரைக்கும் ஆலை
31, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கும் வருகை தந்தனர். (4)

# யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மை பெரும் பிரச்சினையாகவே உள்ளது

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மை பெரும் பிரச்சினையாக உள்ளதாகப் பிராந்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு காலத்தில் தொற்றும் நோய்களின் பாதிப்பு அதிகம் உணரப்பட்டது. ஆயினும் இன்று தொற்றா நோய்களதும் போசாக்கின்மையினதும் பாதிப்பே அதிகளவில் காணப்படுகின்றது.

அண்மையில் ஆய்வுகளின்படி 30 வீதமான கர்ப்பிணிப் பெண்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை 25 வீதமான பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகளிடத்தில் போசாக்கின்மை காணப்படுகின்றது.

பொதுவாகவே பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கின்மை காணப்படுவது அவதானிக்கப்படுகின்றது.

இதற்கு வறுமை மட்டும் காரணமல்ல. தவறான உணவுப் பழக்கங்களும் ஒரு காணரமாகும். சத்துள்ள உணவுப் பொருள்களை உண்பதற்குப் பதிலாக சத்தற்ற உடனடித் தயாரிப்பு உணவுகளையே மாணவர்கள் அதிகளவில் உண்ணுகின்றனர்.

எனவே, பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவுச் செயற்திட்டத்தில் கீரை வகைகளையும், புரதச் சத்துள்ள உணவுகளையும் அதிகளவு சேர்த்துக் கொள்வது அவசியமாகும்.

பாடசாலைகள் காலாண்டுக்கு ஒரு தடவையேனும் மாணவர்களது உயரத்துக்கேற்ப நிறையை அளவிட்டு போசாக்கின்மை, அதிக நிறை ஆகியவற்றைக் கண்டு அதற்கேற்ப பரிகாரம் காணலாம்.

போசாக்கின்மையும் அதிக நிறையுமே பல்வேறு தொற்றா நோய்களுக்குக் காரணமாகும். எனவே ஒவ்வொருவரும் சரியான நிறையைப் பேணுவதன் மூலம் நீடித்த ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் பெற முடியும் -என்றார். (எ-38)

# நவீன தொழில்நுட்ப அறிமுகங்களால் திசை திருப்பப்படும் மாணவர் சமுதாயம்

## மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் அறிமுகங்களால் மாணவர்கள் பல வழிகளிலும் திசை திருப்பப்பட்டு கல்வியின் இலக்கிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள் எனும் தலைப்பில் பண்டத்தரிப்பு றோ.க.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவீன தொழிற்நுட்ப வளர்ச்சி காரணமாக சமூகம் எதிர்கொள்ளும் பல வகையான சமூகப் பிறழ்வுகளுக்கு மாணவர்களும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மாணவர்கள் தற்போதைய சமுதாயத்தில் பிரச்சினைகளுக்கு ஆளாகாது இருப்பதற்குப் பெற்றோர்களின் பங்களிப்பும் அவசியமாகும்.

போரின் பின்னர் சமுதாயத்தில் உளத்தாக்கங்களாலும் குடும்பப் பிரச்சினைகளாலும் மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்புகள் ஏற்படுகின்றது.

இதனால் கல்வியில் போதிய கவனம் செலுத்த முடியாத நிலையிலும் மாணவர்கள் உள்ளனர்.

பல கட்டுப்பாடுகளுக்குள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டிருந்த மாணவர்கள் தற்போது கட்டுப்பாடற்ற நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு பொறுப்பற்றவர்களாக இன்றைய மாணவர்கள் நடந்து கொள்வது எதிர்கால சந்ததியினரின் நிலையில் கேள்விக் குறியைத் தோற்றுவித்துள்ளது.

இன்றைய காலங்களில் பரவலாக பாலியல் துஷ்பிரயோகங்கள், இளைஞர்கள் மத்தியில் மதுபானம், புகைப்பிடிப்புக்கும் பழக்கங்கள், கல்வியில் நாட்டம் இன்மை, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுதல், பணத்தை வீண் விரயம் செய்தல் பயன்படுத்துதல், ஆபாசப்படங்கள் பார்த்தல் போன்றன இடம்பெற்று வருகின்றன.

பெண்பிள்ளைகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அறியாமையால் பல தவறுகளை இழைத்து விட்டுப் பாடசாலைகளில் இருந்து வெளியேறி கல்வியைத் தொலைத்து விடுகின்றனர்.

பதின்மவயது என்பது பெரும் கடலைப்போன்றது. அதனைக் கடந்து கரை சேர்வது எளிதான காரியமல்ல. இந்த வயதுக் காலத்தில் பிள்ளைகள் மீது பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளுடன் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல் அவசியமாகிறது -என்றார். (ம-311)

# நியமனங்கள்

சுன்னாகம், ஜூன் 13

வலிகாமம் கல்வி வயலத்துக்குப் புதிதாக இரு உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் கல்வி அபிவிருத்திக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், திருமதி ரூபா உதயரட்ணம் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அபிவிருத்திக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராக தற்காலிக இணைப்பில் கடமையாற்றிய திருமதி அபிராமி பார்த்தீபன் முன்னர் கடமையாற்றிய துணுக்காய் வலயத்துக்கு இடம்மாறிச்சென்றதையடுத்து திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறியிருந்தார்.

ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய சி.மாதவகுமாரன் ஓய்வு பெற்றதையடுத்து சேவைக் கால ஆசிரிய ஆலோசராகக் கடமையாற்றிய திருமதி ரூபா உதயரட்ணம் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ம-38)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 13

நெடுந்தீவுக்கான உதவி அரசாங்க அதிபராக எஸ்.சிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வவுனியா பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலகராக இதுவரை கடமையாற்றியுள்ளார். கடந்த சில மாதங்களாக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் நெடுந்தீவின் பதில் உதவி அரச அதிபராக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சான்றிதழ் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்க விரும்பும் மாணவர்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஜூலை 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(ம-311)

# காரைநகர் பிரதேச கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

காரைநகர், ஜூன் 13

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. அதன் விவரம் வருமாறு:-

கட்டுரை - கனிஷ்ட பிரிவு கோ. நிறோஜினி (வியாவில் சைவ வித்தியாலயம்) த. ஆரணி (யாழ்ற்ரன் கல்லூரி) க.பிரியதர்சினி (யாழ்ற்ரன் கல்லூரி)-

கவிதை - கனிஷ்ட பிரிவு - கி.சசிரேகா (வியாவில் சைவ வித்தியாலயம்), ந.ஜெயந்திமாலா (வியாவில் சைவவித்தியாலயம்), கி.ஸோபனா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்)-

சிறுகதை - கனிஷ்ட பிரிவு - சி.சிவசுப்பிரமணியம் (யாழ்ற்ரன் கல்லூரி), திறந்த பிரிவு - திருமதி பே.ஸ்ரீலேக்கா (காரைமத்தி, காரைநகர்), நி.யோகநாயகி (களபூமி, காரைநகர்), திருமதி ம.செல்வக்குமாரி (வலந்தலை, காரைநகர்)-

பாடலாக்கம் - திறந்த பிரிவு திருமதி ம.செல்வக்குமாரி (வலந் தலை, காரைநகர்)-

கட்டுரை திறந்த பிரிவு - ம.பவிதா (வெடிய ரசன் வீதி, காரைநகர்). (ம-250)

# தெல்லிப்பழைக் கோட்ட கணித வினாடிவினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தெல்லிப்பழை கோட்ட மட்டத்தில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

தரம் -6

சஞ்சிகாஜினி பாலசந்திரன் (யூனியன் கல்லூரி), மதிவதனன் மேருஜன் (அருணோதயக் கல்லூரி), நிலானி சசிக்குமார் (குளமங்கால் றோ.க. வித்தியாலயம்),

தரம் -7

நர்மிலா துஸ்யந்தன் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), தர்மராசா சஜீபன் (மகாஜனாக் கல்லூரி), சிவநாதன் ஜெயதரன் (மகாஜனாக் கல்லூரி).

தரம் -8

விஜியகுமார் சங்கீத் (மகாஜனாக் கல்லூரி), இரவிச் சந்திரன் இரஜிவரணன் (மகாஜனாக் கல்லூரி), வர்சிகா சின்னத்துரை (அருணோ தயாக் கல்லூரி)

தரம் -9

தனபாலசிங்கம் சாரங்கன் (யா/ மகாஜனாக் கல்லூரி), சுரேஸ்குமார் சோபிதா (மகாஜனாக் கல்லூரி), நித்தியானந்தராஜா அபிராமி (அருணோதயாக் கல்லூரி)

தரம் -10

விஷ்ணுகா கிருபாகரன் (மகாஜனாக் கல்லூரி), விதுசா வாசுதேவன் (மகாஜனாக் கல்லூரி), சிவதாசன் தனுராஜ் (யா/ யூனியன் கல்லூரி)

தரம் -11

கேதீஸ்வரன் கௌசிகரன் (மகாஜனாக் கல்லூரி), தேவதயாளன் ராகுலன் (யூனியன் கல்லூரி), கிருஸ்ணபிள்ளை கோபிதா (அருணோதயாக் கல்லூரி). (ம-38)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடர்கள் பல தாண்டி எழுச்சியுடன் மீண்டும் இயங்கி வரும் யாழ்.பொதுநூலகம்

எஸ்.யேசுதாஸ்



(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ்.மக்களின் அறிவுப் பசிக்குத் தீன் போட்டு வந்த யாழ்.பொதுசன நூலகம் 1981 ஆம் ஆண்டு தமிழ் இன அழிப்பின் ஓர் அங்கமாக எரித்துச் சாம்பலாக்கப்பட்டது.

இதன் பின்னர் வீழ்ச்சி எழுச்சிக்கான படிக்கற்கள் என்பது போல் நூலகம் மீள்விக்கப்படும் நோக்கில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து யாழ். நகரசபை மண்டபத்தில் 1982 ஆம் ஆண்டில் சிறியளவில் செயற்படத் தொடங்கியது.

இந்த நூலகத்துக்கு ஆசியா பவுண்டேசன் நிறுவனம், பிரிட்டன் சபை என்பன புதிய நூல்களை வழங்கியது. நூற்சேர்க்கை 85,000 கொண்டதாக வளர்ச்சியடைந்தது. குடாநாடு முழுவதுக்கும் பயன்பட்டது.

''சாணேற முழம் சறுக்குவது போல 1995 இல் வரலாற்று இடப்பெயர்வின் போது மீண்டும் தளபாடங்கள், நூல்கள் 29,000 இழக்கப்பட்டன. இவற்றுள் உசாத்துணை நூல்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் பெரும் அளவானவை.

1985 இல் இருந்து 1996 வரை போர் நடவடிக்கைகள், பாதுகாப்பு வலயம் காரணமாக கட்டடம் மிகவும் சேதமடைந்து சூனிய மயமானது. இந்த நேரத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்காவின் பணிப்புக் கமைய யாழ். மாவட்ட தேசியவீடமைப்பு அதிகார சபைக்கட்டடத்தை திருத்தம் செய்து தற்காலிக நூலகம் 1998 ஜனவரி 14ஆம் திகதி அமைச்சர்களான மங்கள சமரவீர, ரிச்சட் பத்திரன,பேட்டிலால் பிரேமரட்ண ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

மறைந்த முன்னாள் அமைச்சர் பீட்டர் கெனமனின் நூல்தொகுதி, துரைசிங்கம் மற்றும் கே.டபிள்யு. அழகிய வண்ணா சர்வதேச புக் எயிட் நிறுவனம், பிரான்ஸ்தூதுவர். ஏசியா பவுண்டேசன் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம இலங்கை கிளைப்பொறுப்பாளர் வீ.முருகேசு போன்றோரின் நூல் சேர்க்கைகளும் இலங்கை முப்படைகள், மஞ்சி பிஸ்கட் நிறுவனம் வழங்கிய நூல்களும் கிடைக்கப்பெற்றன.

பிரதான நூலகப்பிரதேசம் சற்று அமைதி அடைந்ததை அடுத்து 1997ஆம் ஆண்டு புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 70கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட மீள்கட்டுமானப்பணிகள் 2003இல் நிறைவடைந்தன. 24.02.2004 ஆண்டு ஆடம்பரமின்றி மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

யுனெஸ்கோ அமைப்பு 20 மில்லியன் பெறுமதியான தொழில்நுட்ப வசதிகள், களத் தொடர்பாடல் நடமாடும் சேவைகளை வழங்கியது. ஜி.ரி.இசாற் நிறுவனம் 10 மில்லியன்பெறுமதியான நூல்களை இந்தியாவிலிருந்து தருவித்து உதவியது. ஏசியா பவுண்டேசன், பிரிட்டன் சபை புக்ஸமிறோன் அமைப்பு என்பனவும் நூல்களை அன்பளிப்புச் செய்தன. சிறுவர் பகுதி சர்வதேச நிறுவனங்களின் பொறுப்பில் அபிவிருத்தி செய்யப்பட்ட சுகாதார ஏற்பாடுகளும் கவனிக்கப்பட்டன.

முயற்சி திருவினையாக்கும் என்பது போல சாம்பர் மேடாக கற்குவியலாக, சூனியப்பகுதியாக அழிவுகளையும் அனார்த்தங்களையும் சந்தித்த அறிவாலயம், கல்வித் தீயினால் அழிந்து போகாது என்பதை எடுத்தியம்பும் ஒரு உதாரணச் சின்னமாக மீண்டும் எழுந்து யாழ்ப்பாணத்தை அழகு செய்வதோடு ஒரு லட்சத்துக்கு மேல் நூல்களை சுமந்து கல்வி ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறது.

மேலும் அதிகரித்து வரும் பயனாளிகளின் அறிவுத் தேடல்களையும், தேவைகளையும் நிறைவு செய்ய பல நவீன அறிவியல் வசதிகளை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

கணினி வசதிகள், தளபாட வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தியாவிலும் இலங்கையிலும் உலகெங்கும் வெளிவரும் தமிழ் நூல்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வழி கோலுவது எதிர்காலச் சந்ததிக்கு பயனுள்ளதாக அமையும்.


நூலக அமைப்பில் திட்டமிடப்பட்ட மிகுதி இரு பகுதிகளும் கட்டப்பட்டு இடவசதி பற்றாக் குறையை நீக்கி மேலும் விரிவாக்கம் செய்வது அவசியமாகின்றது. அரிய நூல்கள் வைத்திருப்பவர்கள் பிறரும் பயன் பெறும் வகையில் அன்பளிப்பாக வழங்க முன்வரவேண்டும்.

புலம்பெயர் தமிழ் உணர்வாளர்கள், அபிமானிகள், அறிஞர்கள் ஒன்றி ணைந்து நிரந்தர நிதியம் ஒன்றை ஆரம்பித்து நூலக அபிவிருத்திக்கு உடனடித் தேவைகளுக்கு பயன்படுத்தும் செயற்திட்டம் ஒன்றைக் கையாளுவது எமது பிரதேச கல்விசார் வளர்ச்சிக்கு கை கொடுப்பதாக அமையும்.

சிறிய விதையாக முளைகொண்டு இன்று ஆலமரம் போல் வியாபித்து நற்சேவையாற்றி வரும் யாழ். பொதுசன நூலகம் தடைகளைத் தாண்டி, விடை சொல்லும் வரலாறாக, தமிழ் மக்களின் இருப்பை உணர்த்தும் குறியீடாக பாதுகாக்கப்பட வேண்டும். அளப்பறிய கற்ற கல்விச் செல்வத்தை வருங்கால சந்ததிகளிடம் நிறை வளங்களுடன் ஒப்படைப்பது அனைவரதும் தலையாய கடமையாகும்.

முற்றும்

# நகரில் வீற்றிருந்து அருள் மழை பொழியும் யாழ்.வேங்கடேச வரதராஜப் பெருமாள்



(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் திருமால் வழிபாட்டுக்குச் சிறப்பான ஆலயமாகத் திகழ்கின்றது. அந்தவகையில் 1978 ஆம் ஆண்டு இலங்கையிலேயே மிக உயரமான கோபுரமாக விளங்கும் வகையில் இந்த ஆலயத்தில் ராஜ கோபுரம் அமைக்கப்பட்டமை சிறப்பு வாய்ந்த விடயமாகும்.

இது இவ்வாறிருக்க இந்த ஆலயத்தின் பட்டினக் குறிச்சிகளாக கிழக்காகப் பாணன்காடு, சந்தநாதன் தோட்டம், தெற்காக சரூவீச்சிக் காடு, தட்டான்துறை, மேற்காக நல்லான் வரம்பு, வடக்காகச் சந்தநாதன் தோட்டம், வண்ணான் தோட்டம் ஆகியன அமையப் பெற்றுள்ளன.

ஆலயத்தின் வெளிப்பகுதியில் கிழக்காக ஆஞ்சநேயர் சந்நிதியும் தேர்முட்டியும் சிறிய கருடன் ஆலயமும், தெற்காக பூந்தோட்டமும் 'சந்திர புஸ்கரணி' தீர்த்தக் கிணறும், மேற்காக அடியவர்களுக்கான கிணறும், வடக்காக ஸ்ரீ லக்சுமி நாராயணன் கல்யாண மண்டபமும் அமையப்பெற்றுள்ளது.

அத்துடன், ஆலயத்தின் நிலப்பகுதிகள், வெளி வீதிக்காணிகள் யாவும் ஆலயத்திற்கே உரித்தானதுடன் இதற்கான ஆதனங்கள் கன்னாதிட்டி வீதி, மணிக்கூட்டு வீதி, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ். வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தில் மாதம் இருமுறை ஏகாதசி உற்சவங்கள் இடம்பெறு கின்றன.

மாத ஏகாதசி தினங்களில் வேங்கடேச மூர்த்திக்கு உற்சவங்களும், ஆழ்வார் பன்னிருவருக்கும் உற்சவங்கள் இடம்பெறும்.

அத்துடன் வருடந்தோறும் தைப் பொங்கல் உற்சவமும் இடம்பெறுகின்றது. வருடந்தோறும் மாசித் திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்தில் இலட்சார்ச்சனை விழா ஆரம்பமாகி ரோகினி நட்சத்திரத்தில் விழா நிறைவடையும்.

அத்துடன் வருடந்தோறும் பங்குனி அல்லது சித்திரைத் திங்களில் ஸ்ரீ ராமரின் ஜனன தினவிழாவும் இடம் பெற்று வருகின்றன.

பங்குனி உத்தரத்தன்று இராமபிரானுக்குப் பட்டாபிஷேக விழாவும் சித்திரைத் திங்கள் அன்று தமிழ் வருடப் பிறப்பு உற்சவமும் சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தில் சுதர்ஷன ஹோம வைபவமும், சித்திரைத்திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தன்று ஸ்ரீ ராமனுக்கு ஆச்சாரியருக்கு விழா போன்ற விசேட பூசை வழிபாடுகள் அந்தந்த விரத காலங்களுக்கேற்ப முறையில் நடைபெற்று வருகின்றன.

சோபனா

1878 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் பெருந்திருவிழா புரட்டாதித் திங்களில் அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்தாவது தினத்தில் தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவடையும்.

யாழ். மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் இந்த விஷ்ணு ஆலயமும் ஒன்றாக விளங்குகிறது. நாடிவரும் மக்களுக்கு நல்லருள் வழங்குகிறார் பெருமாள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**இடபம்:**
பழைய சம்பவம் ஒன்றை அசை போட்டுப் பார்ப்பீர்கள். குடும்பத்தினரின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவதில் அக்கறை காட்டுவீர்கள். வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும். மனதில் நிம்மதி, சந்தோஷம் குடிகொள்ளும். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்:**
சில விடயங்கள் தொடர்பாக முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகுமோ என, கவலைப்படுவீர்கள். திடீர் பயணங்கள் செல்லலாம். பேராசையால் இழப்புகள், ஏமாற்றங்கள் உருவாகலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். சோர்வு அதிகரிக்கும்.

**கடகம்:**
நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரைப் பார்க்க அவரின் வீட்டிற்குச் செல்லலாம். மனைவி அல்லது கணவன் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கலாம். உடன் பிறப்புக்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சிலர் உங்களின் உதவியால் ஆதாயம் பெற முற்படுவர். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம்.

**சிங்கம்:**
இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். தாய் வழியில் அனுகூலமான நன்மை கிடைக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்களின் யோசனைகளுக்கு ஆதரவு தெரிவிப்பர்.

**கன்னி:**
திட்டமிட்ட வேலை ஒன்றை செய்ய முடியாமல் தடை, தாமதம் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சிலரை கேலியாகப் பேசி அதில் இன்பம் காண்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். வாக்குவாதத்தில் ஈடுபடலாம்.

**துலாம்:**
காரியங்கள் விரைவாக நடைபெற வேண்டும் என, கடவுள் வழிபாட்டை மேற்கொள்வீர்கள். அவசரப்பட்டு செய்த காரியம் ஒன்றால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். தவறு என தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாக செய்வீர்கள். ஆதாயகரமான நாள்.

**விருச்சிகம்:**
சில வேலைகளை முடிக்க நீண்ட நேரம் காத்திருக்கலாம். மற்றவர்களின் பொல்லாப்பிற்கு ஆள்படாமல் இருக்க வீண் பேச்சுக்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வழியில் சிரமங்களைச் சந்திக்கலாம். . நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**தனுசு:**
இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு. உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்ல விதமாக முடியும். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். சிலரின் பாராட்டைப் பெறலாம்.

**மகரம்:**
தந்திரமான செயற்பாடு மூலம் சிலவற்றில் ஆதாயம் அடைவீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திப்பீர்கள். தெய்வ காரிய பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். நெருங்கிய நண்பர்கள் சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். வியக்கத்தக்க சம்பவங்கள் நடக்கலாம்.

**கும்பம்:**
பெண்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். என்றோ நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்று திடீரென நடக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். திட்டமிட்ட வெளியூர் பயணம் செல்லலாம். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போல தோன்றினாலும், இறுதியில் சாதகமாக முடியும்.

**மீனம்:**
குடும்ப உறுப்பினர்களிடையே மனக்கசப்புகள் ஏற்படலாம். மன உறுதியைக் குலைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்வர். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம்.

# ஈழத் தமிழ… விடிவைத் த… ஜெயலலிதா…

வடிவேலு: '' ...முதல்ல ஒரு நாலுபேர். அவங்களால எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அடிச்சாங்க. அப்புறம் அவங்க ஓர் ஆட்டோவில ஏத்திக் கிட்டு போனாங்க. சரி... வீட்டை தான் கொண்டு போறாங்க என்று நினைச்சா ஒரு சந்துக்குள்ள ஆட்டோ போச்சுது. அங்க ஓர் எட்டுப்பேர். அவங்களும் கை நோகும் வரையும் துவைச்செடுத்தாங்க. அதுக்கப்புறம் அவங்க தலைவன் யாருக்கோ போன் பண்ணி மச்சான்! இங்க இரு அள்ளக்கை மாட்டியிருக்கு. 'ப்றியா' இருந்தா வாவேன் என்று சொன்னான். அதுக்கு அவன் சொன்னான் மச்சான்! எனக்கு வர ரைம் இல்லை. இங்க அனுப்பி விடு'' என்று. பிறகென்ன ''அங்கேயும் போட்டு கும்மியெடுத்திட்டாங்க..''

சகபாடி: இவ்வளவு அடி விழுந்தும் ஏன் நீங்க திருப்பி அடிக்கலை?

வடிவேலு: ''அடிச்சிருக்கலாம். ஆனா அடிச்சவங்களில ஒருத்தன் சொன்னான் மச்சான்! எவ்வளவு அடிச்சாலும் தாங்கிறானே இவன் ரொம்ம்ம்ப நல்லவண்டா'' என்று. - கிரி என்ற திரைப்படத்திலிருந்து.

### இலங்கை நினைக்கவில்லை

எல்லாப்பக்கங்களில் இருந்தும் இப்படி அறம்புறமான அடிகள் விழுமென இலங்கை அரசு ஒருபோதுமே நினைத்திருக்காது. ஓர் ஆறுதல் எடுக்கக்கூட நிமிரமுடியாமல், தொடர்ச்சியான அடிகளால் துவண்டு போய்விட்டது இலங்கை. லண்டனில் புலம்பெயரிகளின் ஆர்ப்பாட்டம், சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட போர்க்குற்றக் காணொளிகள், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, அமெரிக்காவின் அழுத்தம், உள்நாட்டில் அதிகாரத்துக்காக அரசின் முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகளுக்கிடையே எழுந்துள்ள பனிப்போர், சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் விளைவுகள் என நொந்து நூலாகிக் கொண்டிருந்த இலங்கை அரசுக்கு அடுத்த அடி ஜெயலலிதாவின் வடிவத்தில் விழுந்திருக்கிறது.

''போர்க் குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தும்வரை இலங்கை மீது பொருளாதாரத் தடையை இந்தியா விதிக்கவேண்டும்.'' ''1971 ஆம் ஆண்டு இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்த கச்சதீவை உடனடியாக மீளப்பெறவேண்டும்'' என்னும் அதிரடியான தீர்மானங்களைத் தமிழகசட்ட சபையில் முதலமைச்சர் ஜெயலலிதா நிறைவேற்றியிருக்கிறார்.

### மாநிலத் தீர்மானங்கள் இலங்கையைப் பாதிக்காது

''நாங்கள் இந்திய மத்திய அரசுடன் மட்டுமே ராஜதந்திர உறவுகளைப் பேணிவருகின்றோம். எனவே, அதன் ஒரு மாநிலத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஒருபோதும் இலங்கையைப் பாதிக்காது. இந்தத் தீர்மானங்கள் குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ளவில்லை'' என்று இலங்கை அரசு சப்பைக் கட்டுக் கட்டியிருந்தாலும், சர்வநிச்சயமாக இலங்கைக்கு இந்தத் தீர்மானங்கள் 'பேதியைக் குடித்த' நிலையை உண்டாக்கியிருக்கும். அதுவும் எல்லாப்பக்கங்களிலும் வாங்கிக்கட்டிக் கொண்டு விழிபிதுங்கிக் கொண்டிருக்கும் நிலையில் எரிகிற வீட்டில் ஜெயலலிதா ஊற்றியிருக்கும் எண்ணெய் மஹிந்தவாதிகளின் அடிவயிற்றில் நெருப்பெரிய வைத்திருக்கும்.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தி.மு.கவை விடவும் அதிக அக்கறை கொண்ட கட்சியாக ஆரம்பத்தில் அ.தி.மு.கவே இருந்தது. அதன் தலைவர் எம்.ஜி.ஆர் ஈழத்தமிழர்கள் மீதும் புலிகளின் மீதும் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். ஒருமுறை புலிகளுக்கு நிதி நெருக்கடி. ஆனால், அவசரமாக ஆயுதங்கள் கொள்வனவு செய்யவேண்டும். என்ன செய்வதென்று தெரியாமல் புலிகளின் தலைவர் பிரபாகரன் கையைப் பிசைந்து கொண்டிருந்தபோது , எம்.ஜி.ஆரிடம் இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அவரிடம் பிரபாகரன் புலிகளின் நிதிநெருக்கடி பற்றிச் சொல்லியிருக்கிறார்.

### ராஜீவ் கொலைக்குப் பின்னர் புலிகளுக்கெதிரான உணர்வலைகள்

அப்போது தன் பணப்பெட்டகத்துக்குப் பிரபாகரனை அழைத்துச் சென்ற எம்.ஜி.ஆர். ''இதிலிருந்து எத்தனை கோடி ரூபாய்கள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார். (தகவல் -அடேல் பாலசிங்கம் எழுதிய சுதந்திர வேட்கை என்ற நூல்) அந்தளவுக்குப் புலிகளுடனும் ஈழத்தமிழர்களுடனும் நெருக்கமாக இருந்த அ.தி.மு.க , ராஜீவ் கொலையுண்ட பின்னர் தன் நிலையைத் தடாலடியாக மாற்றிக்கொண்டது. ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது, தற்கொலைத் தாக்குதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் புலிகளுக்கு எதிரான உணர்வலைகள் இந்தியாவில் தோன்றின. ராஜீவை புலிகளே கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதன் காரணமாக அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க பதவிக் கதிரையில் இருந்து தூக்கியெறியப்பட்டது. புலிகளுக்கு எதிரான உணர்வலைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியில் அமர்ந்தார்



ஜெயலலிதா. தன்னுடைய ஆட்சியைத் தக்க வைப்பதற்காக இதுநாள்வரையும் இருந்த புலி அனுதாபத்தை தூர எறிந்தது அ.தி.மு.க. குளத்தோடு கோபித்துக் கொண்டு எதையோ கழுவாமல் இருந்ததைப் போன்று, புலிகளை எதிர்ப்பதாக நினைத்து ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு எதிரான செயற்பாடுகளிலும் அவர் இறங்கினார். ஜெயலலிதா புலிகளையும், ஈழத்தமிழர்களையும் கைவிட்டதனால் கருணாநிதி நம்மவர்களுக்கு கடவுளாக மாறினார். உருப்படியாக ஏதாவது செய்யாவிட்டாலும் அவ்வப்போது அறிக்கைகள், ஆவேச உரைகள், கவிதைகள் என்பன ஈழமக்களுக்காகக் கருணாநிதியால் வெளியிடப்பட்டன. எனினும் காலம் ஜெயலலிதா புலிகள் மீது கொண்டிருந்த மனக் கசப்பைக் கரைக்கத்தொடங்கியது. அத்தோடு, அவருடன் கூட்டணி அமைத்திருந்த ம.தி.மு.க, பா.ம.க முதலிய கட்சிகள் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. புலிகளை ஆதரிக்காவிட்டாலும் பரவாயில்லை ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுங்கள் என ஜெயலலிதாவை அவர்கள் நச்சரித்தனர்.

### பெருக்கெடுத்த ஈழ ஆதரவு

ஏனெனில் தமிழகத்தில் ஈழ ஆதரவு அலை மீண்டும் பெருக்கெடுத்திருந்தது. ஆகவே ஈழத்துக்காக குரல் கொடுத்தால் அதிகளவான வாக்குகளைப் பெறலாம் என இந்தக் கட்சிகள் ஜெயலலிதாவுக்கு எடுத்துரைத்தன. கரைப்பார் கரைக்க ஜெயலலிதா கரைந்தார்.

ஜெயலலிதாவின் கொள்கையில் அரசியலில் மாற்றங்கள் 'கண்' சிமிட்டின. ஈழத் தமிழர்களுக்காக 'கண்ணீர்' விடவும் தயாரானார் ஜெயா அம்மா. இதன் மூலம் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பெரியளவிலான வெற்றிகளைக் குவிக்க முடியாவிட்டாலும், அப்போதிருந்த அ.தி.மு.கவின் வாக்கு வங்கி ஜெயலலிதாவின் ஈழ ஆதரவுக் கொள்கையால் உயர்ந்திருந்தது.

பின்னர் ஈழமக்களுக்கு ஆதரவான அறிக்கைகளை ஜெயலலிதாவும் விடுக்கத் தொடங்கினார். தி.மு.க பக்கம் சாய்ந்திருந்த ஈழ ஆதரவுக்கொள்கையுடையவர்கள் ஜெயலலிதா பக்கம் மாறத்தொடங்கினர். ஸ்பெக்ட்ரம் ஊழல், குடும்ப ஆட்சி, போன்றவற்றால் தி.மு.க ஆட்சி மீது வெறுப்புற்றிருந்த தமிழக மக்கள் இப்போது ஜெயலலிதாவை தம் முதல்வராக அரியணையில் அமர்த்தியுள்ளனர். பதவிக்கு வந்த உடனேயே ''இலங்கைத் தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழருக்கு ...த் தருவாரா ...தா...?



வாழ்வு வளம்பெற என்னாலான எல்லாக் காரியங்களையும் செய்வேன். மத்திய அரசை இது விடயமாக வலியுறுத்துவேன். குறிப்பாக இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும், இலங்கை மீது பொருளாதார நெருக்கடி விதிக்கவேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்துவேன்'' என முழங்கினார். பலரும் வெற்றிபெற்ற மகிழ்வில் ஜெயலலிதா உதிர்த்த வெற்றுச்சொற்களாகவே இந்தக் கருத்துக்களையும் எடுத்துக் கொண்டனர். ஆயினும் முன்னரைப் போலல்லாது இந்த முறை அம்மாவின் நடவடிக்கைகளில் நிறைய மாற்றம். 5 வருடங்களிலும் அவர் நிறையக்கற்றுக் கொண்டிருந்தார். பழைய ஆணவம் இப்போது இல்லாமல் போயிருந்தது. வழமையாக படோபாத்தை விரும்பும் அவர் இப்போ தெல்லாம் தான் கலந்து கொள்ளும் வைபவங்களை மிக எளிமையாக நடத்துமாறு கட்டளையிட்டி ருக்கிறார். ஏராளமான பாராட்டு விழாக்களில் கலந்து கொள்ளமுடியாதென கறாராகச் சொல்லிவிட்டார். தேர்தல் வாக்குறுதி களை அவசரகதியில் நிறை வேற்றத்தொடங்கி விட்டார். ஆனாலும் தி.மு.க. கொண்டு வந்த திட்டங்களை ரத்துச் செய்வதில் மாத்திரம் பழைய ஜெயலலிதா தென்படுகின்றார்.

### சங்கடத்துக்குள் மஹிந்த தரப்பு

இந்தச் சந்தடிசாக்கில் ஈழத்தமிழர்கள் குறித்த தன்னுடைய வார்த்தைகளை அவர் காற்றில் பறக்க விடக்கூடும் என்று கருதப்பட்டது. ஏனெனில் ஜெயலலிதாவுடன் சுமுக உறவுகளை உருவாக்க இலங்கை பல்வேறு வழிகளில் முயன்றது. ஜெயலலிதாவின் நண்பரான ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு மூலம் கெஞ்சிக் கூத்தாடி அவரைச் சந்திக்க மிலிந்த மொறகொட சிறப்பு விமானத்தில் இந்தியா பறந்தார். இந்தச் சந்திப்பு இலங்கையுடன் ஜெயலலிதாவுக்கு இருந்த கசப்பை போக்கடித்துவிடும் என்று நம்பப்பட்டது. ஆனால் அவற்றைப் பொய்யாக்குவது போன்று இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றி, மஹிந்த தரப்பினரை சங்கடத்துக்குள் ஆழ்த்திவிட்டார். அத்துடன் இலங்கைக்கு

**காற்றுள்ள போதே தூற்றுவதற்கு ஈழத்தமிழர் வாழ்வு வளம் பெறவும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணை குறித்த நடவடிக்கைகளுக்கும் ஜெயலலிதா இப்போது இதய சுத்தியுடன் செயற்பட்டால் அது நிச்சயமாக ஈழத்தமிழர்களுக்கு ஒரு சிறு வெளிச்சத்தையேனும் பெற்றுக் கொடுக்கும். அத்தோடு ஜெயலலிதா உள்ளூர ஆசைப்படுகின்ற 'உலகத் தமிழர்களின் தலைவி' என்ற பெயரும் அவரை வந்தடையலாம். இப்போதே ஜெயலலிதாவுக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் செல்வாக்குக் கூடிவிட்டது.**

வந்த இந்திய மூவரணியின் தலைவரான சிவ்சங்கர் மேனனை அவசரமாக வரவழைத்து ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான தன்னுடைய கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.

கருணாநிதி வெற்றுச் சவடால்கள் விட்டுக் கொண்டிருந்தாலும் அவர் ஈழ மக்களுக்காக எதையுமே செய்யவில்லை என்ற கருத்து தமிழக மக்களிடம் மாத்திரமல்லாது புலம்பெயர் மக்கள், இலங்கைத்தமிழர்கள் என எல்லோரிடத்திலும் உண்டு. அதிலும் இறுதிப்போர் நடைபெற்ற காலங்களில் கருணாநிதி கபட நாடகமாடியதாலேயே ஈழமக்களுக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகவே பலரும் கருதுகின்றனர். பாவம்! வயதான காலத்தில் பாராட்டு விழாக்களுக்கும், கவர்ச்சி நடன விருந்துகளுக்கும், தன் வாரிசு களுக்கு அமைச்சுப் பதவிக்குமாக அலைந்து கொண்டிருந்த கருணாநிதிக்கு ஈழமக்கள் பற்றி அக்கறையில்லாமல் போனதில் ஆச்சரியமில்லைத்தான்.

### இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம்

இப்போது ஜெயலலிதா இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஏராளமான தமிழகக்கட்சிகளும், ஈழ அனுதாப அமைப்புகளும், புலம்பெயரிகளும் வாயார வாழ்த்தி வரவேற்றுள்ளனர். எனினும் வெறுமனே தீர்மானம் நிறைவேற்றியதோடல்லாமல், உரிய வகையில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதை நடைமுறைப்படுத்தினால் அந்தத் தீர்மானங்கள் பெறுமதி மிக்கவையாக மாறமுடி யும். ஸ்பெக்ட்ரம் ஊழல், அன்னா ஹசாரே மற்றும் ராம்தேவ் ஆகியோரின் ஊழலுக்கு எதிரான உண்ணாவிரதப் போர், தி.மு.க உறவில் ஏற்படத்தொடங்கியுள்ள விரிசல் என இந்திய மத்திய அரசு பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையில் , ஜெயலலிதாவின் பேரம் பேசும் சக்தி சடுதியாக உயர்ந்

**ஔண்யன்**

துள்ளது. எனவே தங்கள் ஆட்சியை தக்கவைக்க ஜெயலலிதாவின் கருத்துக்கு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு செவிசாய்க்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. காற்றுள்ள போதே தூற்றுவதற்கு- ஈழத்தமிழர் வாழ்வு வளம் பெறவும் , போர்க்குற்றம் தொடர்பான விசாரணை குறித்த நடவடிக்கைகளுக்கும்- ஜெயலலிதா இப்போது இதய சுத்தியுடன் செயற்பட்டால் அது நிச்சயமாக ஈழத்தமிழர்களுக்கு ஒரு சிறுவெளிச்சத்தையேனும் பெற்றுக்கொடுக்கும். அத்தோடு, ஜெயலலிதா உள்ளூர ஆசைப்படுகின்ற 'உலகத் தமிழர்களின் தலைவி' என்ற பெயரும் அவரை வந்தடையலாம். இப்போதே ஜெயலலிதாவுக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் செல்வாக்குக் கூடிவிட்டது. உரையாடல் ஒன்றின் போது ஒரு நண்பர் இவ்வாறு சொன்னார்-

''இப்ப வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எலெக்ஷன் நடந்தால் பிரசாரம் ஒண்டுமில்லாமலே ஜெயலலிதா இஞ்சயும் முதலமைச்சரா வரமுடியும்'' இவ்வாறு தன்மீது ஈழத்தமிழர்கள் மனதில் உருவாக்கத் தொடங்கியுள்ள நம்பிக்கைச் சுடரை [illegible]

## இடது கைப் பெருவிரல்



இதோ இருக்கிறாரே இவர் என்னுடைய வலது கை என்று சிலபேரை அறிமுகப்படுத்துவது உண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அவர் உருவம் பார்ப்பதற்கு வலது கை மாதிரி இருக்கிறது என் பது அர்த்தமல்ல.

மிகவும் நெருக்கமானவர், நம்பிக்கைக்கு உரியவர் அப்படியென்று அர்த்தம். அவர் இல்லாமல் நான் இல்லை என்று அர்த்தம்.

நம்பிக்கைக்கு உரியது வலது கையா? இடது கையா? என்று ஒரு கேள்வி கேட்டால்; இடது கை தான் என்று சில பேர் பதில் சொல்கிறார்கள். ஏன் தெரியுமா? பத்திரங்களில் எழுதி பதிவு செய்கிறேமே அதற்கு எந்த விரல் ரேகையைப் பதிவு செய்கிறோம். இடது கைப்பெருவிரலைத் தானே! அதனால் இடது கைதான் நம்பிக்கைக்குரிய கை என்று கூறுகிறார்கள்.

இப்படிச் சொல்பவர்கள் யார் தெரியுதா? விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை செய்பவர்கள்தான் அவர்களை சந்திப்பதற்கு நான்கு நாளுக்கு முன்னர் ஒருவர் கடற் கரையோரத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் ஒரு மாதிரியான ஆள். என்ன கேள்வி கேட்டாலும் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லவே மாட்டார் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லிவிடுவார். அது சரியா, தப்பா என்று யோசிக்க மாட்டார்.

ஒருநாள் அவரிடம் ''ஏன் முக்கியமான பத்திரங்களில் எல்லாம் இடது கைப்பெருவிரலால் பதிவுகளை மேற்கொள் கிறார்கள்? என்று கேட்டனர். ''வலது கை சாப்பிடும் கை; அதில் மை தடவினால் அதைக் கழுவுதற்கு கஸ்ரமாக இருக்கும். அதனால்தான் இடது கை விரலை உபயோகப் படுத்துகிறோம் என்றார்.

சரி இதற்கு மேல் இவரிடம் பேசிக் கொண்டிருக்க வேண் டாம் என்று விட்டுவிட்டு அதற்குப் பின்னர் விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை செய்பவர்கள் சிலரைச் சந்தித்து விபரம் கேட்டனர். அவர்கள் தான் சரியான தகவலைச் சொன் னார்கள்.

முதலில் நாம் எதற்காகப் பெருவிரல் ரேகையை மட்டும் பத்திரங்களில் பதிவு செய்கிறோம். மற்றைய நான்கு விரல்கள் மட்டும் ரேகை இல்லையா?

இருக்கிறது; இருந்தாலும் தாராளமாக இல்லை. மற்ற விரல்களைக் காட்டிலும் பெருவிரல் பெரியது. அதனால் தான் அதற்கு அந்தப் பெரியவர்.

மற்றைய விரல்களைக் காட்டிலும் பெருவிரல்களில் அதிகமாக விரல் ரேகைக் கோடுகள் இருக்கிறது. இப்படி அதிகமாக இருக்கிறதனால் அது நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய்வதற்கு உதவியாக இருக்கிறது. அதனாலேதான் பெருவிரலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சரி மற்ற விரல்களை விட பெருவிரல் மிகவும் வசதியாக இருக் கிறது. அதனால்தான் பெருவிரலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

மற்றைய பெருவிரல்கள் மிகவும் வசதியாக இருக்கிறது; அதுசரி அதற்கு வலது கைப் பெருவிரலை உபயோகப்படுத்தினால் என்ன? எதற்காக இடது கைப்பெருவிரலை மட்டும் உபயோகப்படுத்துகிறார்கள் என்று கேட்டார். இதற்கு ஓர் உதாரணம் உண்டு.

நாம் தாராளமாகத் தினசரி வேலைகளுக்கு அதிகமாக உபயோகப்படுத்துகின்ற கை எது? வல்து கை. வலது கை அதிகமாக உபயோகப்படுத்துவதனால் அந்தக் கையில் உள்ள விரல் ரேகைகள் தேய்வு அடைவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.

அதனால் ரேகைக்கோடுகள் தெளிவில்லாமல் போகலாம். ஆனால் இடது கையை நாம் அதிகம் பயன்படுத்தாத காரணத் தால் இடது கைப் பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளி வாகத் தெரிவதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

அதுமட்டுமல்ல அடிக்கடி உபயோகப்படுத்துவதனால் விபத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பும் அதிகம் உள்ளதோடு இடது கை பாதுகாப்பானது.

இடது கைப்பெருவிரலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இதனால்தான். ''ஒருத்தனுக்கு இடது கையில் கட்டை விரல் இல்லை. என்ன ஆகிவிட்டது'' என்று விசாரித்தார் ஒரு பெரியவர்.

ஓர் இயந்திரத்தில் தவறுதலாகக் கையை விட்டுவிட்டேன் என்றான். ''நல்லவேளை! வலது கை கட்டை விரல் போயிருந்தால் சாப்பிட முடியாமல் போயிருக்கும் என்றார் பெரியவர்.

''ஆமாம் பெரியவரே முதலில் வலது கைதான் இயந்திரத்தில் மாட்டிக் கொள்ளப் பார்த்தது. நீங்கள் சொன்னமாதிரி நானும் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் புத்திசாலித்தனமாக வலது கையை இழுத்துவிட்டு இடது கையைத் கொடுத்துவிட்டேன்'' என்றான்.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
## மங்கையர்க்கரசி நமசிவாயம்

(புங்குடுதீவு-5,
கொக்குவில் கிழக்கு)

மண்மகிழ
11.06.1927

கண்நெகிழ
14.05.2011


திதி: திரயோதசி

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலிகள், தொலைபேசி ஊடாக ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது வீட்டுக்கிருத்தியம் இன்று (13.06.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

43/1, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு. (1909) (38)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



## துரைராசா ஸ்ராலின் (சுரேஸ்)

மண்ணில்
01 . 04 . 1981

விண்ணில்
14 . 05 . 2011

எம் துணைவரே...!
குறுகிய வயதில் நெடுந்தூரம்
சென்று விட்ட-எம் பாதுகாவலரே...!
நிலையான சொந்தம்- நீயென
எண்ணியிருந்தோமே!- நீயெம்மை
நிலைகுலையச் செய்தது
எம் நெஞ்சத்துள் ஈட்டி போல் ஊடுருவுகின்றது
நோய் நொடியென ஒரு நாளேனும் கலங்காத உனக்கு
காலனவன் தந்தானே மிகப் பெரியபரிசு- மாரடைப்பு
ஆறுமா எம் மனம்?...??
மாலையிட்டவள் ஊமையாகி உறைந்து போக
பெத்தவள் பேதலித்து பேச்சிழக்க
உற்றவரெல்லாம் உளம் விம்மி விம்மியபடி
நீ போன இடம் தான் எங்கே ?... ? ... ?
உம் பிரிவின் துயர் ஆற்றாது இறஞ்சுகின்றோம் ஆனாலும்
ஓர் ஆறுதல் நீ உன் வாரிசுகளின் வடிவில் வாழ்வாயென
நீ வாழ்ந்து கொஞ்சக் காலமானாலும்- எம் மனங்களில்
கொஞ்சமும் இடத்தை விடாது
நிரப்பிவிட்டு சென்று விட்டாய்
உன் நினைவுகளில் மலரும்- உன்முகமும்
மாசு மறுவற்ற- உன் அன்பும்
என்றென்றும் எம் நெஞ்சத்தை விட்டகலாது


உன் நினைவுகளுடன் வாழும் நாம்....
மனைவி, பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

77A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (49,20,22)

# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் ஜெகராஜசிங்கம் (ஜெகா)

(வீடியோ புளைசர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும்)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை இல.30, சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 06, இல.32-5/1, றோகினி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திரு. சி.ஜெகராஜசிங்கம் (குட்டி) 10.06.2011 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி முத்துராணியின் அன்புக் கணவரும் திரு.திருமதி சிவப்பிரகாசம் தம்பதியரின் புதல்வனும் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு திருமதி மதியாபரணம் தம்பதியரின் மருமகனும் பரமநாதனின் (சிவன் ஸ்ரோர்ஸ் - கம்பஸ் சந்தி) சகோதரரும் சந்திரகலா, ராகுலன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் சிவகுமார், தர்மினி ஆகி யோரின் மாமனும் கராயத்திரி, பவித்திரா, மைத்திரி, மயூரி ஆகியோரின் பேரனும் நிரோசன், விசாகன், துவாரகன், பகிரேகா ஆகியோரின் பெரியப்பாவும் ராஜமனோ (ராஜி), சுகிர்தலஷ்மி, செல்வராஜா, முத்துலிங்கம், ராஜபூபதி, காலஞ் சென்றவர்களான மகாலஷ்மி, நவநீதநாயகி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் சண்முகவடிவு, மகேஸ்வரி, சாம்பசிவம், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, நடராஜா, செந்திவேல், செந்திலிங்கம் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான கொட்டடியைச் சேர்ந்த திரு. திருமதி இரத்தினசபாபதி- சரஸ்வதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.திருமதி பாலச்சந்திரன்- சுமங்கலாதேவி (சாரதா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் முற்பகல் 10 மணிமுதல் மாலை 6 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று மீண்டும் அஞ்சலிக்காகக் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி பின்னர் பொரளை இந்து மயானத்தில் மாலை 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.பரமநாதன் (சகோதரன்)
சிவன் ஸ்ரோர்ஸ்.

'சிவன் ஸ்ரோர்ஸ்',
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (சி/819)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் சோதிவேம்படி லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகாலிங்கம் (11.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் ஆதவன், சங்கீதா (லண்டன்), றமணன், கார்த்திகா, நர்மதா, அகிலன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, உதயகுமார் (லண்டன்), பாகேஸ்வரி, சிவகுமார் (சிவா ரெயிலறிங் சென்ரர்), கபில்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சோதிவேம்படி லேன், மானிப்பாய். (19:7) (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் புரியும் புனிதர் அந்தோனியார்

புதுமைகள் பல புரிய அருள் பெற்ற புனித அந்தோனியார் போத்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். இவரின் தாயார் அழகிய தேவாம்சம் பொருந்திய தெரசா, தந்தை மடுத்தீன் அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

இவர் தேவமாதாவில் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டவர், சிறுவயது முதலே தான் வேதசாட்சியாக வேண்டுமெனும் எண்ணம் கொண்டவர். இதன் காரணமாக புனித பரான்சிஸ்கன் துறவற சபையில் துறவியாக இணைந்தார். இவா் திருமுழுக்கினால் பெற்ற பேர்டினன் என்ற பெயரை மாற்றி அந்தோனி என அமைத்து அந்தோனியானார்.

அந்தோனியார்செபத்தாலும் கடின தவத்தாலும் இறை அன்புக்கு பாத்திரமானதால் புதுமைகள் பல புரியும் அருளையே அதிகமாக பெற்றார். திருச்சபையின் உயர்ந்த மறைவல்லுனரான புனித பொனவெஞ்சர், ''புதுமைகள் பெறவேண்டுமாயின் அந்தோனியாரிடம் செல்லுங்கள், ஏனெனில் உலகிலேயே புனிதரில் உயாந்த சலுகையை அவா் பெற்றிருக்கின்றார்'' என்றார்.

அக்காலத்தில் அகஸ்தினார் குருமடத்தில் நடைபெற்ற ஒரு புதிய குரவரின் முதற்பாடற் புசையில் மறையுரையாற்ற வேண்டிய குருவானவர் வராததால் அப்பணியை மடாதிபதி பணித்தார் அந்தோனியிடம், எந்தவித முன் ஆயத்தங்களும் இல்லாத போதும் அதனை பொறுப்பேற்று அர்த்தமுள்ள அழகான மறையுரைகளை ஆற்றினார். மடை திறந்த வெள்ளம் போல் மக்கள் கூட்டம், உள்ளத்தை ஊடுருவும் ஆழந்த கருத்துக்களை அற்புதர் வழங்கினார்,

இவ்வாறான போதனைகளை கேட்ட மக்கள் தங்கள் பாவ வாழ்க்கையை விட்டு விலகி இறைவன் அண்டையில் வந்தார்கள் அன்று முதல் அந்தோனியார் தலை சிறந்த போதகரானார்.

வேத நூல்களை வாசிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் விற்பன்னராக விளங்கிய அற்புதர் தனது வேதாகம புத்தகத்தின் மீது குழந்தை யேசு அமரும் பாக்கியத்தைப் பெற்றார், இறைவனின் தோழராகியவர் கோடி அற்புதங்கள் புரிந்து கோடி அற்புதரானார்.

தேவ நற்கருணையில் இறைவனின் பிரசன்னத்தைக் காண கழுதையை மண்டியிட வைத்தார். தொலைந்தவைகளை, காணாமற் போனவற்றை கண்டடையச் செய்வதில் வல்லமை பெற்றவராக விளங்கினார். பிசாசுகளை விரட்டியோட்டும் தந்திரம் தெரிந்தவர். நோயாளர் மட்டில் இரக்கம் கொண்டவர் தீராத உடல் நோய்களை குணமாக்கியவர். உளநோய்களையும் குணமாக்கி வந்தார்.

இப்புனிதர் தனது 36 ஆவது வயதில் 1231 ஆம் ஆண்டு ஆனி 13 ஆம் நாள் தேவதாயாரை புகழ்ந்து பாடிய வண்ணம் இப் பூவுலகை விட்டு விண்ணுலகு சென்றார். அவர் அடக்கம் செய்யப்பட்ட தினம் செவ்வாய் கிழமையாகும் அந்த நாளே புனிதருக்கு உரித்தானது. இறந்த மறுவருடமே புனிதர் என தேவ பீடங்களில் வணங்கப்படும் பாக்கியம் பெற்றார்.

வாழ்நாளிலே புதுமைகள் பல புரிந்த புனிதர் தனது மரணத்தின் பின்னரும் அற்புதங்கள் நிகழ்த்தியமை கண்டு வியப்புற்றவர்கள் 31 ஆண்டுகளின் பின்னர் அவருடைய கல்லறையை திறந்து பார்த்த போது அவருடைய நாக்கு



அழியாமல் காணப்பட்டது. அவ்வேளை பரவசத்தால் பிரான்சிஸ்கன் சபை தலைவர் தனது கரங்களில் அதனை ஏந்தி ''இறைவனை என்றும் புகழ்ந்து அவரை அன்பு செய்து மக்களை அவ ரிடம் அழைத்து சென்ற ஓ பாக்கியமான நாவே நீ இறைவனுடைய காட்சியில் எத்துணை மகிமை பெற்றிருக்கிறாய்'' என்றார்.

''நா'' அழியாவரம் பெற்றவரின் ஆலயங்கள் அனேகமானவை கரையோரப் பகுதிகளில் அமைந்திருப்பதைக் காணலாம்.

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயமும் கரையோரப் பகுதி கத்தோலிக்க மக்களை செறிவாகக் கொண்ட ஆலயமாகும். தமது பாதுகாவலராக புனித அந்தோனியாரைக் கொண்ட பாஷையூர்மக்கள் அலை கடல் சூழும் கடல் நடுவே மீனினங்களை வரவழைக்கும் புனிதரின் திருஉருவத்தையும் அமைத்து தமது தொழில் துறையைப் பாதுகாத்து வருவது இந்த ஊரின் சிறப்பம்சமாகும்.

கடந்த ஆண்டு புனித அந்தோனியாரின் திருப்பொருள் (இதயத்தசை) இத்தாலியில் உள்ள பதுவை நகரின் ஆலயத்தில் இருந்து பாஷையூர் அந்தோனியார் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டமை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

புனிதர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள் பக்தர்கள் புனிதர்களின் பரிந்துரையை நாடுவது திருச்சபையில் நிலவி வருகின்ற கத்தோலிக்க பாரம்பரியமாகும்.

டாக்டர் அ.பிறிற்ரோ டக்ளஸ்
பாஷையூர்.

மத மொழி இன வேறுபாடுகளின்றி தனது பதி தேடிவரும் பக்தர்களுக்கு அருள் வழங்கும் கோடியற்புதரே, போரினால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு கொண்டிருக்கும் மக்களையும் நினைவு கூர்ந்தருளும். யுத்தத்தினால் காணாமற் போனவர்களைக் கண்டடையவும், முகாம் வாழ்வு, சிறையில் அடைக்கபட்டோரை கண்ணோக்கும்.

இவ்வாறானவற்றால் உருவான கசப்பான வாழ்வு நிலை நலமானதாக மாறவும், சமூக சீரழிவுகளை உருவாக்கும் இளையதலை முறையினர் இறை பற்றில் வளர்க்கபடவும் ஆன்மீகக் குருக்கள் எமது சமூகத்தில் உருவாகவும், புகை, மதுபாவனை போதைப் பழக்கம் நீங்கவும், தொழில் துறைகள் சிறப்படையவும், அனைவரின் தேவைகள் வேண்டுதல்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடவும் தூய்மையின் லீலிமலரான புனித அந்தோனியாரை நம்பிக்கையுடன் வேண்டுவோம். நம்பிக்கையுடனே இறைவனைத் தேடு நாளைய பொழுதே அவன் வருவான்.


# நீங்காத நினைவுகள்

தோற்றம்
16 . 08 . 1933
மறைவு
25 . 08 . 2008



தோற்றம்
01 . 02 . 1939
மறைவு
26 . 05 . 2010

தா.இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர்,
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

திருமதி இ.மகேஸ்வரி

திதி: 13.06.2011

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
வழிகாட்டிய எமது பாசமிகு பெற்றோரின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.12, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

(49,50,22)- (சி/760)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாடுகள் தந்திரோபாய ரீதியிலேயே இலங்கையின் கொடிய யுத்தத்துக்கு அனுமதி

## எழுத்தாளர் அருந்ததி ராய் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்13

சர்வதேச நாடுகள் தமது பொருளாதார மற்றும் இரா ணுவ நலன்சார்ந்த தந்திரோபாய ரீதியில் இலங்கையில் இடம் பெற்ற கொடிய யுத்தத்துக்கு, அதனூடான இனப்படு கொலைக் கும் அனுமதித்துள்ளது என்று பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் தெரிவித்துள் ளார்.

மேலும் இந்த விடயத்தை முன்மாதிரியாகப் பின்பற்றி பிராந்திய நாடுகளும் செயற் பட வாய்ப்பை ஏற்படுத்தியுள் ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச தமிழ் செய்தியா ளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் லண்டன் சவுத்ஹோல் பகுதி யில் நடைபெற்ற சந்திப்பில் லண்டன் வாழ் புலம்பெயர் தமிழர்களும், சிங்கள ஊடகவி யலாளர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்தச் சந் திப்பில் கலந்து கொண்டு பேசும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் நடைபெற் றது இனப் படுகொலை தான் எனவும், அங்கு இடம்பெற்ற இந்தக்கொடுமையைப் போல் ஒன்றை நான் வேறெங்கும் காணவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற கொடிய போரைப்பற்றி எமக் குத் தெரியும். வைத்தியசாலை கள் மீது பலத்த குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள் நடத் தப்பட்டன. குறுகிய திறந்த வெளி நிலப்பரப்பை போர் அற்ற பாதுகாப்புப் பிரதேச மாக அறிவித்து அந்தப்பகுதி களுக்குள் மக்களை வரச் சொல்லி பின் அந்தப் பகுதிக் குள் தாக்குதல் மேற் கொள் ளப்பட்டமை யும் நாம் நன் றாக அறிந் துள்ள விட யம் தான்.



இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைசொல்லிக்கொண்டு அரசியலில் தம்மை நிலை நிறுத்திக்கொண்ட தமிழகத் தலைவர்களை நான் நன்கு அறிந்துள்ளேன்.

இதேவேளை தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு நான் சென்றபோது அங்கு அவர்கள் மிருகங்களைப் போல் நடத்தப்படுவதை அவ தானித் தேன்.

இந்த விடயத்தில் தமிழக அரசியல்வாதிகள் அக்கறை கொள்ளவில்லை எனவும் அருந்த திராய் மேலும் தெரிவித்தார். (வ)

# லிபிய விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்க அமைச்சர் ஹக்கீமிடம் வேண்டுகோள்

லிபிய நாட்டு நெருக்க டியை தீர்க்கும் நோக்கில் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்த முன்வருமாறு இலங்கை அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் அந்த நாட்டைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலக இஸ் லாமிய அழைப்பு இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

லிபியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போருக்கு சுமுகமான தீர்வு காணும் நோக் கில் லிபிய நாட்டு ஜனாதிபதி கேர்ணல் முஹம்மர் கடாபியுட னும், கிழக்கு லிபிய கிளர்ச்சி யாளர்களுடனும் பேச்சு நடத்தி அங்கு அமைதியை ஏற்படுத்த முன்வருமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்த லிபியா வைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கத்தின் இலங்கை பிரதிநிதி தரிக் அலீஷ் வேண்டு கோள் விடுத்தார்.

அதற்கான அனைத்து ஏற்பாடு களையும் மேற்கொள்ள தமது நாடு தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.இதேவேளை லிபியாவில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கான பேச்சில் மத்தி யஸ்தம் வகிப்பதைப் பொறுத் தவரை அதற்குத் தாம் தயாராக உள்ளதாகவும்-

ஆனால் உலகளாவிய தற் போதைய அரசியல் சூழ்நிலையில் அதற்கான வாய்ப்பு ஏற்ப டுவது சாத்திய மாகுமென தாம் நம்ப வில்லையென்றும், அந்த விடயத் தில் பலத்த எதிர்ப்புக ளுக்கு முகங்கொடுக்க நேரிட லாமென் றும் அமைச்சர் ஹக்கீம் பதில ளித்தார். லிபியத் தலைவர் கடா பிக்கும், கிளர்ச்சியாளர்களுக் கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் உக்கிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கத்தின் இலங் கைப் பிரதிநிதி தரிக் அலீஷ் நேற்று முன்தினம் பிற்பகல் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார். (வ)

# ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

பிரபலமான வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 4 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள்களையும் 400,000 ரூபா பணத்தையும் ஹங்வெல்ல பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித் துள்ளார்.

மேற்படி குற்றச்சம்பவம் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த வர்த்தகரிடம் நடத்திய விசாரணை மூலம், ஹங்வெல்ல பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 8.2 கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# இலங்கை கடற்படையின் 42 கொமாண்டோக்கள் இந்தியா பயணம்

கொழும்பு, ஜூன்.13

இந்திய- இலங்கை கடற் படைக ளுக்கு இடையிலான உறவுகளை பலப் படுத்திக் கொள்ளும் ஒரு நோக்கில் இலங்கைக் கடற்படையின் சிறப்புப் படைப்பிரிவைச் சேர்ந்த 42 கொமாண் டோக்கள் இந்தியாவுக்கு இரகசியப் பய ணம் ஒன்றை மேற்கொண் டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை சிறி லங்கா கடற்படைக் கொமாண் டோக்கள் மும்பை அனைத் துலக விமான நிலை யத்தை சென்றடைந்துள் ளனர்.

எனினும் இதுதொடர்பாக இரு நாட்டு அரசுகளும் எந்தவிதமான தகவலையும் வெளியிடவில்லை.

தீவிரவாத அச்சுறுத்தல்களை முறியடித்தல், சோமாலிய கடற் கொள்ளையர்களின் பிரச்சினை யைச் சமாளித்தல் உள்ளிட்ட விவ காரங்களில் இணைந்து செயற்படு வதற்காக உறவுகளைப் பலப்படுத் திக் கொள்ளவே இலங்கைக் கடற் படை கொமாண்டோக்கள் இந்தியா சென்றுள்ளனர்.

இதேவேளை தமது பயணத்தின் பிரதான நோக்கம் இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையில் பல மான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதே என்று மும்பை விமான நிலையத்தில் வைத்து இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

(வ)


# மாதகல் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா



## ஆசிச் செய்தி



அந்தோனியாரின் திருநாளில் அந்தோனியாரின் அன்பர்கள் அனைவருக்கும் மாதகல் பதியி லிருந்து புனித அந்தோனியாரின் ஆசீர்வேண்டி மன்றாடுகிறோம். புனித அந்தோனியார் இந்த உல கில் வாழ்க்கையில் கற்புநெறியும், வாக்கில் பூரண சுத்தமும் கொண்டு வாழ்ந் தவர். பிறருக்காக முழுவதும் தமது வாழ்வை அர்ப்பணித்தவர். இனைத்தையும் இறைவனுக்காக என்றும் வாழ்ந்த துறவி. அதனால் உண்மையான செல்வமாகிய இறைவனையே கையில் ஏந்தும் பேறுபெற்றார். இறை வாழ்வு இவ்வுலகில் சாத்தியம் என நிரூபித்தவர்.

புனித அந்தோனியார் இந்த உலகில் வாழ்க்கையில் அவரையும் 'ஆஷாடபூபதி' எனப் பிறர் மட்டுமல்ல அவரைச் சார்ந்தவர்களே எள்ளி நகையாடினர். தன்னால் முடியாத போது பிறரைத் தூற்றுதல் சாதாரண மாய் எல்லோரும் செய்வது தான். ஆனால் புனித அந்தோனியார் போன்ற இறையடியாரை நோக்குகையில் எமது வாழ்வில் உண் மையான இலட்சியப் பிடிப்பும், அதனால் வாழ்வில் ஆழமான தேடலும், தேடலின்போது பிறருக்குப் பயனும் ஈற்றில் இறையனுபவமும் கலக்க, எமது வாழ்வு உண்மையான மகிழ்வைக்காண முயற்சிப்போம். முயற்சிப்போருக்கு இறைவன் துணைசெய்கிறார்.

எல்லோரும் இன்புற்று வாழ்க.
சுவாமி சி. ஆனந்தக்குமார்.

## ஆலய வரலாறு

யாழ். மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த கிறிஸ்தவ கிராமங்களில் மாதகல் சரித்திரப் பெருமை வாய்ந்ததாகும். இந்தக் கிராமத்தில் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் 18ஆம் நூ.ஆரம் பத்தில் தற்போது புனித அந்தோனியார் ஆலயம் அமைந் துள்ள வளவில் புனித சவேரியார் ஆலயம் கொட்டிலாக அமைந்திருந்தது.புனித அந்தோணி யாரின் வாழ்வால் தூண்டப்பட்டு, அவரின் வேண்டு த லால் பல அற்புதங்களை அனுபவித்த மக்கள் புனித அந்தோனி யாரின் ஆலயம் அமைக்க 1868 இல் அடிக்கல் நாட்டி, 1888இல் பூரணப்படுத்தினர். கொத்திக் நாகரீக முறைப்படியான கட்டடமாக இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

மாதகல் பங்கின் முதல் ஆலயமான இது இறை வழிபாட்டிடமாக மட்டும் அல்லாமல், மாதகலில் கல்வியின் இதயமாய் இருக்கிற புனித சூசையப்பர் பாடசாலையின் தோற்றுவாயாகவும் இருந்துள்ளது. பல நன்மக்களின் வியர்வையாலும், பல இறையடியாரின் செபத் தாலும் இறைவன் தந்த இந்தத்தலம் சமய வேறுபாடின்றி மக்களுக்கு அருளின் ஊற்றிடமாக உள்ளது.

**மதுசியா வேளாண் களஞ்சியம்**
விவசாய கிருமி நாசினி, விதை தானியம்.
உரவகை வேளாண் பொருள்களை
பெற்றுக்கொள்ள தபாற்கந்தோர் அருகில்
மாதகல் & இளவாலை

என் கற்பாறையும் கோட்டையும் நீரே: உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்
தி.பா.31:3

**+ தாஸ்குமாரன் +**
வீடியோ & ஸ்ரூடியோ
நவீன புகைப்பட கலையகம் & திரையுலகம்
பிரதான வீதி, மாதகல்.
T-P: 0750479191, 0778999993

**அரசு எலக்ரோனிக்ஸ் சென்ரர்**
உங்கள் எலக்ரோனிக் வேலைகளை சிறந்த
முறையில் செய்து பெற்றுக்கொள்ள
தபாற்கந்தோர் அருகில், மாதகல்.
T.P: 0775302119

**அரசடி சந்திரன் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
மாதகல்.

**சிவறூபன் பல்பொருள் வாணிபம்**
தபாற்கந்தோர் வீதி,
மாதகல்.

**நேசன் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
மாதகல்.

**சிறீ முருகன் புத்தகசாலை & பத்திரிகை விநியோக முகவர்**
அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

**றொபின்சன் சிடி சிற்ரீ**
பிரதான வீதி,
மாதகல்.

**யனோஸ்ரன் சலூன்**
பிரதான வீதி,
மாதகல்.

**கோபிகா றைக்கிளின்**
பிரதான வீதி,
மாதகல்.

**மில்ரன் மீன்பிடி உபகரணங்கள் & பல்பொருள் வாணிபம்**
பிரதான வீதி, மாதகல்.
T.P: 0217902064

**மில்ரன் வெதுப்பகம் இனிய சுவை**
பிரதான வீதி, மாதகல்.
T.P: 0217902064

**நியூ அக்ரோ சென்ரர்**
விவசாய மருந்து பசளை உபகரணங்கள்
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா வழங்கி வரும் தகவல்களை தீவிரவாதிகளிடம் பாகிஸ்தான் தெரிவிப்பு

## அமெ. புலனாய்வுத்துறை குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஜூன் 13

தீவிரவாதிகள் குறித்து பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் தகவல்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் தீவிரவாதிகளிடம் தெரிவித்துவிடுவதால் அவர்கள் தப்பித்துவிடுகின்றனர் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானின் பழங்குடியினப் பகுதிகளில் செயற்படும் இரண்டு குண்டு தயாரிப்பு ஆலைகள் தொடர்பான தகவலை அமெரிக்க புலனாய்வு அமைப்பு அளித்திருந்தது. அதைக் கசியவிட்டதால் தீவிரவாதிகள் ஆலைகளைக் காலி செய்துவிட்டு தப்பியுள்ளனர் என்று சி.ஐ.ஏ. தலைவர் லியோன் பனெட்டா குற்றஞ்சாட்டினார்.

புலனாய்வுத் தகவல்களைக் காப்பதில் பாகிஸ்தான் இராணுவம் அலட்சியமாக இருக்கின்றது என அவர் கூறினார். வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்துக்கு வந்த பனெட்டா, அங்கு பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானி, பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சுஜா பாஷா ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது பாகிஸ்தானில் செயற்படும் பழைமைவாத தீவிரவாதிகளின் செயற்பாடுகள் குறித்து செயற்கைக்கோள் புகைப்படங்களைக் காட்டினார். பத்து நிமிடங்கள் ஒடக்கூடிய தணிக்கை செய்யப்பட்ட வீடியோ படக்காட்சியும் அப்போது திரையிடப்பட்டது. அதில் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பளித்த தகவல்கள் தீவிரவாதிகளிடம் பகிர்ந்துகொள்ளப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இதனால், ஆலை வளாகத்தை தீவிரவாதிகள் காலி செய்து செல்வதைப் போன்ற செயற்கைக்கோள் புகைப்படத்தையும் அவர் அதிகாரிகளிடம் காட்டினார்.

இதில் ஓர் ஆலை வசிரிஸ்தானின் வடக்குப் பகுதியில் மிரன்ஷா என்னுமிடத்திலும், மற்றொன்று தெற்குப் பகுதியிலும் அமைந்துள்ளன.

இதில் வடக்கு வசிரிஸ்தான் பகுதி ஆயுத ஆலையை ஹபிஸ் குல் பகதூர், சிராஜுதீன் ஹக்கானி ஆகியோர் நிர்வகித்தனர் எனக் கூறப்பட்டது.

இக்குழுவினர் ஆப்கனிலுள்ள அமெரிக்க, பன்னாட்டு ஆகிய படைகளுக்கெதிரான தாக்குதலை மேற்கொண்டு வந்தனர். அமெரிக்கா அளித்த தகவல்களை அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்ததால், இராணுவச் சிப்பாய்கள் சென்று தேடுதல் வேட்டை நடத்திய போது, அந்த ஆலையில் எவருமில்லையென்று பனெட்டா கூறினார்.

கடந்த மே 2ஆம் திகதி இஸ்லாமாபாத்திலுள்ள அபோதாபாத்தில் சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்க கடற்படை கொமோண்டோக்களால் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் ஐந்து முக்கிய தீவிரவாதிகள் பட்டியலை அமெரிக்கா அளித்தது. அதில் ஐமன் அல்-ஜவாஹிரி, இலியாஸ் காஷ்மீரி உள்ளிட்டோர் பற்றிய தகவலை அளித்தது. ஆனால், அவர்கள் தப்பித்துச் செல்ல பாகிஸ்தான் உதவியுள்ளது எனக் கூறப்படுகிறது.

இதை பாகிஸ்தான் இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒப்புக்கொண்டார் என வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

மே மாதம் பிற்பாதியில் தீவிரவாத குழுக்கள் வெடிகுண்டு தயாரிப்பது தொடர்பான செயற்கைக்கோள் எடுத்த வீடியோ படங்களை அமெரிக்கா அளித்துள்ளது.

மிரன்ஷாவிலுள்ள பெண்கள் பாடசாலையில் வெடிகுண்டு தயாரிக்கப்படுவதும் வெளியிடப்பட்டது. இந்தப் பாடசாலை வடக்கு வசிரிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் குழுக்களால் நடத்தப்பட்டது.

மற்றொன்று தெற்கு வசிரிஸ்தானில் அல்-குவைதா அமைப்பினரால் நடத்தப்பட்டது. ஜூன் 4ஆம் திகதி இந்த வெடிகுண்டு தயாரிப்பிடங்களைப் பாகிஸ்தான் இராணுவம் சென்று பார்த்தபோது அவையிரண்டும் காலி செய்யப்பட்டிருந்தன.

# முஷாரப்புக்கு நிரந்தர கைது பிடியாணை

இஸ்லாமாபாத்,ஜூன் 13,

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்புக்கு நீதிமன்றம் பிணையில் வெளிவரமுடியாத நிரந்தர கைது பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கொலை வழக்கு தொடர்பான விசாரணைக்கு முஷாரப் ஒத்துழைப்பு அளிக்காதமையைக் கண்டித்து அவருக்கு நிரந்தர கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை ராவல்பிண்டியிலுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது இந்த வழக்கு விசாரணைக்குப் பல தடவைகள் அழைப்பாணை அனுப்பியும் முஷாரப் ஆஜராகவில்லை என்று அரச தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதை விசாரித்த நீதிவான் ராணா நிசார் அகமது, அவருக்கு நிரந்தர கைது பிடியாணையைப் பிறப்பித்தார். இதற்கு முன்னர் முஷாரப்பை அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது. முஷாரப் 2009ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானிலிருந்து வெளியேறி லண்டனிலும், சில காலம் துபாயிலும் மாறி மாறி வசித்து வருகிறார்.

முஷாரப்பின் அசையும் மற்றும் அசையா சொத்துகளைப் பறிமுதல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று அரச சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

முஷாரப்பின் சொத்து விவரப் பட்டியலை அளிக்குமாறு நீதிவான் கூறினார். அடுத்த விசாரணையில் இந்த விவரத்தை அளிக்குமாறு கூறி வழக்கை இரண்டுவாரங்களுக்குத் தள்ளிவைத்தார்.

பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்ட வழக்கில் தற்கொலைப்படை தீவிரவாதி உட்பட 5 பேர் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படுகின்றனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு பல மாதங்களாக முஷாரப் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. கடந்த பெப்ரவரி மாதம் முஷாரப்பைத் தலை மறைவு குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது.

# இரட்டைக் குண்டுவெடிப்பு பாகிஸ்தானில் 34 பேர் சாவு

பெஷாவர், ஜூன் 13

பாகிஸ்தானின் பெஷாவர் நகரிலுள்ள கைபர் நவீன சந்தையில் நடந்த இரட்டை குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 34 பேர் பலியாகியுள்ளனர். 100 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் 6 பேரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியில் மின்தடை காரணமாக மீட்புப் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இந்த குண்டுவெடிப்புக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# ஆப்கனில் குண்டுவெடிப்பு; 21 பேர் உயிரிழப்பு

காபூல்,ஜூன் 13

ஆப்கனில் பல இடங்களில் நடந்த குண்டுவெடிப்புகளில் 21 பேர் பலியானார்கள். ஆப்கனின் கந்தகார் மாகாணத்திலுள்ள காக்ரெஜ் மாவட்டத்தில் சாலையோரத்தில் நடந்த குண்டுவெடிப்பில் புனித யாத்திரை மேற்கொண்டிருந்த 16 பேர் பலியானார்கள். இவர்களில் 8 குழந்தைகள், 5 பெண்கள், 3 ஆண்கள் ஆகியோர் அடங்குவர்.

இந்த குண்டுத் தாக்குதலை நேட்டோ படைகள் அல்லது ஆப்கன் இராணுவத்தினரை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதேபோல் ஆப்கனின் கோஸ் என்ற இடத்தில் தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 3 பொலிஸார் உட்பட4 பேர் பலியானார்கள்.

மத்திய மாகாணத்தில் காஜ்னி என்ற இடத்தில் ஐஸ்கிரீம் கடையில் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் ஒருவர் பலியானார்.



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன்(மத்தியில்) தான்சானியாவின் சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கியதும் இசைக் கலை ஞரிடம் பேசுகிறார். உடன் தான்சானியா வெளியுறவுத்துறை அமைச்சர் பெர்னாட் மெம்போ(இடது)காணப்படுகிறார்.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சூடு; சிரியாவில் 32 பேர் உயிரிழப்பு

டமாஸ்கஸ், ஜூன் 13

சிரியாவில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே நடந்த மோதலில் 32 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பாஷார்-அல்-ஆசாத் ஆட்சிக்கு எதிராக கடந்த 3 மாதங்களாகப் போராட்டம் நடந்து வருகிறது.

போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தினரும், பொலிஸாரும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். கலவரத்தில் ஈடுபட்ட மக்களை இராணுவம் சுட்டதில் இதுவரை 1,300 பேர் பலியாகியுள்ளனர்.

ஆனால் இதை அரசு மறுத்துள்ளது. இராணுவத்தினரும், பொலிஸாரும் 500 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என அறிவித்துள்ளது. தற்போது கலவரம் தீவிரமடைந்துள்ளது.

தொழுகை முடிந்த பின்னர் சிரியா நகர தெருக்களில் இறங்கி மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

குதிசிர்-அல், ஷகூர், லிடிப், மாரட் அல்-நுமான், லடாகியா, புஷ்ரா அல்-ஹரிர் உள்ளிட்ட நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது டாங்கிகள், ஹெலிக்கொப்டர்கள் மூலம் இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். அவற்றில் 32 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே இதுபோன்ற கொடூர தாக்குதல்களுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையில், ''சிரிய அரசு அபாயகரமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது கொடூரமும், வன்முறைச் சம்பவங்களும் கட்டவிழ்த்து விடப்படுவதை கைவிடவேண்டும்'' என எச்சரித்துள்ளது.

# லிபியாவில் இராணுவத் தாக்குதல்: புரட்சிப்படையினர் 22 பேர் மரணம்

திரிபோலி,ஜூன்13

லிபியாவில் ஜனாதிபதி கடாபி இராணுவம் நடத்தியத் தாக்குதலில் புரட்சிப்படையினர் 22 பேர் இறந்தனர்.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கெதிராக மக்கள் போராட்டம் நடத்திவருகிறனர். மக்கள் ஆதரவுடன் புரட்சிப்படையினர் சில நகரங்களை பிடித்து வைத்துள்ளனர்.

புரட்சிப்படையினருக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையில் நேட்டோ படைகள் ஜனாதிபதி கடாபியின் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி வருகிறன. புரட்சிப்படை வசமுள்ள டாப்னியா நகர் மீது வெள்ளிக்கிழமை கடாபியின் இராணுத்தினர் டாங்கிகள் மூலமும், ஏவுகணைகள் வீசியும் பயங்கரத் தாக்குதல் நடத்தினர்.

இதில் புரட்சிப்படையினர் 22 பேர் கொல்லப்பட்டனர். 61 பேர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஹிக்மா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த வைத்தியசாலை டாக்டர் ஐமான் தெரிவித்தார்.

# சீனாவில் கடும் மழை: 59 பேர் பலி

பீஜிங், ஜூன் 13

சீனாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஹூபேய், ஹூனான், ஜியாங்க்சி, குயிஷாவு ஆகிய நான்கு மாகாணங்களில், கடந்த சில நாட்களாக திடீரென பெய்த பெருமழையில் சிக்கி 50 பேர் பலியாயினர்; ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

கடந்த சில நாள்களாக இந்த நான்கு மாகாணங்களிலும் திடீரென பெருமழை பெய்து வருகிறது. ஹூபேய் மாகாணத்தில் மழையில் சிக்கி 25 பேர் பலியாயினர்; 12 பேர் மாயமாயினர்.

வெள்ள நீர் சூழ்ந்ததால், ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் வழக்கு பதிவு செய்து சிறையில் வாடும் ஈழத்தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும்

## முதல்வருக்கு திருமாவளவன் வலியுறுத்து

மதுரை, ஜூன் 13

ஈழத்தமிழர்கள் மீது பொய்யான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஏராளமானோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசு தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்யவேண்டும்; வழக்குகளையும் வாபஸ் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.

இதுதொடர்பாக மதுரையில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. நிறைவேற்றிய தீர்மானங்கள் வெறும் அவைக் குறிப்புகளாக மட்டுமே இருந்துவிடக் கூடாது.

இதற்கு முன், தமிழகத்தில் தி.மு.க. சிறுபான்மை அரசாக இருந்த காரணத்தால், இந்த விடயத்தில் மத்திய அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்க முடியாமல் போனது. ஆனால், தற்போது அ.தி.மு.க. பெரும்பான்மையுடன் உள்ளதால் அந்தக்கட்சியின் முழு வலிமையையும் பயன்படுத்தி, மத்திய அரசை செயற்படவைக்க வேண்டும். மேலும், காங்கிரஸுடன் - தி.மு.க. கூட்டணி நீடித்தால் தி.மு.க. சூழ்நிலைக் கைதியாகத்தான் இருக்கும்.

காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணியால் இழப்பும், பாதிப்பும் தி.மு.கவுக்கே என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். எனவே, இனியும் காங்கிரஸுடன் கூட்டணி நீடித்தால் தி.மு.க. சூழ்நிலைக் கைதியாக மட்டுமே இருக்கும் என்றார் அவர். (வ)

# மும்பையில் ஊடகவியலாளர் சுட்டுக் கொலை

மும்பையில் ''மிட்டே'' பத்திரிகையில் கடமையாற்றி வரும் ஜோதிர்மாய் தே என்னும் ஊடகவியலாளர் இனந்தெரியாத நபர்களால் நேற்று சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சனக்கூட்டம் நெருக்கமான இடத்தில் இருந்து இனந்தெரியாத நபர்களால் மேற்படி ஊடகவியலாளர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக மும்பை மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (வ)

# தமிழக சட்டசபைத் தீர்மானத்தால் இந்திய நலனுக்கு பெரிதும் பாதிப்பு

## இப்படிக் கூறுகிறார் சுப்பிரமணியசுவாமி

சென்னை,ஜூன் 13

தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமினால் இலங்கை மீது பொருளாதாரத் தடையைக்கோரி நிறைவேற்றிய தீர்மானம் நியாயமற்றது. இந்திய நலனை பாதிப்பதாக ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதற்கான காரணம் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களுடன் இலங்கை அரசுக்கு தொடர்பு இருப்பதாக குறிப்பிட்டதேயாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அந்த அறிக்கையில் விடுதலைப்புலிகளாலும் மனித உரிமை மீறப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

எனினும் விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்தவிதமான பிரஸ்தாபமும் சட்ட சபையில் ஜெயலிலதாவினால் மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை கொண்டு வருவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் அவர் கூறினார். (வ)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா எதுவித அனுதாபமும் காட்டக்கூடாது

## திராவிடர் கழகம் வலியுறுத்து

இலங்கை அரசுக்கு இந்திய அரசு எந்தவித ஆதரவோ, அனுதாபமோ காட்டாது எல்லா வகையான உதவிகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று திராவிடர் கழகத்தின் சட்டத்தரணிகள் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சென்னையிலுள்ள பெரியார் திடலில் திராவிடர் கழக சட்டத்தரணிகள் அணி கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. திராவிடர் கழக தலைவர் கி.வீர மணி தலைமையில்நடைபெற்றஇந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் லட் சக்கணக்கான தமிழர்களை கொன்று குவித்தும், எஞ்சிய தமிழர்களை முள்வேலி முகாம் களில் அடைத்தும் நடைப்பிணங்களைப் போல நடக்க வைத்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீது உரிய சட்ட நட்வடிக்கை எடுத்து குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டனை கொடுக்கவேண்டும் என்று என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவை நலன் பாராட்டு



(40-27)(1880)

திருமதி
ஜெயமணி– கந்தசாமி
இன்று (13.06.2011)
எமது பாடசாலையில் 10 வருட சேவையினையும் தனது 34 வருட ஆசிரிய சேவையிலும் இருந்து ஓய்வுபெறும் இவ்வாசிரியையை எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம், ஆசிரியர் நலன் பேண் ஒன்றியம்.

# ஊழலுக்கு எதிராக பா.ஜ.க. ஜீன் 23 முதல் போராட்டம்

ஊழலுக்கு எதிராக எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை பா.ஜ.க. நாடு தழுவிய போராட்டத்தை நடத்த வுள்ளதாக அந்தக் கட்சியின் மூத்த தலைவர் வெங்கய்ய நாயுடு தெரிவித்தார். இது குறித்து செய்தியாளர்களிடம் கடந்த வெள்ளிக்கிழமை அவர் பேசியதாவது:

ஊழலுக்கு எதிராக எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நாடு தழுவிய அளவில் பா.ஜ.க. சார்பில் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

நாடு முழுவதும் 100 இடங்களில் நடைபெறும் இந்த போராட்டங்களில் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். ஊழல் குற்றச் சாட்டுக்கு ஆளாகியுள்ள மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அமைச்சர் பதவியில் இருந்து ராஜிநாமா செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மைகள் வெளிவரும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதே பா.ஜ.க. வின் நிலைப்பாடு என்றார் அவர். (வ)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 17.06.2011 காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி இலக்கங்கள்
1300 சிகப்பு
தனுசு
20 24 26 28
10-06-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 246,307 | 20/- | 4,926,140/- |
| 2 இலக்கங்கள் | 22,622 | 40/- | 904,880/- |
| 1 இல. + லக்கினம் | 22,378 | 60/- | 1,342,680/- |
| 2 இல. + லக்கினம் | 2,063 | 200/- | 412,600/- |
| 3 இலக்கங்கள் | 605 | 1000/- | 605,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,151,300/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 657 | | 926,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 294,691 | | 12,077,800/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
16 19 31 33
ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 653 | 500/- | 326,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 657 | | 926,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.
06, கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி.
K.K.S Road. 021 222 8680, 077 5925088
(1825)

**German, Swiss மொழிகள்**

German, Swis மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
தொடர்புக்கு: 10 Palaly road, Jaffna.
T.P. 0771604823

**காணி விற்பனை**

பளையில் ஏ-9 வீதிக்குச் சமீபமாக கச்சாய்வெளி தோட்டக் காணி 6 ஏக்கர் விற்பனைக்குண்டு.
தொலைபேசி இலக்கம்: 0774346417

**இந்தியாவில் உயர்கல்வி**
**STUDY IN INDIA**

Anna University (SSM Eng.College)
Bangalore University (Indo Asian Academy)
Periyar University (SSM Arts & Sci.College)

**Available DEGREE / ENGINEERING Courses**
Mechanical Engineering, Electrical, Electronics, Communication Engineering, Computer Science, Information Technology, Textile Technology & Chemistry, Bio Technology, Microbiology, BBA, B.com, Computer Applications, BBM, Bsc

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் யாவும் Sri Lanka University Grant Commission இனால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, UK, USA, ஆகிய நாடுகளில் குடும்ப சகிதம் வதிவுரிமை (PR) பெற வாய்ப்புண்டு.

◆ IELTS தேவையில்லை
◆ Bank Sponsor தேவையில்லை
◆ தகைமை: G.C.E A/L - 3 Passes

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருட Govt. Diploma (Engineering, Bio, Management) பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

**Call : 0777 767818 / 0776 209887**
SIC CENTER, 101/35, STANLY ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவ்சங்கர் மேனன் பயணம் கண்துடைப்பு;

# காங்கிரஸ் அரசு ஆட்சியில் இருக்கும்வரை ஈழத் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது

**ராதாகிருஷ்ணன் கருத்து**

சென்னை, ஜூன் 13

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான இந்தியக் குழுவினருக்கும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வெறும் கண் துடைப்பு நாடகமாகும்.

அதாவது காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் வரை ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது.

இவ்வாறு தமிழக பா.ஜனதா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறுகையில்:

கடந்த 2009 இல் இலங்கை தமிழர்கள் மீது மிகக் கொடுமையான முறையில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும், அறிவிக்கப்படாத யுத்தம் நடத்திய போதும் இலங்கை அரசுக்குத் துணையாக இருந்தது மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ஏறக்குறைய கட்சிப் பிரதிநிதி போல இலங்கைக்குச் சென்று செயற்பட்டவர் சிவ்சங்கரமேனன். அவர் சென்ற பின்னர்தான் வெளியே தெரியாமல் இலங்கை அரசு தமிழர்களைக் கொன்று குவித்தது.

அப்படிப்பட்ட சிவ்சங்கர மேனனை இலங்கைக்கு அனுப்பியிருப்பதால் பலன் கிடைக்கும் என்று எதிர் பார்ப்பது முட்டாள் தனம். தற்போது இருக்கும் காங்கிரஸ் அரசு இலங்கை தமிழர்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படுத்துமா என்பது சந்தேகத்துக்குரிய விடயம்தான்.



எனவே சட்டபேரவையில் எந்தளவுக்கு தீர்மானம் நிறைவேற்றினாலும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்வரை இலங்கைத் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது. இவ்வாறு பொன். ராதா கிருஷ்ணன் கூறினார். (வ)

# நக்சலைட்டுகளின் தாக்குதல்களில் 3 நாள்களில் 20 பொலிஸார் பலி

அண்மைக் காலமாக நக்சலைட்டுகளின் கொடூரமான தாக்குதல் இல்லாமல் இருந்த வேளையில் நேற்று அதிகாலையில் பொலிஸ் நிலையத்தில் புகுந்து மாவோ., நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் 3 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் கண்ணி வெடி கண்டறிந்து செயல் இழக்கச் செய்யும் வாகனமே இந்தத் தாக்குதலில் உருக்குலைந்து போனது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சட்டீஸ்கர், ஜார்கண்ட் மாநிலங்களில் தொடர்ந்து நடந்து வந்த நக்சலைட் டுகளின் அட்டகாசம் மீண்டும் தலை தூக்கியுள்ளது.

சட்டீஸ்கர் மாநிலம் தண்டவத்தா மாவட்டம் காதேகல்யான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீதம் பகுதியில் கண்ணி வெடி கண்டு பிடித்து அழிக்கும் வாகனத்தில் சென்ற பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் 7 பேர் பொலிஸ் அதிகாரிகள் ஆவர். இந்தநிலையில் நேற்று முன்தினம் கொண்டாவிலில் உள்ள பெஜூ பொலிஸ் அலுவலகத்துக்குள் நுழைந்த நக்சலைட்டுகள் அங்கிருந்த பொலிஸ்காரர்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தினர். இதில் 3 பொலிஸார் சம்பவம் இடம் பெற்ற அலுவலகத்துக்குள்ளேயே பலியாகினர்.

கடந்த 3 நாள்களில் மொத்தம் 20 பொலிஸார் கொல்லப் பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# ராகுல்காந்தி ஆரம்பித்து வைத்த இணையத்தளத்தில் 'தில்லு முல்லு'!

டில்லி, ஜூன்.13

மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக ராகுல் காந்தியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இரண்டு இணையத்தளங்களிலுமுள்ள முக்கிய பகுதிகள் செயற்படாதவாறு முடக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி உத்தரப் பிரதேச மாநிலம் ரேபரேலி தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரது மகனும் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ராகுல்காந்தி அமேதி தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி உள்ளார்.

அமேதி, ரேபரேலி தொகுதி மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக அந்தத் தொகுதிகளின் பெயரில் இரண்டு இணையத்தளங்களை ராகுல்காந்தி உருவாக்கி இருந்தார். தொகுதி மக்கள் அந்த இணையத்தளங்கள் வழியாக ஈ.மெயில் அனுப்பி விளக்கம் பெறவும் வசதி செய்யப்பட்டு இருந்தது.

இந்த இரு இணையத் தளங்களையும் தினமும் கண்காணித்து மக்கள் குறைகளைத் தீர்க்க தொழில்நுட்பக்குழு ஒன்றையும் ராகுல் காந்தி பணியில் அமர்த்தி இருந்தார். அந்த குழு ராகுல்காந்தி வீட்டில் இருந்து பணியாற்றி வந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து 19ஆம் திகதிக்குட்பட்ட காலத்தில் இந்த இரு இணையத் தளங்களிலும் தில்லுமுல்லு செய்யப்பட்டது. இரு தளங்களிலும் முக்கிய பகுதிகள் முடக்கப்பட்டிருந்தன. கடவுச் சொற்கள் செயற்பட முடியாதபடி செய்யப்பட்டிருந்தன.

மேலும் இந்த இரு இணையத் தளத்துக்கு அனுப்பும் ஈ. மெயில்கள், அரியானாவில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரிக்கு செல்லும் வகையில் தில்லு முல்லு செய்து இருந்தது. இது குறித்து டில்லி பொலிஸாரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. டில்லி சைபர்கிரைம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (வ)

# பழங்குடியினருக்கு பல்கலைக்கழகம் அமைக்குமாறு கோரிக்கை

ஸ்ரீநகர், ஜூன் 13

பழங்குடியினருக்கான பல்கலைக்கழகம் ஒன்று காஷ்மீரில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளதாக அந்த அமைப்பின் செயலர் ஜவைத் ரஹி, நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குஜ்ஜார் சமூகத்தினரால் நிர்வகிக்கப்படும் பழங்குடியின ஆராய்ச்சி மற்றும் கலாசார அமைப்பு, இதுதொடர்பாக பிரதமருக்கும், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திற்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காஷ்மீரில் பழங்குடியினருக்கான பல்கலைக்கழகம் அமைப்பதன் அவசியத்தை இரு ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசிடம் தெரிவித்தோம். அதற்கான கட்டாயம் எழுந்துள்ளது.

எனவே, அரசு எமது கோரிக்கையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று தனது அறிக்கையில் ஜவைத் ரஹி தெரிவித்துள்ளார். (வ)

**வெளியீடு.....**



'இந்திய அரசியலில் ராகுல்காந்தி' என்னும் நூல் வெளி யீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் நூலை வெளியிட்டு வைக்க, முன்னாள் அமைச்சர் கார் வேந்தன் பெற்றுக் கொள்கிறார். அருகில் நூலாசிரியர் செல்வ ராஜ்.

# இலங்கை தமிழர்கள் அமைதியாக வாழ இறைவனை வேண்டிக்கொள்கிறேன்

**நடிகர் விஜய்**

இலங்கை தமிழர்கள் அமைதியோடும், உரிமைகளோடும் வாழ இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என்று நடிகர் விஜய் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து போர்க் குற்றம் புரிந்ததாக ஐ.நா. சபையால் போர்க் குற்றவாளி என்று அடையாளம் காட்டப் பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

உரிமைகளையும், உடைமைகளையும், உறவுகளையும் இழந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஆறுதலான விடயம்.

எதிர்வரும் காலங்களில் இலங்கை தமிழர்கள் அமைதியோடும், சந்தோஷத் தோடும் சமமான உரிமைகளோடும் வாழ வேண்டும். அதற்காக இறைவனை வேண்டிக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (வ)

# கனிமொழி பிணை மனு இன்று விசாரணைக்கு

டில்லி,ஜூன்.13

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் உள்ள கனிமொழியின் பிணை மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் உள்ள கனிமொழி மற்றும் கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார் ஆகியோர் தங்களை பிணையில் செல்ல அனுமதி கோரி டில்லி மேற்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனு நிராகரிப்புச் செய்யப்பட்டது. இதையடுத்து இருவரும் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர். இந்த மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட உள்ளது. (வ)

# மனித குலத்தின் முதலாவது குற்றவாளி ராஜபக்ஷ அவர் தண்டிக்கப்பட வேண்டும் - கம்யூ.பாண்டியன்

திருக்கோவிலூர், ஜூன் 13

மனித குலத்தின் முதல் துரோகி இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

மனித குலத்தின் முதல் துரோகி இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ திருக்கோவிலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இலங்கை இனப்படுகொலைக்கு காரணமானவர்களை சர்வதேச நீதிமன்றம் தண்டிக்க வலியுறுத்தி நேற்று முன்தினம் கருத்தரங்கு இடம்பெற்றது.

இலங்கையில் வாழும் எமது சொந்தங்களை, ஒரு பாவமும் தெரியாத அந்த பச்சிளம் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்துகிற புனிதப் போரில் கட்சி பாகுபாடின்றி அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார்.

எனவே இலங்கைத் தமிழர்களுக்காக நாம் குரல் எழுப்ப வேண்டிய ஒரு கடமை ஏற்பட்டுள்ளது. அந்தக் கடமையைத் தான் இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

இலங்கையில் எமது சொந்தங்கள் கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு, பல்வேறு சித்திர வதைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்களை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ அடித்துக் கொன்றாலும் கொல்வார். சுட்டாலும் சுடுவார்.

இவ்வாறு 6 ஆண்டுகளாக எமது மக்கள் அங்கு பல்வேறு அச்சத்துக்கு இடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அரசு இவ்வாறு தமிழர்களை மட்டும் கொல்லவில்லை, நேர்மையான மனிதர்கள் அனைவரையும் கொன்றழித்து வருகின்றது. எனவே மனித குலத்தின் முதலாவது துரோகியான ராஜபக்ஷ தண்டிக்கப்பட வேண்டும். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தவறிவிட்டன ஐ.நா.அரசியல் நிறுவனங்கள்

## போருக்கான காரண காரியங்கள் இரண்டு வருடங்களாகியும் அப்படியே இருக்கின்றன

(i) தாக்குதலைத் தடுப்பதற்காகப் பொதுமக்களைக் கேடயமாகப் பாவித்தல்.

(ii) தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பியோட முனைந்தவர்களைக் கொலை செய்தல்.

(iii) பொதுமக்களுக்கு அருகே இருந்து இராணுவத் தளபாடங்களைப் பிரயோகித்தல்.

(iv) வலுக்கட்டாயமாக சிறுவர்களை அணிதிரட்டல்.

(v) தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைப் படுகொலைசெய்தல்.

423. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் என்ன நேர்ந்தது என்ற குழுவின் மதிப்பீடு மற்றும் அதனைத் தொடரும் அரசியல், சட்ட மற்றும் நல்லொழுக்கக் கடப்பாடுகள், தான் 'சூனிய பொது மக்கள் தேசம்' என்ற கொள்கையுடன் ஒன்றை மேற்கொண்டதாகவும் அதனால் எந்தத் தவறுக்கும் அது பொறுப்பில்லை என்ற அரசின் நிலைப்பாட்டுக்கு அது முற்றிலும் மாறுபட்டதாக உள் ளது.

### 2. குற்றச்சாட்டுக்கள் சட்ட மதிப்பீடு

424. நிரூபிக்கப்பட்டால், இரு தரப்பினரினதும் இந்த நம்பகமான குற்றச்சாட்டுகள், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் பெரிய மீறல்களாக அமையும். அவற்றுள் பல போர்க்குற்றங்களாகவும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களாகவும் இருக்கும். செயல்களில் ஈடுபடும் தனிநபர்கள் மற்றும் இராணுவக் கட்டளைத் தளபதிகள் அத்துடன் சிவிலியன் மேற்பார்வையாளர்கள் ஆகிய இரு சாராரையும் குற்றத்துக்கான பொறுப்பு மேவும். நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இலங்கையின் சட்டத்தின் கீழான பல குற்றங்களையும் கொண்டுள்ளன.

425. சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் மீது நடவடிக்கை எடுப்பது தெரிவு அல்லது கொள்கை சார்ந்த விடயமல்ல; உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் அது ஒரு கடப்பாடாகும். நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்நாட்டு ஆயுதந்தரித்த போராட்டத்துக்கு ஏற்புடைத்தான சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், உடனடியாக மற்றும் நேர்மையான புலனாய்வுகளை மேற்கொண்டு, சாட்சியங்கள் மூலம் நியாயப்படுத்தப்பட்டால், ஆகக்கூடிய பொறுப்பைக் கொண்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத்தின் கீழான கடமையை அரசுக்குத் தோற்றுவிக்கிறது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 39**

### 3. சமநிலையற்ற போர் நடவடிக்கை மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு

426. பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான வெற்றிகரமானதொரு வழி என இலங்கை அரசு அதன் இராணுவ வியூகத்தை மேம்படுத்த விளைகிறதோடு, யுத்தத்தின் 'சமநிலையற்ற' சுபாவம் சில சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதிகளை ஏற்புடைத்தாகாததாக அல்லது குறைந்த பட்சம் மீளாய்வு செய்யப்படவேண்டும் என்பதாக்கியுள்ளதென்ற கருத்தைத் தெரிவித்துள்ளது. யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் அது சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு அப்பாற்பட்டது எனக் கூறிவந்துள்ளது. சர்வ தேசச் சட்டத்தின் கீழ் தேசிய பாதுகாப் புக்காகவும் அதனை ஆயுதத் தாக்குதலுக்கு எதிராகப் பாதுகாத்துக்கொள்வதற்காகவுமான ஒரு தேசத்தின் உரிமையை இனங்காணும் அதேவேளை யில், அத்தகைய நியாயமான தேவை களை நிறைவு செய்வதற்காக மேற் கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளும் சர்வதேச சட்டத்துக்கு இயைவாக இருக்க வேண்டும் என்பதை குழு வலியுறுத்துகிறது. இலங்கையில் பிரயோகிக்கப்பட்டவை உள்ளிட்ட சில தற்கால யுத்த நடவடிக்கை அமைப் புக்களுக்கு சர்வதேச மனிதாபிமான சட்டம் ஏற்றதாக இல்லை என்ற கருத்தை குழு உறுதியாக நிராகரிக்கிறது. உண்மை யிலேயே, யுத்த நிலைமைகளில் பொது மக்களின் பாதுகாப்புக்கான காப்பீடு களை அதிகரிப்பதற்கான கலந்துரை யாடல் தேவைப்படுகிறது.

427. இது தொடர்பாக யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது, ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்புகளும் நிறுவனங்களும் பொதுமக்களைப் பாதுகாத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளன. மேலும், சிரேஷ்ட சர்வதேச அதிகாரிகள் பகிரங்கமாகவும் தனியாகவும் பொதுமக்களை அது பாதுகாக்கவேண்டும் எனவும் ஆஸ்பத்திரிகள் மற்றும் ஐ.நா.அல்லது ஐ.சி.ஆர்.சி. அமைவிடங்களைச் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாக்காமல் இருக்க வேண்டும் எனவும் அரசிடம் கேட்டுக் கொண்டபோதிலும், உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையைப் பகிரங்கமாகப் பிரயோகித்தல் வன்னி நிகழ்வுகளின்போது பொதுமக்கள் பாதுகாப்புக்கான வேண்டுகோள்களை வலுப்படுத்தியிருக்கும்.

### 4. தொடரும் அரசின் மீறல்கள்

428. யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கழிந்தபின்பும், இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே இனத்துவ - தேசியவாத மோதல்களுக்குக் காரணமாயிருந்த காரணகாரியங்கள் அப்படியே தீர்க்கப்படாமல் இருப்பதோடு மனித உரிமைகள் மீறல்களும் தொடர்கின்றன. அவற்றுள் சில அரசின் ஆள்களால் அல்லது அரச அனுசரணையுடனான துணை இராணுவக் குழுக்களால் மேற்கொள்ளப்படுவதான அத்தகைய நடவடிக்கைகள் பற்றி முரண்பாடற்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன. விசாரணையின்றித் தடுத்து வைத்தல், ஆள் கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல்கள், கொலைகள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் அத்துடன் பயமுறுத்தும் வகையிலான ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றை இவை உள்ளடக்குகின்றன. இந்தச் சூழ்நிலைப் பொருத்தத்தில் நோக்கும்போது, வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் உயிர்பிழைத்தவர்களும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமலிருக்கிறது*(வளரும்)*

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை செல்வநாயகம்

சட்டநாதர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வநாயகம் 10.06.2011 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா மற்றும் ராசம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும் சுலோசனாவின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் (ராசா), தியாகராஜா (கிளி, கனடா), பாலசரஸ்வதி, சுலோசனாதேவி (கனடா), வசந்தராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகிலா (கனடா), மகிந்தன் (கனடா), பொவித்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமார் (கனடா), மனுஷா (கனடா) ஆகியோரின் மாமனாரும், சரன், ஸ்ரேசா ஆகியோரின் அன்புப் பேரனும், பிருந்தா (பிரான்ஸ்), திலக்ஷன் (பிரான்ஸ்), சலோமியா (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய செம்மணி வீதி,**
**வேளா தோப்பு,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்
**அண்ணர் - பாலசுப்பிரமணியம் (ராசா) குடும்பத்தினர்.**

(1918) (20-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைத்து வாழ வேண்டும் என்ற உறுதியுடன் சுயதொழிலில் ஈடுபட்டுவரும் 6 பிள்ளைகளின் தாய்




''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பது போல் கிடைப்பதை வைத்தே சந்தோசமடைவது தான் மனிதனுக்குள்ள மகத்தான குணங்களில் ஒன்று.

இந்த வகையில் ''எனக்கு 100 ரூபா இலாபம் கிடைத்தாலும் அதுவே அன்று முழுவதும் சம்பாதித்த மிகப் பெரிய தொகையாக நினைக்கின்றேன்'' என்று தனது மனதின் ஆழத்தில் உள்ள சந்தோசத்தை வெளிப்படுத்திக் கூறுகிறார் பெரியதம்பி தவமலர்.

விடயமே கூறாமல் ஒருவரைப் பற்றிக் கூறப்படுகிறதே இவர் யார் என்று கேட்கிறீர்களா? அவர் தான் இவர் என்பதுபோல கடந்த 5 வருடங்களாக 'கச்சான்' விற்பனை செய்து தனது செலவுகளையும் குடும்பத்தின் செலவுகளையும் பார்ப்பதற்காக சுயதொழில் செய்பவர்தான் இந்தத் தாய்.

வட்டுக்கோட்டை, நவாலி சங்கரத்தை துணைவி என்னும் இடத்தைச் சேர்ந்த இவர் 53 வயதைக் கடந்தும் தளராது கடந்த 5 வருடங்களாக யாழ்.நகரின் பஸ்தரிப்பிடத்தில் கச்சான் விற்கும் சுயதொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

ஆறு பிள்ளைகளின் தாயான இவர் தனது கணவரின் இறப்புக்குப் பின் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு தனக்குரிய சுயதொழிலாக இந்தத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். இவரது வருமானம் தான் குடும்பத்துக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது.

இவரின் இரண்டு பிள்ளைகள் திருமணம் செய்தவர்கள். ஏனைய நான்கு பிள்ளைகளில் இரண்டு பிள் ளைகள் பெண்பிள்ளைகள். இதனால் இவர்களுக் குத் தேவையான கற்றல் வசதிகளில் இருந்து அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப் பதும் இவரது கடமையாக உள்ளது.

முதுமைப் பருவத்தை அடைந்தாலும் அதைப் பொருட்படுத்தாது மிகவும் துடிதுடிப்புடன் செயற்படுகிறார்.

இதனாலோ என்னவோ இவரைக் கடந்து தமது தேவைகளுக்காகச் செல்வோர் கட்டாயம் கச்சான் சரை வாங்காமல் செல்லமாட்டார்கள். நான் அவரை நேர்காணல் செய்யும்போது ஒவ்வொரு வசனத்தை அவர் கதைக்கும் போதும் ஒவ்வொருவர் வந்து கச்சான் சரை வாங்கிய வண்ணமே இருந்தார்கள். இதனைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்ததோடு நானும் கச்சான் வாங்கிச் சாப்பிட்டால் என்ன என்ற அளவுக்கு மனம் அலை பாய்ந்தது. இதற்குக் காரணம் அந்தளவுக்கு வியாபாரம் சூடுபிடித்திருந்தது.

ஒருநாள் வியாபாரத்துக்குத் தேவையான கச்சான்களை இரண்டாயிரம் ரூபா கொடுத்து யாழ். நகரில் உள்ள கடைகளில் வாங்கி அதனை வீட்டுக்குக் கொண்டு சென்று வறுத்து சுமைகளைப் பார்க்காது நவாலியில் இருந்து பேருந்தில் கொண்டுவந்து விற்பனை செய்ய ஆரம்பித்தால் அன்றைய தினமே அனைத்தும் விற்கப்பட்டு விடுமாம்.

2000 ரூபா முதலீடு செய்யும்போது அதற்கேற்றால் போல் இலாபமும் கிடைப்பதால் நான் எதற்கும் அஞ்சுவதில்லை என்று தனது தன்னம்பிக்கையை வெளிப்படுத்தினர்.

தினமும் கச்சானைப் பிரதானமாக இவர் விற்பனை செய்தாலும் காலத்துக்கேற்ப மாம்பழம், ஜம்பு, பலாப்பழம், ஈச்சம்பழம் போன்றவற்றையும் விற்பனை செய்து வருகிறார்.

இவ்வாறு இருந்த இடத்தில் தன்மானத்துடன் உழைத்து வாழ வேண்டும் என்னும் குறிக்கோளை மனதில் வைத்துக்கொண்டு மழை, வெயில் பாராது வியாபாரத்தில் கண்ணாக இருக்கும் இவரது உழைப்புக்கு ஊன்று கோளாக யாரும் இல்லை என்பது தான் வேதனைக் குரிய விடயமாகும்.

பெண்ணாகப் பிறந்துவிட்டால் சோதனைகளும் சற்று அதிகமாகத்தான் இருக்கும் என்று கூறுவதுண்டு.

இத்தனை தடைகளையும் தாண்டி பிரச்சினைகளைப் பொருட்டாகக் கொள்ளாது தன்குடும்பம் தன் வாழ்க்கை என வாழும் இந்த முதுமைத்தாய் போல் எத்தனை பெண்கள் உள்ளனர்.

தைரியத்துடன் வியாபாரம் செய்யும் இத்தகைய பெண்களுக்கு சமுதாயம் இரக்கம் காட்டாவிட்டாலும் அவர்களை மதிக்க வேண்டும். இது அவர்களை மேலும் உயர்வடையச் செய்வதுடன் இன்னும் உற்சாகப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இவர்களைப் பார்த்து ஏனையவர்களும் வாழப்பழக முடியும் என்பதுதான் உண்மையான விடயமாகும்.

**வனிதா**, மானிப்பாய்.

# பெண்களின் செயற்பாடுகளில் பிரதிபலிக்கும் எமது கலாசாரம்

-அபிநயா,
யாழ்ப்பாணம்.



ஒரு சமூகத்தின் வாழும் முறை, கலைகள், ஆடை ஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித் தன்மை அந்த சமூகத்தின் கலாசாரமாகக் கொள்ளப்படுகின்றன.

அந்த சமூகத்தில் உள்ள பெண்களின் நடைமுறை பாவனையே அதில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பெண்களுடைய எண்ணங்கள், உணர்வுகள் செயற்பாடுகள் அவள் வாழ்வை எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்பதனை சரியான விதத்தில் வெளிப்ப டுத்த முடிகிறதா என்பது கேள்விக் குறியாகவே எம் கண்முன் நிற்கிறது.

எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது இங்கே முக்கியமாகிறது.

தற்போது சமயம், கலை, பொருளாதாரம், இலக்கியம், தொடர் பாடல், எனப் பல்வேறுபட்ட கலாசாரச் செயற்பாட்டுத் தளங்களிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம்.

ஆனால் ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக் கருதப்படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் இன்று பல பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

போரினால் ஏற்பட்டுள்ள துன்பங்கள், துயரங்களிலிருந்து மீண்டு எழுந்துள்ள பெண்களை இன்று நம் கண் முன்னாலேயே காண முடிகின்றது.

இங்கே பெண்களின் பங்களிப்புக்கான தேவை ஏற்படுமிடத்து அவர்கள் வெளியே வந்து செயற்படுவதற்கான சாதகமான நிலை ஏற்படுகிறது.

எனவே தற்போது பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் தம்மை ஈடுபடுத்தித் தமது கலாசாரத்தின் மேன்மையை பிரதிபலித்து வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளையும் பொறுப்புக்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி ஒவ்வொரு பெண்களின் செயற்பாடுகளூடாகவே எமது கலாசாரம் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

# பிறவிக்கடன் தீர்க்க வழி உண்டா!

-ஜனா,
சுதுமலை.

அன்னை இன்றி மாந்தர்
ஏது இவ்வுலகில்
அன்னை இன்றி மாந்தர்க்கு -ஏது இவ்வுலகில்
என் ஆசை பார்த்து
தன் அசை களைந்து
என் ஆசை தனை ஆசையாய்
கொண்டவள் அன்னை

முந்தானை தலைப்பெடுத்து
முக வியர்வை துடைத்திடுவாள்
என் வியர்வை நாற்றம் துடைத்து
உன் சேலை-வாசம் வீசுதே எப்படி?
நிலவைப் பிடித்து ஊட்டினாய் நீயே-
வளர்பிறை தேய்பிறை - காட்டினாய்
தாயே உன் ஒளி கொண்டு
ஒளி வீசும் சந்திரன்-நான் அம்மா

ஆயிரம் வாய் என்னை புறம் கூறும்
செவி தொட்டாலும் மூளை சொல்லாது தாய்க்கு
பொறுமைக்கு அம்மா
பாசத்துக்கு அம்மா
இன்பத்துக்கு அம்மா
நம்பிக்கைக்கு அம்மா
பயம் நீக்க அம்மா
பயன் மிக்க அம்மா

கால்க்கடிகாரம் சுற்றாது தாயின்றி
அவள் வாழ்க்கை
கடிகாரம் சுற்றாது நானின்றி
மொத்தத்தில் மொத்தம் அம்மா!
சொர்க்கத்தில் தலைநகரம் அம்மா!

பிதிர் கடன் தீர்க்க வழி நூறு உண்டு
எந்தன் பிறவிக்கடன் தீர்க்க - வழி
ஏதும் உண்டா அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மட்டத்திலான மரதன் ஓட்டம்; வவுனியா வடக்கு மாணவன் முதலிடம்




வலி.வடக்கு, ஜூன் 13

வடமாகாணகல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலை வீரர்களுக்கு இடையே நடைபெற்ற அரை மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வவுனியா வடக்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்த நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவன் நாகநாதன் சாந்தரூபன் 1:15:22 செக்கனில் ஓடி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

நேற்றுக் காலை 6.45 மணிக்குக் கோப்பாய் பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமாகிய 21 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட இந்த மரதன் ஓட்டப் போட்டி கரவெட்டிப் பிரதேச சபை முன்றிலில் நிறைவுபெற்றது.

ஆண்கள் பிரிவில் 41 வீரர்கள் கலந்துகொண்டார்கள். போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு:

நாகநாதன் சாந்தரூபன் (வவுனியா நெலுக்குளம் மகா வித்தியாலயம் -1:15:22), தேவன் தேவராஜ் (முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. - 1:16:24), இராசேந்திரன் பிரசாந்தன் (கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.- 1:17:09), இராஜசுரேந்திரன் சாந்தன் (வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க.- 1:19:48), ஜெயக்குமார் ஜெராட் டிலோஜன் (கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.- 1:21:56), கண்ணன் சுதர்சன் (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), விஸ்ணுகாந்தி பிரவேந்தன் (வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்), கே.தர்சன் (வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலயம்), எஸ்.செபஸ்ரீன் சில்வா (மன்னார் புனித வளனார் றோ.க.த.க.), ஜெயராசா யோகராசா (வடமராட்சி தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலயம்).

வடமாகாணத்தில் முதல் தடவையாக இந்த அரை மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றுள்ளது. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வடமாகாண உடற்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் மேற்கொண்டார்.

(ம-86)

# பாடசாலைகளுக்கு இடையேயான சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஜூன் 13

இலங்கை பாடசாலைகளின் சதுரங்க சம்மேளனம் யாழ் மாவட்டத்தில் நடத்திய சதுரங்க போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அந்த முடிவுகள் வருமாறு -

**9 வயதுப் பிரிவு**

ஆண்கள்- ஜே.ரிஷ கோபன் -(புத்தூர் மகா வித்தியாலயம்), கே.சுகன்ராஜ் - (உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி), எஸ். ஈ.ஜோகனன் - (சென் ஜோன்ஸ் கல்லூரி).

பெண்கள்- பி.சாகித்தியா -(வட இந்துமகளிர் கல்லூரி), ஜே.ஷர்மினி - (வடஇந்து மகளிர் கல்லூரி), ஆர்.மாதுமை -(நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை).

**7 வயதுப் பிரிவு**

ஆண்கள்- எஸ்.மேனன்- (புனித பொஸ்கோ வித்தியாலயம்), எஸ்.திருமால்- (சென். ஜோன்ஸ் கல்லூரி).

**11 வயதுப் பிரிவு**

ஆண்கள்- பி.சிவபாத ஸ்ரீ - (உடுப்பிட்டி சிவப்பிரகாச வித்தியாலயம்), எஸ்.சுமன்- (உடுப்பிட்டி சிவப்பிரகாச வித்தியாலயம்), கே.வித்யாசாகர்- (மேலை புலோலி சிவப்பிரகாச வித்தியாலயம்)

பெண்கள்- எம்.டுசாரா- (மகாஜனக் கல்லூரி), பி.கே. தாரணி- (மெதடிஸ் மகளிர் உயர் கல்லூரி), எஸ்.உமையாள் - (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**15 வயது பிரிவு**

ஆண்கள்- எ.மதுஷன் -(ஹாட்லிக் கல்லூரி), ஜி.செந்தூரன் - (ஹாட்லிக் கல்லூரி), எம்.பானுஜன் - அருணோதயாக் கல்லூரி.

பெண்கள்- எஸ்.பிரிமிக்கா- (அருணோதயாக்கல்லூரி), எஸ். பிரித்திகா - (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ். வேதிகா-(அருணோதயாக் கல்லூரி).

**13 வயதுப் பிரிவு**

ஆண்கள்- எஸ்.விதுஜன் -(ஹாட்லிக் கல்லூரி), எ.அபிஸ்ரியன் - (யாழ் இந்துக்கல்லூரி), ஆர்.டினோஜன் - (யாழ் இந்துக் கல்லூரி).

பெண்கள்- என்.வித்தியா- (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பி.சௌந்தர்யா - (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே.மாதுமை -(மெதடிஸ்த மகளிர் உயர் கல்லூரி). (ஜ-23)

# வடமராட்சி பாடசாலைகள் இடையில் கிரிக்கெட் போட்டி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் 20 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன் 13

வல்வெட்டித்துறை நெற்கொழு பொதுவிளையாட்டு மைதானத்தின் வைரவிழாவை முன்னிட்டுக் கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் ருவென்ரி-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரி அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல இலக்கு களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

பிறோசாந் 60 ஓட்டங்களையும், விசலன் 11 ஓட்டங்களையும், பிரதீபன் 20 ஓட்டங்களையும் நிலக்சன் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணி வீரர்களான றஞ்சித் 4 இலக்குகளையும் அசோக் 3 இலக்குகளையும் கோகுலன், சிவதர்சன், விஸ்பறூபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை மட்டும் பெற்றது. விஸ்வறூபன் 37 ஓட்டங்களையும் பிரதீபன் 33 ஓட்டங்களையும் றஞ்சித் 19 ஓட்டங்களையும் கோகுலன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியின் வீரர்களான நிலக்சன் 5 இலக்குகளையும் கோமசாந் 2 இலக்குகளையும் பிரசாந் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ஜ-23)



யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி ஐந்து முதலாமிடத்தையும் ஒரு இரண்டாமிடத்தையும் ஐந்து மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது. வெற்றிபெற்ற வீரர்கள், பயிற்றுநர்கள், பொறுப்பாசிரியர்கள் மற்றும் யாழ்.வலய உடற்பயிற்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் ஆகியோருடன் . (23)

# யாழ்ப்பாணத்தில் இராணுவம் - பொலிஸ் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் “ கொல்சிம் ஏவ் .ஏ” கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாவது அரை இறுதியாட்டத்தில் இலங்கை இராணுவ அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் இலங்கை பொலிஸ் அணியும் இலங்கை இராணுவ அணியும் மோதிக் கொண்டன.



ஆட்டம் ஆரம்பமாகி 7 ஆவது நிமிடத்தில் இலங்கை இராணுவ அணியின் வீரன் எம்.டி.லசந்த குமார தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். அதே அணியின் வீரன் எஸ்.டி. மத்துஷன் டீ சில்வா 9 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக இரண்டாவது கோலை அடிக்க ஆட்டம் சூடுபிடிக்க தொடங்கியது. இதன்போது இலங்கை பொலிஸ் அணி தம்து அணிக்காகக் கோல்களைப் பெற சந்தர்ப் பங்கள் கிடைத்தபோது அந்த சந்தர்ப் பங்கள் தவற விடப் பட் டன.

ஆட்டம் இடை வேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இலங்கை இராணுவ அணி 2:0 என்ற நிலையில் முன்னிலையில் நின்றது.

இடைவேளைக்காகஇடைநிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும் ஆரம்பமான போது இரு அணிகளும் தத்தமது அணிக்கு கோல்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் மிகவும் உற்சாகத்துடன் விளையாடினர். இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 48 ஆவது நிமிடத்தில் இலங்கை இராணுவ அணி வீரன் எம்.என்.எம் [illegible] தனது அணிக்காக மூன்றாவது கோலை அடித்தார்.

இலங்கைப் பொலிஸ் அணியினர் இரண்டாவது பாதி ஆட்டத்தில் கோல்களைப் பெறுவதற்காக முயற்சி மேற்கொண்டு அதுவும் கைகூடா நிலையில் ஆட்டத்தின் 53 ஆவது, 85 நிமிடங்களில் இலங்கை இராணுவ அணியினுடைய வீரன் எம்.என்.எம். பாஷல் இரண்டு கோல்களை அடித்தார்.

ஆட்ட முடிவில் இலங்கை இராணுவ அணி 5:0 என்ற கோல்கணக்கில் இலங்கை பொலிஸ் அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக பிரியந்கே பீரிஸ் (பதுளை), டி.ஆர். ரட்ணநாயக (பதுளை), சுரேந்திரர் (யாழ்ப்பாணம்)" ஆகியோர் கடமையாற்றினர்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ், தேவானந்தா, கொல்சிம் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஸ்ரிபன் குப்பர், சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்று குழுவின் தலைவருமான மணிலால் பெர்ணாண்டே, இலங்கைக்கான ஜேர்மன் நாட்டின் தூதரக கலாசார விளையாட்டுத் துறை பொறுப்பாளர் டெனிஸ் ஸ்கூப்டிர், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீர சேகர, யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏவ்.ஏ.ஜே. றூபசிங்க மற்றும் பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். (ஜ-86-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது இளம் இந்தியா; கிடைத்தது தொடர் வெற்றி



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில், ரோகித் சர்மாவின் அபார துடுப்பாட்டத்தால் இந்திய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இந்த வெற்றி மூலம் இந்திய அணி 'ஹட்ரிக்' வெற்றியை ருசித்தது. மேற்கிந்தியாவுக்குச் சென்றுள்ள இந்திய அணிஐந்துபோட்டிகளைக்கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதல் இரண்டு போட்டி களில் வென்ற இந்திய அணி 2-0 என்று, முன்னிலையில் இருந்தது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி, அண்டிகுவாவில் உள்ள விவிலியன் ரிச்சர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் டுவைன் பிராவோ, டரன் பிராவோ, ராம்போல் ஆகியோர் நீக்கப்பட்டு, அன்ட்ரூ ரசல், கெமர் ரோச்சுடன் அறிமுக வீரராக டான்ஜா சேர்க்கப்பட்டார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் ரெய்னா முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எட்வர்ட்ஸ், 'டக் அவுட்டானார்'. சர்வான் 28 ஓட்டங்களை எடுத்தார். இதன் பின்னர் அமித் மிஸ்ரா சுழலில் அசத்தத் தொடங்கினார். இவரது சுழலில் சிக்கி, சாமுவேல்ஸ், டான்ஜா தலா ஒரு ஓட்டங்களுடன் திரும்பினர். சிம்மொன்ஸ் (45 ஓட்டங்கள்) அரைச்சத வாய்ப்பை இழந்தார்.

பொலார்ட் (6), தலைவர் சமி (3) ஆகியோரும் நிலைக்கவில்லை. மேற்கிந்தியத்தீவுகள் அணி 96 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

இந்த நிலையில் ஜோடி சேர்ந்த பக், அன்ட்ரூ ரசல் அணியை சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பக் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த, ரசல் அதிரடியில் ஈடுபட்டார். பிரவீன் குமார் ஓவரில் 2 பவுண்டரிகள் விளாசிய இவர், யூசுப் பதானின் பந்தில் அடுத்தடுத்து சிக்சர்கள் அடித்தார். இந்த நிலையில், பக் (36) ஆட்டமிழந்தார். மறுமுனையில் ரசல், தனது முதல் சர்வதேச அரைசதம் கடந்தார். இவர் ரெய்னாவின் ஓவரில், 2 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 22 ஓட்டங்கள் விளாச, மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களுக்கு, 225 ஓட்டங்கள் எடுத்தது. ரசல் 92 ஓட்டங்கள் (64 பந்துகள்), ரோச் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் அமித் மிஸ்ரா, முனாப் படேல் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

எட்டிவிடும் இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு, பார்த்திவ் பட்டேல், தவான் இணைந்து சுமாரான ஆரம்பத்தை கொடுத்தனர். தவான் (4) ஏமாற்றினார். விராட் ஹோக்லி 'டக் அவுட்டானார்'. பத்ரிநாத் (11) ரன் அவுட்டானார். பொறுப்பாக விளையாடிக் கொண்டிருந்த பார்த்திவ் பட்டேல் (46) அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார். தலைவர் ரெய்னா (3) பொறுப்பற்ற முறையில் திரும்பினார். யூசுப்பதானும் (1) அணியைக் கைவிட்டார்.

இதன் பின்னர் ரோகித் சர்மாவும், ஹர்பஜன் சிங்கும் ஜோடி சேர்ந்து அணியை மீட்டனர். இந்த ஜோடி 7 ஆவது விக்கெட்டுக்காக 88 ஓட்டங்கள் குவித்தனர். ஹர்பஜன் சிங் 64 பந்துகளில் 41 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் ரோகித் சர்மாவுடன் பிரவீன்குமார் ஜோடி சேர்ந்தார். இருவரும் சேர்ந்து அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தனர். இறுதியில் இந்திய அணி 46.2 ஓவரில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 228 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரோகித் சர்மா அபாரமாக விளையாடி 91 பந்துகளில் 86 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். பிரவீன்குமார் 25 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் சமி, பிஸ்டோ ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்த வெற்றி மூலம் இந்திய அணி 'ஹட்ரிக்' வெற்றி பெற்று ஒருநாள் கிரிக்கெட் தொடரையும் கைப்பற்றியது. (15)

## முனாப்புக்கு பாராட்டு




மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் முனாப் பட்டேல் சாதிப்பார். இதற்கான திறமை அவரிடம் உள்ளது என்று பந்துவீச்சு பயிற்சியாளர் எரிக் சிம்மன்ஸ் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து, காயம் காரணமாக சகிர்கான், ஸ்ரீசாந்த் ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டனர். இவர்களுக்கு பதிலாக தற்போதைய ஒருநாள் அணியில் இடம் பெற்றுள்ள பிரவீன் குமார், அபி மன்யு மிதுன் சேர்க்கப்பட் டுள்ளனர். இவர்களுடன் முனாப் பட்டேலும் இடம்பெற்றுள்ளார்.

தற்போதைய ஒருநாள் போட்டித் தொடரில் இதுவரை ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். தொடர்ந்து போட்டிகளில் சாதிக்க கடினமான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இது குறித்து இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் எரிக்சிம்மன்ஸ் கூறியது. முனாப்பட்டேல் தனது திறமை குறித்து நன்கு தெரிந்து வைத்துள்ளார். இதனால் தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறார். எந்த விதமான பதட்டமான சூழ்நிலையையும் சமாளிக்கும் திறமை இவரிடம் உள்ளது.

கடந்த உலகக்கிண்ணத் தொடரில் சகிர்கானுடன் இணைந்து அசத்திய இவரை யாரும் வெகுவாக பாராட்டவில்லை என்பது வருத்தம் தான். தற்போதைய மேற்கிந்திய டெஸ்ட் தொடரில், இவரது பலமான பந்துவீச்சு அணியின் வெற்றிக்கு துணையாக உள்ளது. எதிர்வரும் டெஸ்ட் தொடரில் அபிமன்யு மிதுன், பிரவீன்குமார் மற்றும் இஷாந்த் சர்மா இணைந்து இந்திய அணிக்கு வெற்றி தேடி தருவார்கள் என்று நம்புகிறேன் என்று எரிக் சிம் மன்ஸ் தெரிவித்தார். (15)

## இலங்கை - பாகிஸ்தான் சிம்பாப்வேயில் மோதல்

பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளதால் அங்கு விளையாட வேண்டிய போட்டிகளை சிம்பாப்வேயில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடந்தது. இதில் உதவி பயிற்சியாளர் உட்பட ஏழு வீரர்கள் காயம் அடைந்தனர். இந்த சம்பவத்துக்கு பின்னர், அங்கு எந்த அணியும் போட்டிகளில் பங்கேற்க செல்ல மறுக்கின்றன.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை அட்டவணைப்படி எதிர்வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இலங்கை அணி பாகிஸ்தானில் மூன்று டெஸ்ட், ஒரு 'ரி-20' ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க வேண்டும். ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளது. இந்த போட்டிகளை இலங்கையில் நடத்தலாம் என்று இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

அதேபோல அடுத்த ஆண்டு இங்கிலாந்து அணி, பாகிஸ்தானில் பங்கேற்க வேண்டிய போட்டிகளையும் இலங்கையில் நடத்தலாம் என்றும் தெரிவித்துள்ளன. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைச் செய்தித் தொடர்பாளர் நதீம் சர்வார் கூறுகையில், இலங்கைக்கு எதிரான போட்டித் தொடரை, நாங்கள் சிம்பாப்வேயில் நடத்தலாம் என்று திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் இங்கு குறைவான செலவுகளே ஏற்படும் என்பதால் ஓரளவுக்கு சபைக்கும் வருமானம் கிடைக்கும் என்றார். (15)

# நட்சத்திரக் கிரிக்கெட் போட்டி; கிண்ணம் வென்றது சென்னை!

இந்திய சினிமா நட்சத்திர அணிகளுக்கிடையே நடைபெற்ற 'செலிபிரேட்டி கிரிக்கெட் லீக்' ருவென்ரி - 20 தொடரின் இறுதியில் அபாரமாக ஆடிய சென்னை றைனோஸ் அணி கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கர்நாடக புல்டோசர் அணியும் சென்னை றைனோஸ் அணியும் மோதிக்கொண்டன. கர்நாடக அணி நடிகர் சுதீப் தலைமையிலும் சென்னை அணி நடிகர் அப்பாஸ் தலைமையிலும் களமிறங்கின. சென்னை அணியின் தலைவர் நடிகர் சரத்குமார் காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்புக் காரணமாக களத்துக்கு வெளியே நின்றார். இதனாலேயே அப்பாஸ் தலைமை தாங்கினார்.

நாணயச் சுழற்சியில் வென்ற கர்நாடக அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக இறங்கிய ஜீவாவும், விக்ராந்தும் அதிரடியில் இறங்க அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக எகிறத்தொடங்கியது. விக்ராந் 30 பந்துகளில் 66 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஒரு புறம் விக்கெட்டுக்கள் சீராக வீழ்ந்து கொண்டிருந்தாலும் சென்னை வீரர்களின் சரவெடி ஆட்டம் குறையவே இல்லை. இத் தொடரின் எல்லாப் போட்டிகளிலும் வாண வேடிக்கை காட்டிய நடிகர் விஷ்ணு இறுதிப் போட்டியிலும் கலக்கத் தவறவில்லை. அவரும் அதிரடி காட்டி அரைச்சதம் கடக்க சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 190 ஓட்டங்களைக் குவித்தது.



மிகப்பெரும் இலக்கைத் துரத்தத் தொடங்கிய கர்நாடக புல்டோசர் அணியை சென்னை அணி ஆரம்பத்திலிருந்தே வேட்டையாடத் தொடங்கியது. சென்னை அணி வீரர்களாக ஜீவா, சாந்தனு ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சும் சிறப்பான களத்தடுப்பும் கைகொடுக்க 164 ஓட்டங்களை மாத்திரமே 20 ஓவர்கள் நிறைவில் கர்நாடக அணியால் பெறமுடிந்தது. கர்நாடக அணித் தலைவர் சுதீப் மட்டும் அந்த அணி சார்பாக அரைச்சதம் கடந்தார். எனினும் அவரால் அணியின் தோல்வியைத் தடுக்க முடியவில்லை. இறுதியில் 26 ஓட்டங்களால் சென்னை அணி கர்நாடகாவை வீழ்த்தி சம்பியன் கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக அதிரடியில் கலக்கிய விக்ராந்த் தெரிவானார். தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக விஷ்ணு தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை குழுவின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர் குழுவின் அறிக்கை ஆலோசனை மட்டத்திலானது. அது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பரிசீலனைக்கு மட்டுமே உரியது. அறிக்கை சபையின் முன்விவாதத்துக்கு எடுக்கப்பட்டு அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்படுமானால் அதனால் இன்று இலங்கை பாதிக்கப்பட்ட நாடாக இருக்கலாம், நாளைக்கு இதே விதமாக இன்னொரு நாடு தண்டிக்கப் படக்கூடும் என்று இலங்கை ராஜதந்திரிகள் தம்மை சந்தித்த ஏனைய நாட்டவர்களுக்கு விளக்கமளித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சார்பில் பாகிஸ்தான் மாலைதீவுகள் ஆகிய நாடுகளும் பிரசாரம் செய்துள்ளன.

**அறிக்கை மீது விவாதம் இல்லாமைக்கு காரணம்**

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அறிக்கை மனித உரிமைகள் சபையில் பரிசீலனைக்கு எடுக்கப்படாமைக்கு வேறு பல காரணங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. மனித உரிமைகள் சபையின் தலைவர் நவநீதம்பிள்ளைக்கு செயலாளர் நாயகம் பான் கீ - மூன் அறிக்கையின் பிரதியொன்றை முறையாக இன்னமும் அனுப்பிவைக்கவில்லை. பான் கீ- மூன் இரண்டாம் முறையாகவும் அந்தப் பதவிக்கு போட்டியிடவிருப்பது தெரிந்தவிடயம். இருந்தபோதிலும் மாநாட்டின் போது நவநீதம்பிள்ளை இலங்கை மீது சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற வகையில் வழக்கத்துக்கு மாறாக சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். மேலும் இலங்கையிடமிருந்து செயலாளர் நாயகத்துக்கு சில பதில்கள் கிடைத்துள்ளன. நிபுணர் குழு அறிக்கையின் விளைவாக அன்று அதன் ஆரம்பத்திலேயே சில முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முன் முயற்சிகளில் ஒன்று விரைவில் வெளிவரப்போகின்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்க சபையின் இறுதி அறிக்கை ஆகும்.

கொழும்பில் உள்ள இராஜ தந்திரி ஒருவர் அதுபற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்:

இறுதி அறிக்கை எவ்வளவு தூரம் நம்பகரமாக இருக்கப் போகிறது என்பதிலேயே அரசின் எதிர்பார்ப்பு தங்கியுள்ளது. நிபுணர்குழுவால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள பிரதான பிரச்சினைகளுக்கு அறிக்கை தீர்வுகாணுமானால் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளக் கூடிய தான நிலைமை ஏற்படும். இப்பொழுது பிரச்சினை அதிகாரப் பகிர்வோ இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியமர்வோ அல்ல முதலாவதும், இரண்டாவதும் மூன்றாவதுமான பிரச்சினைகள் எல்லாமே பொறுப்புக் கூறல் பற்றிய கேள்விகளே.

என்றார் அவர். நிபுணர்குழுவின் அறிக்கை ஐ.நா.மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் மாத அமர்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று இப்போது தெரியவந்துள்ளது. அந்தக் கால கட்டத்தில் ஐ.நா. தொடர்பான இலங்கையின் விரிவான பதில்கள் சமர்ப்பிக் கப்பட்டு விடும் மனித உரிமைகள் சபை கூட்டத்தில் நிபுணர் குழுவின் அறிக்கையை விவாதிக்கச் செய்வதற்கு அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் பின் கதவால் முயற்சிகள் மேற்கொண்டதாகவும் அந்த முயற்சிகள் நிறைவேறவில்லையென்றும் கூறப்படுகின்றது. சபையில் இந்தியாவும் பிரிட்டனும் பிரச்சினையில் சிக்கிக்கொள்ளாத வகையில் ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடித்தன. அவர்களின் பிரதி நிதிகள் இதில் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

பிரிட்டன் ஜூன் 14 ஆம் திகதி மனித உரிமைகள் சபையில் பூர்வாங்கமாக ஓர் அறிக்கை வெளியிடவிருப்பதாக இப்பொழுது தெரியவந்துள்ளது. பிரிட்டிஷ் அரசின் அதிகாரப் பூர்வ நிலைப்பாடு அதில் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அன்றைய தினமே சனல் -04 ஒளிப்படங்கள் வெளியிடப்படவிருக்கின்றன. இதே கால கட்டத்தில் தான் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம் ஃபொக்ஸ் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கிறார். (ப)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிப்பிள்ளை பூமணி



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் வீதி, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை பூமணி நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் நேசமலர், நேசராணி, சந்திரராஜா, இந்திரராஜா, மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜதுரை, அருந்தவமலர், அன்னபூரணம், இராஜவதி ஆகியோரின் அன்பு மாமியும் கஜீபன், கஜீபனா, தாஷாயினி, கிஷோத், ஜினோத், அஜந்தன், நிஷாந்தன், ரூபன், டிக்ஷன், சுவாதி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் வீதி,
கலட்டிச் சந்தி. (1930)

தகவல்:
சந்திரராஜா (மகன்)

### ந. கனகசேகரன் J.P (கலிக்கட்)

(Retd, R.O, The Finance Company, Jaffna)



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இல.42-1/1, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கனகசேகரன் 11.06.2011 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-தெய்வநாயகி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான Dr.நாகலிங்கம் - ஞானாம்பிகை தம்பதியரின் மருமகனும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் கனகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரன் மற்றும் கனகசந்திரன், கனகவாணி, கனகராணி மற்றும் கனகருசிதன், கனகசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வதேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே:-
011 255 3372,
0776294359.

(பி/842)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராமநாதன் செல்வராணி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.45/23A, பிறற்றிக்கா றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் நியூ ஜெசி அமெரிக்காவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் செல்வராணி அவர்கள் கடந்த 10.06.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தையா - முத்தம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா இராமநாதன் J.P. (முன்னாள் தலைவர், கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் பரிபாலன சபை) அவரின் அன்பு மனைவியும் ஆறுமுகம் அன்னபூரனி, சண்முகரட்ணம் புஸ்பராணி (பேபி), இராசதுரை தேவராணி (ராணி) ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீஇராமநாதன், றீற்றா, உருத்திரா, நவீந்திரா, ரூபா, றெஜினா, மகிந்தா, குகன், அசோகன் ஆகியோரின் பாசமிகு தாயும் மஞ்சுளா, அமுதசாகரகன், நாகேஸ்வரி, ஜெயமலர், சிவனேசன், புவனநாயகம், குவான்டலீன், ஷீலா,சுவர்ணலதா ஆகியோரின் மாமியும், விவேக், மீரா, மித்திரன், கீதா, கௌசி, அரவிந்தன், றோகான், றோகா, முகுந்தன், துஷ்யந்தி, சிந்தியா, அஜெர்தன், கிரி, சோனியா, நிரோசா, தனுஜா, ரமேஷ், ஆனந், லசன், ரதீஷ், நதியா ஆகியோரின் பேர்த்தியும் சந்தோஷ், அரன், ஜஸ்னி, அயானா, தேவிகா, ஜோதிகா, உமா, ஜெயராம் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.06.2011) புதன்கிழமை நியூ ஜெசி அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(பி/843)

தகவல்:
குடும்பத்தினர்.

**வீடு விற்பனைக்கு**

புதிய செம்மணி வீதி, வேளாதோப்பில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0777040214


**வேலையாள் தேவை**

கோழிப்பண்ணையில் வேலை செய்வதுக்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை. விருப்பம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

பலாலி வீதி, திருநெல்வேலி.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் விசுவலிங்கம் அம்பலவாணர்



தோற்றம்
15.12.1932

மறைவு
14.05.2011

கடந்த 14.05.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் குடும்பசகிதம் பங்குகொண்டு அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(பி/831)

குடும்பத்தினர்.

## 65 ஆவது பிறந்ததினமும் 6ஆம் மாத நினைவஞ்சலியும்

தோற்றம்
13 ★ 06 ★ 1946



மறைவு
20 ★ 12 ★ 2010

### அமரர் பஞ்சலிங்கம் செல்வராஜா

(முன்னாள், நேரப் பரிசோதகர் - C.T.B)

மறைந்தது மூவிரண்டு மாதம் இன்று - நாம்
மறந்திலோம் உம்மை இருநொடியும் என்றும்.

உரைக்கையில் மனத்திடும் சந்தனமாகி - உம்
உடலினைத் தேய்த்தெம்மை உயர்த்திட - செய்தீர்

உருகியே ஒளிரும் மெழுகாய் நின்று - உம்
உதிரத்தை சொரிந்து எம் உடலினை வளர்த்தீர்

அறுபத்தைந்தாம் பிறந்தநாளாம் இன்று உமக்கு
அருகில் இல்லையே என்ற ஏக்கம் எமக்கு.
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதி காண
ஆண்டவனை என்றும் இறைஞ்சும் ...

ஏழாலை மேற்கு,
ஏழாலை. (1914)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 374/1, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை நேற்று 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

374/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (பி/838)

தகவல்:
குடும்பத்தினர்.

### விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம்



மல்லாவியைப் பிறப்பிடமாகவும், பசுபதியார் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம் (11.06.2011) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பசுபதியார் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (1934)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழ அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தீவில் தமக்கென வரையறை செய்யப்பட்ட பாரம்பரிய பூமியில் மொழி, மத கலாசார அடையாளங்களுடன் வாழ்ந்த தமிழர்களின் வரலாற்றை மாற்றியவர்கள் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தினரே.

நிர்வாக நலனுக்காக தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டுவந்த ஆட்சியர்கள் விட்டுச் செல்லும்போது தமிழர்களைச் சிங்களவர்களின் ஆட்சிப் பொறுப்பில் விட்டுச் சென்றுள்ளதன் பலனை தமிழ் மக்கள் இன்றுவரை அனுபவிக்கின்றனர்.

தனது வரலாற்றுத் தவறை மறந்த இப்போதைய பிரிட்டிஷ் அரசு நாடுகடத்தலை மேற்கொண்டு எமக்கு மேலதிக துன்பச் சுமையைத் தருகிறது. இலங்கையில் இயல்பு வாழ்க்கைக்கு இடமில்லை. மிகவும் கொடுங்கோன்மையான இராணுவ ஆட்சி தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கில் நடைபெறுகின்றது.

யாழ். குடாநாட்டில் மாத்திரம் 57,000 பொது மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் முகாம்களில் வாழ்கின்றனர். வவுனியா தடுப்பு முகாம்களில் 30,000 வரையிலானோர் முடக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பகுதிகளில் பெருந்தொகையான உள்நாட்டு அகதிகள் நிச்சயமற்ற வாழ்க்கை நடத்துகின்றனர்.

ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமிற்கு மாற்றுவதை இலங்கை அரசு மீள்குடியேற்றம் என்று சொல்கிறது. அரசியல் நிலவரம் இன்னும் மோசமாக இருக்கிறது. தற்போதைக்கு அதிகாரப் பகிர்வு குறித்த சட்ட மூலங்களைச் சமர்பிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு திட்டவட்டமாக கூறி விட்டது.

ஐ.நா நிபுணர் குழு அறிக்கைப்படி இலங்கை அரச உயர் மட்டத்தினரும் இராணுவத்தினரும் போர்க் குற்றங்கள், மனித நேயச் சட்ட மீறல்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றைப் புரிந்துள்ளனர் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டதையும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் 300 அப்பாவித் தமிழர்களை நாடுகடத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கை அரசின் வன்முறைக் கும்பல்களின் தாக்குதலுக்கும் காணாமற் போதலுக்கும் அவர்கள் உள்ளாவது நிச்சயம்.

நாடுகடத்தல் நடைபெறும் பட்சத்தில் இந்த 300 பேரின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் வழங்க பிரிட்டிஷ் அரசு முன்வருமா? உயிராபத்து உள்ள நாட்டிற்கு ஏதிலிகளின் விருப்பத்திற்கு மாறாக அனுப்புவதை மனித உரிமைச் சட்டங்கள் தடை செய்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டாமென்றும் பிரிட்டிஷ் அரசு உத்தேசித்திருக்கும் ஈழத்தமிழ் அகதிகளின் நாடுகடத்தலை நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடாப்பைத் தயாரிப்பதற்கான பணிகளும் இதே காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப் பின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டை அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் விநியோகிக்கப் படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் யாவும் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-15)

**தவறிவிட்டது**

கோயிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பு என்னும் முகவரியுடைய துரையப்பா சிங்கப்புத்திரன் என்பவருடைய தே.அ. அட்டை (832794732V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன கடந்த 09.06.2011 அன்று கைதடிக்கும் தச்சன் தோப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.P-0775343435 தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426,(302)K.K.S வீதி, யாழ்ப்பாணம்.பிளாக் வீதி, சங்கானை. Tel-0776751649

## தடுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்குச் சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுத் தொடர்களின் போது போரின் இறுதிக் கட்டத்தின் போது படையினரிடம் சரண் அடைந்தவர்களின் விவரங்களை வெளியிடுமாறு கூட்டமைப்புக் கோரிவந்தது.

வவுனியா பயங்கரவாதத் தடுப்பு பிரிவுக்கு வருமாறு கூட்டமைப்புக்கு அரசு அழைப்பும் விடுத்திருந்தது. இரு தடவைகளும் கூட்டமைப்பினர் வவுனியாவுக்குச் சென்றபோதிலும் பட்டியல் ஏதும் கையளிக்கப்படவில்லை.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விவரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது.

அதன் பிரகாரம் பயங்கவரவாத விசாரணைப் பிரிவு, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் விவரங்களை அவர்களது உறவினர்களுக்குத் தெரிவிக்க மூன்று நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக இப்போது அரசு அறிவித்துள்ளது.

கைதாகித் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள், தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விவரங்களை மேற்குறிப்பிட்ட மூன்று நிலையங்களிலும் இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

கைதானவர்களின் நெருங்கிய உறவினர்களான மனைவி, கணவர், பிள்ளைகள், பெற்றோர், சகோதர, சகோதரிகள் ஆகியோர் தகவல்களைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தத்தமது பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது கிராம உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று விவரங்களைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

✱ பயங்கரவாத விசாரணைப் பிரிவு 2ஆம் மாடி, புதிய செயலகக் கட்டடம், கொழும்பு 1, தொலைபேசி 0112384400, மின்னஞ்சல் : dir.tid@police.lk

✱ பயங்கரவாத விசாரணைப் பிரிவு:- கண்டி வீதி, வவுனியா(பிரதிப் பொலிஸ் மா அதிபர் செயலகம் முன்னால்) தொலைபேசி 0243243207

✱ பயங்கரவாத விசாரணைத் தடுப்பு முகாம் - ரேஸ்கோஸ் வீதி, காலி. தொலைபேசி 0912267084

மேற்படி அறிவித்தலின் பிரகாரம், குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கேட்டுள்ளனர்.

(அ-ஐ)

## போரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்கள் எனத் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியிலேயே நாட்டின் அபிவிருத்தி குறித்தும் சிந்திக்க வேண்டிய தருணத்தில் நாம் இருக்கிறோம் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

உண்மையில் இது அரசியல் ஒரு குறைபாடுஎனஅவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீண்டகாலம் குறித்து சிந்தித்து, திட்டமிட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

SHAMROCK- யாழ்
★A/L 2013, O/L கலை, வர்த்தக, கணித, விஞ். பிரிவு களுடன்
Gen.ENG GIT
★Gr 1 முதல் O/L வரை
★ENG med 6To 11
★ICT PRACTICAL
★ENG...
★O/L REPEAT

## ஐம்பதாவது பிறந்தநாள் வாழ்த்து (பொன்விழா)

### 13.06.2011

### திருமதி இரத்தினசிங்கம் காஞ்சனாதேவி



இன்று (13.06.2011) திங்கட்கிழமை தனது ஐம்பதாவது அகவையைப் பூர்த்திசெய்யும் திருமதி இ.காஞ்சனாதேவி அவர்களை நோய் நொடியின்றி - பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல களவத்துறை வைரவர் துணை கொண்டு பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துபவர்கள்

கணவர்-இரத்தினசிங்கம்,
பிள்ளைகள்-மஞ்சுளா, தர்ஷனா, மயூரதன், மதனாதரன், மகிந்தாதரன்.
மருமகன்- கௌரிதாசன்(கனடா), புஸ்பதரிசி, அனுசியா,
பேரப்பிள்ளைகள்- அபினா, அபினன், மதுசியா

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து தயாமோகன்

(SPHI வவுனியா)




கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தயாமோகன் (SPHI வவுனியா) நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தயாளினியின் (பண்டத்தரிப்பு பிரதேச சபை) அன்புக் கணவரும், அபிதா, கேஜனா, லேஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவகுரு ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
த.கனகநாயகம்(மாமா)

### சரவணமுத்து விநாயகமூர்த்தி S.A



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து விநாயகமூர்த்தி 11.06.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து(ஆசிரியர்) - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரமூர்த்தி (கனடா), சம்பந்தமூர்த்தி காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி, பத்மாவதி, சரஸ்வதி, செல்வராணி ஆகியோரின் சகோதரனும், ஞானசேகரன்(நோர்வே), கல்யாணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின்பாசமிகு தந்தையும், எழிழரசி (நோர்வே), வசந்தன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், ஹர்சன், அனோஜன்(ஆஸ்திரேலியா), வாகினி, அருணன் (நோர்வே) ஆகியோரின் தாத்தாவும், புஸ்பராசமணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான மதியாபரணம், பூபாலசிங்கம், பழனித்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அப்பிளானை, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
வி.தங்கம்மா(மனைவி)

### சின்னையா கோணாமலை



திக்கத்தை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கோணாமலை கடந்த 10.06.2011 வெள்ளிக்கிழமை திக்கத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம்- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவக்கொடியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசிங்கம், வள்ளிப்பிள்ளை(தேவி), பரமேஸ்வரி, விஜயசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லோஜினி(U.K), கிரிதரன்(U.K), கௌசிகன்(U.K), கௌசி(U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் மாணாண்டி வளவு, அல்வாய் வடமேற்கு திக்கத்தில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாணாண்டி வளவு,
அல்வாய் வடமேற்கு, திக்கம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### இராமுப்பிள்ளை சிவலிங்கம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், மகேஸ்வரி, அன்னம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சாந்தினி, சசிகலா, லிங்கேஸ்வரி காலஞ்சென்ற சித்திரா மற்றும் ஜேந்தி(கனடா), சிவனேஸ்வரன், மஞ்சுளா, மோகன் (லண்டன்), கேதீஸ்வரன்(லண்டன்), மதுரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வாகீஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன், லிங்கராசா, சிவராசா, கரன்(கனடா), வாசுகி, தனராஜ், குமுதினி(லண்டன்), சிந்து(லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்துக்கட்டி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் வைகாசி பொங்கல் விழா இன்று!

கிளிநொச்சி, ஜூன் 13

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் வைகாசி பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் தொன்மை மிக்கதும் வரலாற்று சிறப்பு மிக்கதுமான வற்றாப்பளை அம்மன் கோவில் விழா 2009ஆம் ஆண்டு நடைபெறவில்லை. வன்னிப்பேரவலம் நடைபெற்று மக்கள் இடம்பெயர்ந்ததால் அவ்வாண்டு பொங்கல் விழா நடைபெறவில்லை.

எனினும் கடந்த 2010ஆம் ஆண்டு ஆலயம் ஓரளவிற்கு புனரமைக்கப்பட்டு பொங்கல் விழா நடைபெற்ற போதிலும் அங்கு மக்கள் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு இராஜகோபுரமும் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டு சகல பிரதேசங் களிலிருந்தும் மக்கள் செல்வதற்கு அனு மதிக்கப்பட்டுள்ளதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்று வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

போர் சூழல் ஆரம்பமாவதற்கு முன்னர் 1983ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் வன்னிப்பிரதேசங்களிலிருந்தும் யாழ். குடாநாட்டிலிருந்தும் பெருந் தொகையான மக்கள் வருகை தருவது வழக்கமாகும். யாழ் குடாநாட்டிலிருந்து தரைமார்க்கமாகவும், கடல்மார்க்கமாக இயந்திர படகுகளிலும் பெருந்தொகை யான பக்தர்கள் முதல்நாளே வற்றாப்பளைக்கு சென்று அங்கு தங்கியிருந்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவது வழக்கமாகும்.

வற்றாப்பளை அம்மன் பொங்கல் முடிந்ததும் நேரடியாக அங்கிருந்து கால் நடையாக கதிர்காமத்திற்கு செல்பவர்களும் உண்டு.

உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயம் வாய்ந்த வற்றாப்பளை அம்மன் வன்னி மக்களின் காவல் தெய்வமாக வணங்கப் படுகிறது.

# கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் அளவெட்டி மகாஜன மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 5 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன்,சுரேஸ் பிரேமச்சந்திரன், ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்களும் வலி.வடக்குப் பிரதேச சபையில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வலி. வடக்கில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும், இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் நிலைப்பாடும் வெளிப்படுத்தப்படும் என்று காங்கேசன்துறை கிளைச் செயலாளர் எஸ். சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் யாழ். மாவட்ட சகல தொகுதி வேட்பாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும்.

,இந்த நிகழ்விலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ந-10)

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி, புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள்,
பழக விரும்புபவர்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலார்களும்)
த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



### வைரமுத்து தயாமோகன்

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர், உளநலப் பிரிவு, வவுனியா)

நேற்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வைரமுத்து தயாமோகன் அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் குடும்பத் துயரில் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(1939)

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்,
யாழ். மாவட்டம்,
வடமாகாண பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிகள் - 2 , மக ஸின்கள் - 2, 60 ரவைகள் ஆகியன மீட்கப்பட்டன என்றும் - பலாலி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அந்த வீட்டின் கூரை 'சீலிங்கில்' இருந்து இவை மீட்கப்பட்டன என்றும் -

சம்பந்தப்பட்ட நபரைத் தேடி வருவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்தார்.

கட்டம்கட்டமாக தேர்தல்கள் நடத்தப்படுவதன் காரணமாக பொது மக்கள் தேர்தல் தொடர்பாக வெறுப்பை வெளிப்படுத்துகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் கற்கை நெறிகள்

BCHS

மாணவர்கள், தொழில்புரிவோர், உயர்கல்வி கற்போர், நல்ல தொழில்வாய்ப்பைத் தேடுவோர் மற்றும் ஆங்கிலத்தில் இலகுவாக கதைக்க / பேச ஆர்வமுடையோர் அனைவரதும் நன்மை கருதி British College of Higher Studies இனால் பின்வரும் கற்கைநெறிகள் மிகவும் பிரத்தியேகமாக அனைவரும் எளிதில் கற்கக்கூடிய முறையில் நடைபெற இருக்கின்றது.

**Diploma in English** → 3 Months
Sat & Sun - 10.00 -12.00
Starts On :18-06-2011
2 Months
Mon,Wed,Thu- 4.00 -6.00
Starts On :20-06-2011

BCHS இல் Spoken English பயின்ற மாணவர்களும் இதில் இணைந்து கொள்ளலாம். அவர்களிற்கு விசேட கட்டணக் கழிவு உண்டு.

**Spoken English with Grammar**
**Quick Learning / Fast Track Course** → 1 1/2 Months
Sat & Sun - 10.00 -12.00
Starts On :18-06-2011
Mon,Wed,Thu- 04.00- 06.00
Starts On :20-06-2011

எமது அனைத்துக் கற்கை நெறிகளும் Video, Audio Visuals மூலமாகவே நடத்தப்படுவதினால் புரிந்துகொள்ள இலகுவானது.

Second Floor, No.15, Sriampiyadi Lane (Off Stanley Road)
Tel: 021 222 4550 Hotlines: 0777222422, 0777585913, 0714299935

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14★05★1960 மறைவு 13★06★2007

### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா

ஆறவில்லை அம்மா எங்கள் நெஞ்சம்
ஆற்றொணாத் துயர் நிறைந்த காயம்
நாம் வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உங்கள் அன்பு முகத்தை?
அன்பாய் எம்மோடு கதை பேசி, அறிவூட்டி
திடீரென எமைப் பிரிந்ததன் மாயமென்ன?
தெய்வத்துள் நீர் நிறைந்திட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள்
நித்தமும் நினைந்தே வாழ்வோம்!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எம்மைக் காப்பீர்கள் அம்மா!

இல. 162A, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(1937)

## மரண அறிவித்தல்கள்

### இராசநாயகம் மைக்கல் ஆஞ்சலோ



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் மைக்கல் ஆஞ்சலோ (கிளை முகாமையாளர், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்) நேற்று (12.06.2011) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் கிறிஸ்ரினா, தம்பதிகளின் மூத்த புதல்வனும், பத்மராணி யின் அன்புக் கணவரும், கொன்சிறறா, கொன்சன்ரைன், கொன்சிலஸ், கொலின்சன், லூட்ஸ், ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு, மகேஸ்வரி தம் பதியரின் மூத்தமருமகனும், மெற்றலின், காலஞ்சென்ற றோஸ் மற்றும் லோனஸ்(ஜேர்மனி), றஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானசேகரன் (ஜேர்மனி), சந்திரசேகரன் (வவுனியா), குணசேகரன் (பிரான்ஸ்), செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2011) திங்கட் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குளமங் கால் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, குளமங்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம்.
(1940)
தகவல்:
குடும்பத்தினர்.

### இராதாகிருஷ்ணன் புவியழகன் (கோபு)



சாந்தா கலட்டி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பூம்பத்தை வீதியை வசிப்பிடமாகவும், திருச்சி, இந் தியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராதாகிருஷ்ணன் புவியழகன் (கோபு) கடந்த (11.06.2011) சனிக்கிழமை அகாலமரண மானார்.

அன்னார் காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன் மற்றும் சுந்தராம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ம.அரியநாயகம் - நற்குணாம்பிகை ஆகியோ ரின் மருமகனும் அகிலாவின் அன்புக் கணவரும் மதுஷாகினி, பதுஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கயல்விழி, மதி யழகன், அன்பழகன், செயல்விழி ஆகியோரின் சகோதரரும் குபேரமூர்த்தி, சியாமளா, பிரதீபன், அனுஷா, அனுதா ஆகியோரின் மைத்துனரும் மகேந்திரன், லோகேந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூம்பத்தை வீதி,
வடலியடைப்பு.
(சி/844)
தகவல்:
லோகேந்திரன் (சகலன்),
அனுதா (மைத்துனி)

## விற்பனைக்கு

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதி (Guest House & Restaurant) மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்த, வாகனத்தரிப்பிட வசதிகளுடன், பாவனைக்குத் தயார்நிலையில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான கட்டடம் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- தொ.பே: 0774528818

அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**English Workshop (ஆங்கில பயிற்சிப்பட்டறை)**

அமைப்புக்கள், பிரயோகங்கள், இணைப்புச்சொற்கள், "என்று" அமைப்புக்கள், பிறர்கூற்று மற்றும் செயற்பாட்டு வசனங்கள், Cauative வசனங்கள் உட்பட ஆங்கிலம் கதைத்தலுக்கு தேவையான அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்

காலம் : 15.06.2011 புதன்கிழமை
பிரிவுகள் : 8-10, 10-12, 2-4, 4-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

அனுமதி இலவசம்

கலந்துகொள்வோருக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay English 182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org